# தமிழரசு

மார்ச் 16- 31, 2000 ரூ. 5






நண்டலாறு தூர்வாருவதற்கு முன்னும்



நண்டலாறு தூர்வாரியதற்குப் பின்னும்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
பங்குனி

மார்ச் 16–31, 2000

மலர் : 31 இதழ் : 18

விலை ரூ.5

## இந்த இதழில்...


- ❖ நிதிநிலை அறிக்கை .................... 2
- ❖ திருவாரூர் மாவட்டத்தில் கணினி பயன்பாடு .................... 9
- ❖ திருவள்ளுவர் தமிழகத்தின் முதல் புரட்சியாளர் .................... 13
- ❖ தஞ்சை மாவட்டத்தில் கணினி புரட்சி .................... 17
- ❖ தமிழகச் சுற்றுலாத் தலங்கள் .................... 20
- ❖ அரை மனிதன் .................... 31
- ❖ எது வள்ளுவம்? .................... 36
- ❖ அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி .................... 39
- ❖ பத்தாம் வகுப்பு, +2 மாணவர்களுக்கு .................... 41


### திருக்குறள்

*அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.*

அறிவு இல்லாதவர்களுக்கு வேறு எது இருந்தாலும் பெருமையில்லை; அறிவு உள்ளவர்க்ளுக்கு வேறு எது இல்லாவிட்டாலும் சிறுமை இல்லை.

*- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# நிதிநிலை அறிக்கை 2000 - 2001

*2000–2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 24–3–2000 அன்று சட்டப் பேரவை முன்வைத்து* **முதலமைச்சர் கலைஞர்** *அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Gross State Domestic Product) 6.6 விழுக்காடாக இருக்கும். 'ஆட்டோ மொபைல்' போன்ற முக்கிய தொழில்களில் தேக்கநிலை அகன்று உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் தொழில் துறையின் (manufacturing sector) வளர்ச்சி, 13 விழுக்காடாக இருக்கும்.

வரும் நிதியாண்டில் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், ஊரகச் சாலைகள், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள தெருக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான மொத்த முதலீடு ரூ.1685 கோடியாக இருக்கும். தொலைத் தொடர்புத் துறையில் மொத்த முதலீடு ரூ.2285 கோடி ஆகவும், குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணி ஆகியவை உள்ளிட்ட நகர்ப்புற கட்டமைப்பு வசதித் திட்டங்களில் முதலீடு ரூ.1407 கோடியாகவும், மின் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு மின் வாரியத்தின் முதலீடு ரூ.1034 கோடியாகவும் இருக்கும். இத்துடன், மாநிலத்தின் மின் உற்பத்தியில் தனியார் துறையினர் ரூ.1332 கோடி அளவுக்கு முதலீடு செய்வார்கள். வரும் நிதி ஆண்டில் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் ரூ.482 கோடி முதலீடு மத்திய அரசினால் செய்யப்படும்.

## உள்ளாட்சி அமைப்புகள்

மாநில அரசின் வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.845 கோடி வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் இத்தொகை ரூ.1036 கோடியாக உயர்த்தப்படும். இதுதவிர, கேளிக்கை வரியில் 90 விழுக்காடு பங்காக ரூ.78 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். மாநில அரசின் பல்வேறு மானியங்கள், வரி வருவாய்ப் பங்கீடு மற்றும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு, வரும் நிதியாண்டில் மொத்தம் ரூ.2401 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.




ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ஆண்டுத் திட்டத்தையும், ஐந்து ஆண்டுத் திட்டத்தையும் அடுத்த ஆண்டு முதல் தயாரித்து வழங்கிடும் வகையில் மாவட்ட திட்டக் குழுக்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வந்த இத்திட்டக் குழுக்கள், இனி மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் செயல்படும். இக்குழுக்கள் இயங்குவதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டிலும் வரும் நிதியாண்டிலுமாக 11,600 கி.மீ. கிராமச் சாலைகளை தார்சாலைகளாகவும், 5,000 கி.மீ. தெருக்களை சிமெண்ட் வீதிகளாக்கவும் சுமார் ரூ.900 கோடி செலவிடப்படும். நடப்பு நிதியாண்டில் 3,600 கி.மீ. தார்சாலை அமைக்கும் பணியும், 2,800 கி.மீ. சிமெண்ட் வீதிகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பணி வரும் நிதியாண்டில் நிறைவுபெறும்.

பொது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள உழவர் சந்தைகளில் தாங்கள் விளைவித்த காய்கறிகளை உழவர்கள் நேரடியாக நியாய விலையில் விற்பதைப் போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான மையங்களை அமைத்துத் தர இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய விற்பனை மையங்களை எல்லா

மாவட்டங்களிலும் ஏற்படுத்தவும், கிராமப்புறப் பொருட்களுக்கு "பூமாலை" என்னும் வணிகச் சின்னம் உருவாக்கி, அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் ரூ.14.60 கோடி வரும் நிதியாண்டில் செலவிடப்படும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 634 கிராம ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.518 கோடி மதிப்பில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிராமப்புற வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளோம். வரும் நிதியாண்டில் 210 கிராமங்களில் இதனை ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல் படுத்திட ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டம் மக்களிடையே பெற்றுள்ள நல்ல வரவேற்பின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் ரூ.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பொதுமக்களுடைய பங்கேற்பு அதிகரிக்கும் போது, அதற்கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

ஆதிதிராவிட மக்களுக்காவும் மற்றும் ஏழை எளிய மக்களுக்காகவும் இந்த அரசு தொடங்கிய இலவச கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ், சென்ற நான்கு ஆண்டுகளில் 2 இலட்சத்து 84 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வரும்நிதி ஆண்டில் மேலும் 31,000 வீடுகள் ரூ.99 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

கல்வி, தகவல், பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு துப்புரவு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை மாவட்ட அளவில் ஓர் இயக்கமாக நடத்திடத் திட்டமிட்டு இந்த நிதியாண்டில் 4 மாவட்டங்களிலும், வரும் நிதியாண்டில் மேலும் 4 மாவட்டங்களிலும் "ஊரகத் தூய்மை இயக்கம்" (Rural Sanitation Campaign) என்ற பெயரில் ரூ.12 கோடி செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

### நிர்வாக சீரமைப்பு

பத்திரப் பதிவுத் துறையில் பொதுமக்களுக்குப் பயனுள்ள பல வசதிகள் விரைவில் கிடைத்திடும் வகையில் இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இந்த வசதி மற்ற பதிவு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் வில்லங்கச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ் போன்றவற்றை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும்.

அனைத்து மாவட்ட வளர்ச்சி முகமைகளும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்பட்டு, திட்டப் பணிகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் கணினி மயமாக்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மற்ற மாவட்டங்களில் 52 ஒன்றியங் களில் கணினி மயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து ஒன்றியங்களும் அடுத்த இரண் டாண்டுகளில் கணினி மயமாக்கப்படும்.

**வெள்ளை அறிக்கை :** மாநில அரசுப் பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இட ஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன் மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்.

வரும் நிதியாண்டில் 6000 பள்ளி ஆசிரியர்களும், காவலர்கள் உள்ளிட்ட சுமார் 4000 சீருடைப் பணியாளர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு நியமிக்கப்படுவார்கள்.

### ஊரகக்குடிநீர் திட்டம்

மாநிலத்தில் ஊரகக் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக நடப்பு நிதியாண்டின் ஒதுக்கீடான ரூ.450 கோடி என்பது, வரும் நிதியாண்டில் ரூ.500 கோடியாக உயர்த்தப் படுகிறது...

ஊரகப் பகுதிகளில் அனை வருக்கும் முதற் கட்டமாக, நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு கொள்கை வகுத்தது. 1996-ஆம் ஆண்டு ஏறக்குறைய 32,000 குடியிருப்புகள் அந்த நிலையை எய்தாமல் இருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.960 கோடி செலவில் பெருமளவில் ஊரகக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றிய தால், இதுவரை 21,000 குடியிருப்புகளுக்குப் போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் எஞ்சிய குடியிருப்புகளிலும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

### பொது விநியோகம்

நியாய விலைக் கடைகளில் பொருள்களை வாங்குவோரில் மகளிரே அதிகமாக உள்ளதாலும், மகளிரே நடத்தும் கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும் மகளிர் நடத்தும் நியாயவிலைக்



கடைகளுக்கு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. மாநிலத்தில் தற்போது 210 நியாய விலைக் கடைகள் மகளிரால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இதனை அதிகரிக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

### வேளாண்மை

தரிசு நில மேம்பாடு, அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. முதலமைச்சர் தலைமையில் தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் (Wasteland Development Authority) ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டில் ரூ.5.56 கோடி செலவில், பத்து மாவட்டங்களில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்களில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முதன் முறையாக முந்திரி, வேம்பு, பழச்செடிகள் போன்றவை அங்கே பயிரிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், மேலும் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில், ஏறத்தாழ 25 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் இதுவரை மொத்தம் 32 உழவர் சந்தைகள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த 32 உழவர் சந்தைகளில் 23-3-2000 தேதி வரை ரூ.15 கோடி மதிப்பிற்கு 2 கோடி 46 இலட்சம் கிலோ காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. மீதமுள்ள 68 உழவர் சந்தைகள் வரும் நிதியாண்டிலேயே துவக்கப்படும்.

பலவகை தரிசு நிலங்களை பயன்படுத்தவும், மண் அரிப்பினைத் தடுக்கவும், கடல் ஓரங்களில் காற்றுத் தடை ஏற்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் முந்திரி விவசாயம் பெரிதும் உதவுகிறது. முந்திரி சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், முந்திரி சாகுபடிக்கு ஏற்ற அரசுக்குச் சொந்தமான தரிசு நிலப்பரப்பினைத் தேர்வு செய்து, அவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் முந்திரி சாகுபடி செய்ய முன் வருவோருக்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக் கைகள் மேற் கொள்ளப்படும்.



பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங் களை நவீனப் படுத்திடவும், கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பாசனத்திறன் அதிகரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அடவிநயினார், கொடுமுடியாறு, நம்பியாறு, வடக்கு பச்சையாறு, கிருதுமால் அணைக்கட்டு, மொரதானா திட்டம், ராஜாத் தோப்புகானாறு திட்டம், பொய்கையாறு திட்டம், சோத்துப்பாறை திட்டம் ஆகிய 9 பாசனத் திட்டங்களை விரைந்து முடிக்கவும் உலக வங்கி உதவியுடன் பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.763 கோடி மதிப்பீட்டில் 268 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ.218 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்கவும், அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் முதலமைச்சரை தலைவராகவும் வேளாண்மைத்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மாவட்டங்களில் வேளாண்மை விற்பனை குழுக்களின் மூலம் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வரும் விவசாயிகளுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

30.6.99-க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30.6.2000-க்குள் வட்டியுடன் கடனை செலுத்தும் சிறிய, பெரிய, அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மேலும், திருப்பிச் செலுத்தப்படும் நடப்பு கடன் தொகை வட்டியில் கடந்த ஆண்டு 6.25 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கெனவே முழு கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இத்திட்டத்தால் சுமார் 10 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) ரத்து செய்யப்படும்.

தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளின் பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேசப்படும்.

### மீனவர் நலன்

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் இதுவரை 16,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு




அவற்றுள் 11,500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4,500 வீடுகள் கட்டும் பணி விரைவில் முடிவடையும். வரும் நிதியாண்டில் மேலும் 4000 வீடுகள் ரூ.14.80 கோடி செலவில் கட்டப்படும். ஆக, 1996-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட வண்ணம், மீனவர்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் 20,000 வீடுகள் கட்டும் திட்டம் வரும் நிதியாண்டில் நிறைவுறும்.

மீனவர்கள், மீன்களை விற்பதற்குப்படும் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், 'மீனவர் அங்காடி' தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும். நவீன வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும். மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டு மொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக்கூடமும் (Auction Hall) உலர்களமும் (Drying Yard) அமைத்துத் தரப்படும்.

### கால்நடைப் பாதுகாப்பு

கால்நடைகளின் பாதுகாப்பு, இனவிருத்தி ஆகியவற்றை அதிகரிக்கும் வகையில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தொடங்கப்பட்ட இரண்டு மாதங்களில் 22-3-2000 வரை 600 முகாம்கள் நடத்தப்பட்டு 20 இலட்சத்து 88 ஆயிரம் கால்நடைகள் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளன.

தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம் 1997-98-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 1999-ஆம் ஆண்டு இறுதி வரை சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலங்களில் வனவளர்ப்புப் பணிகள் ரூபாய் 211 கோடி மதிப்பில் முடிக்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் 200 கிராமங்களில் ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ரூ.109 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### சாலைகள்

ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி யில்லாமல் இருந்த 301 கிராமங் களுக்கு நடப்பாண்டில் இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு இப்பணி முடிக்கப்பட்டு, தமிழகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை நாம் எய்தியுள் ளோம். அடுத்த கட்டமாக, 500 முதல் 1000 வரையிலான மக்கள் தொகை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத 340 கிராமங்களுக்கு நடப்பாண்டில், சுமார் ரூ.123 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில், மேலும் 140 கிராமங்களுக்கு சுமார் ரூ.90 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்.

சாலை மேம்பாட்டுக்காக தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (Rural Infrastructure Development Fund) மூலமாக இதுவரை ரூ.701 கோடி மதிப்பீட்டில் 2865 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், இதுவரை 2062 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மேலும் 803 பணிகள் முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் ரூ.231 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இதர மாவட்டச் சாலைகள் என்ற வகையைச் சேர்ந்த 4290 கிலோ மீட்டர் முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.159 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகத் தொடரும் வகையில், வரும் நிதியாண்டில் 8235 கிலோ மீட்டர் இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

### தொழில் வளர்ச்சி

**கடலூரில் தொழிற்பூங்கா :** கடலூர் அருகே சுமார் 950 ஏக்கர் பரப்பளவில் இந்த ஆண்டு தொழிற்பூங்கா (Industrial Park) உருவாக்கும் பணி துவங்கப்படும்.

**ஆடை தயாரிக்கும் பூங்கா :** (Garment Park) : சென்னைக்கு அருகே 200 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி வளர்ச்சி மையம் ஒன்று ஆடை தயாரிப்பதற்கென்றே உருவாக்கப்படும். இத்தகைய தொழிற்கூடங்கள் பல நூறு பேருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்.

**மலர்ப் பூங்கா** (Floriculture Park) : ஓசூரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நவீன மலர்ப் பூங்கா 200 ஏக்கர் பரப்பளவில் துவங்கப்படும். இதில் 125 ஏக்கர் பரப்பளவில் ரோஜாச் செடிகள் பயிரிடப்பட்டு, கிளிப்பிங்ஸ் செய்யப்பட்டு, அம்மலர்கள் தொடர்ந்து குளிர்சாதனப் பெட்டி களில் பாதுகாக்கப்பட்டு, பெங்களூர் மற்றும் சென்னை விமான நிலையங்களிலிருந்து ஐரோப்பா, கிழக்காசிய நாடுகள், ஜப்பான், ஆஸ்திரேலியா, அரேபியா நாடுகள் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

சென்னைக்கு அருகே எண்ணூரில் சுமார் ரூ.6000 கோடி செலவில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பெரியதோர் ஜப்பானிய கம்பெனியான மிட்சூயி (Mitsui) உடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

### உயிரியல் தொழில்நுட்பம்

உயிரியல் தொழில் நுட்பம் (Bio-technology) அதிக வேலை வாய்ப்பை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய தொழில் நுட்பமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னைக்கு அருகே கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகின்றது. இது அடுத்த சில மாதங்களில் செயல்பட தொடங்கும்.

### தகவல் தொழில்நுட்பம்

பல ஆண்டுகளை வீணடித்து விட்டு, இந்தியத் தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் (Indian Information Technology Revolution) தாமதமாக நுழைந்திட்ட தமிழ்நாடு, கழக அரசு உருவான கடந்த நான்காண்டுகளில், ஹார்வர்டு பல்கலைக் கழக அறிக்கை குறிப்பிடுவது போல "குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை" (Remarkable Progress) அடைந்திருக்கின்றது. தமிழ்நாட்டிலிருந்து குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியே இல்லை என்கிற நிலையிலிருந்து 1998-99-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான மென்பொருட்களின் மதிப்பு ரூ.1,246 கோடி என்பதும், இது 1997-98-ஆம் ஆண்டு ஏற்றுமதி மதிப்பை விட 192 சதவிகிதம் அதிகம் என்பதும் நாம் பெருமைப்படும் சாதனையாகும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் இணைந்து ரூ.338 கோடி செலவில், 12 இலட்சம் சதுர அடி பரப்பில் சென்னை தரமணியில் உருவாக்கி வரும் டைடல் (TIDEL) மென்பொருள் தொழிற் பூங்கா முடிவடையும் தருவாயில் உள்ளது.

### இளைஞர் நலன்

இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும் அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" எனும் சங்க காலப் பாடலை நினைவு கூறும் வகையில் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்கென தனித்துறையை நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே அறிவியல் முனைப்பு, மத, சமூக நல்லிணக்கம், நல்லொழுக்கம் மற்றும் சமுதாய விழிப்புணர்வை மேம்படுத்தவும், அவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் திட்டங்கள் செயலாக்கப்படும்.

### வருமுன் காப்போம்

மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக மருத்துவர்கள் கிராமங்களை நாடிச் சென்று முகாம் இட்டு ஏழை எளியோர்க்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் செய்கிற வருமுன் காப்போம் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. தொடங்கப் பட்ட நான்கு மாதங்களில் 21.3.2000 தேதி வரை 1634 முகாம்களில் 17.4 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். இதில் சுமார் 88 விழுக்காடு பயனாளிகள் கூலி வேலை செய்யும் ஏழை எளியோர்கள் என்றும், இதில் 40 விழுக்காடு பயனாளிகள் பெண்கள் என்றும், 26 விழுக்காடு சிறார்கள் என்றும், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களே இம்முகாம்களினால் பயனடைந்துள்ளனர் என்றும் இத்திட்டத்தினை ஆய்வு செய்ததில் தெரிய வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் பயன் பெறும் வகையில், தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.




### வாழ்ந்து காட்டுவோம்

பெண்களை சமூக பொருளாதாரத் துறைகளில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவதற்கு அவர்களை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, அவர்களுக்கேற்ற சுய வேலை வாய்ப்புப் பயிற்சியும், வசதிகளும் அளிக்கும் திட்டம் இந்த அரசால் 1989-90-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் மகளிர் அடைந்த பயன்களைக் கருத்தில் கொண்டு, 1997-98-ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தை செயல்படுத்தி இந்த சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்த முனைந்துள்ளோம். தமிழ்நாடு மகளிர் திட்டம் தமிழகத்தில் சென்னைப் பெருநகரம் நீங்கலாக ஏனைய 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 24,000 சுய உதவி குழுக்களில் 4 இலட்சத்து 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர்

உறுப்பினர்களாகச் சேர்ந்து, ரூபாய் 32 கோடிக்கும் அதிகமாக சேமித்துள்ளதோடு, இந்தக் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக ரூபாய் 97 கோடிக்கும் மேல் கடன் உதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சேமிப்பு திட்டம், மகளிர் தம் அவசர அவசிய செலவுகளுக்காக தனியார் கடன் அளிப்பவர்களை நாடி அதிக வட்டியில் கடன் பெறும் இக்கட்டான நிலைமைக்கு ஆளாகாமல் பாதுகாக்கிறது.

இந்த மகளிர் திட்டங்களையும் மற்றும் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், விதவைகள் மறுமணத் திட்டம், கலப்புமணத் திட்டம் என்றுள்ள மகளிர் திட்டங்களையும், அவை தனித் தனி துறைகளின் மூலம் நடைமுறைப் படுத்தப்படினும் அனைத்தையும் ஒருங்கிணைத்து (Co-ordinate) முதலமைச்சர் செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயல்படுத்தப் படும். இந்த ஒருங்கிணைப்பு திட்டம் "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இயங்கும். இப்பெரும் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் மொத்த ஒதுக்கீடு ரூ.120 கோடியாக இருக்கும்.

### பழங்குடியினர் நலன்

நமது மாநிலத்தில் சுமார் ஆறு இலட்சம் பழங்குடியினர் வாழ் கின்றனர். இதுவரை அவர்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்ககம் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. பழங்குடியினர் நலனைக் காப்பதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருப்பதாலும், அவர்களின் நலத்திட்டங்களை முனைப்பாக செயல்படுத்த வேண்டியும், பழங்குடியினர் நலனுக்கென ஒரு தனி இயக்ககம் (Directorate) உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.




### சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஆதரவற்ற முதியோர், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு, வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 என்பது வரும் நிதி ஆண்டு முதல் ரூபாய் 200 ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்த ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை வரம்பற்றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

### நெசவாளர் நலன்

60 வயதை அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இந்த அரசு வழங்கத் தொடங்கிய காப்பீட்டுத் தொகை நடப்பு நிதியாண்டில் ரூ.35,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, வரும் நிதி ஆண்டில் இந்தத் தொகை ரூ.50,000 ஆக உயர்த்தப்படுகிறது. 60 வயதை தாண்டிய நெசவாளர்கள் பயன் பெறும்வகையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.150 என்பது ரூ.200 ஆக உயர்த்தப் படுகிறது.

### பத்திரிகையாளர் நலன்

1996-97-ஆம் ஆண்டு பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தப்பட்டது. பின், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அவர்களது ஓய்வூதியம் ரூ.1500 ஆக உயர்த்தப் பட்டது. தற்போது அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்கள் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2000 ஆக உயர்த்தி வழங்க முடிவெடுக்கப் பட்டுள்ளது. மேலும், பணிபுரியும் போது பத்திரிக்கை யாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.40,000 விருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி இனி வழங்கப்படும்.

### வீட்டு வசதி

மாநகராட்சிப் பகுதிகளில் ஆட்சேபணை இல்லாத இடங்களில் வாழ்கிற 50,000 குடும்பங்களுக்கு தரமான, தீ பற்றாத கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள் கட்டப்படும் என்று சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். அதன்படி ரூ.15 கோடி செலவில் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடரப் பட்டு, ரூ.39 கோடி மதிப்பீட்டில், 26 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் படும்.

### தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்

தென்மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவ




ராகவும், திரு ஆர்.ஏ.சீத்தாராமதாஸ் அவர்களை துணைத் தலைவராகவும், திரு ஏ.வெங்கட்டராமன் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு தனது இடைக்கால அறிக்கையை சென்ற மாதம் 28-ஆம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையின் பரிந்துரைகளையொட்டி பின்வரும் திட்டங்கள் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்,

இராமாதபுரம், விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள்.

நபார்டு உதவியோடு குளங்கள் மற்றும் கண்மாய்கள் புனரமைப்புத் திட்டம்; ஒவ்வொரு கண்மாய்க்கும் பயன்படுத்துவோர் குழு அமைத்து அவற்றின் மூலம் கண்மாய்களைப் பராமரித்தல்.

தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியை மேம்படுத்த சிறப்புத் திட்டம்

தென்மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் வசதிகளை உருவாக்கி அதன் மூலம் வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குதல், மதுரை, திருநெல் வேலி ஆகிய இடங்களில் இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா (Software Technology Park of India) மூலமாக சர்வதேச இணைப்புகளை ஏற்படுத்துதல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக இரப்பர் மற்றும் இரப்பர் மர அடிப்படையிலான பொருட்களை உற்பத்தி செய்ய ரூ.14 கோடி முதலீட்டில் இரப்பர் தொழிற்பூங்கா ஏற்படுத்துதல்.

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு நாங்குநேரியில் 2000 ஏக்கர் பரப்பில் ஹை-டெக் தொழில்நுட்பப் பூங்கா.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகத்தினை மேம்பாடு செய்வது தொடர்பாக பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையை சுமார் ரூ.4.6 கோடி செலவில் மலேசிய அரசு தயாரித்து வருகிறது. இன்னும் சில மாதங்களில் ஆய்வு அறிக்கை பெற்ற பின் குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

மொசைக் கற்கள், செராமிக் சுவர் மற்றும் தள ஓடுகள் மற்றும் பளிங்குக் கற்கள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 3ல் உள்ள செராமிக் துப்புரவுக் கலன்கள், வரிசை எண் 5ல் உள்ள இஸ்திரிப்பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீடு மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மற்றும் வரிசை எண் 7ல் உள்ள அனைத்துவகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

முதலாம் அட்டவணைப் பிரிவு E வரிசை எண் 6ல் உள்ள அனைத்து வகை மின் சக்தி பொருட்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

உருளைகள் (Bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord) அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச் சின்னமில்லாத காய்கறி வத்தல்கள், தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி அறவே நீக்கப்படுகிறது.

அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டி லிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

பேஜர்கள், செராமிக் கற்கள் (Ceramic Bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (Bleach Liquid) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்படுகிறது. ✶

☐ செ. உமாசங்கர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
திருவாரூர் மாவட்டம்.

# திருவாரூர் மாவட்டத்தில் கணினியின் பயன்பாடு

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அரசுப் பணிகளை விரைவாக செய்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள நல்ல வளர்ச்சி என்று கூறினால் அது மிகையாகாது. அரசுத் துறையில் மிக அதிக அளவு உள்ள தகவல்களையும் (database) இந்த தகவல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மற்றும் பரிமாற்றங்களை தற்போது மனித ஆற்றலின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் ஒரே பணியினை திரும்ப திரும்ப அரசு அலுவலகங்களில் கைகளினால் எழுத வேண்டியது உள்ளது. இதனால் கால விரயம் ஏற்படுவதுடன் பொது மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவதிலும் சுணக்கம் ஏற்படுகின்றது. மேலும் திட்டங்கள் முழுமையாக சென்றடையாத நிலையும் காணப்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு அரசு இயந்திரத்தின் மீது ஒரு வித அவநம்பிக்கை ஏற்பட வாய்ப்பு உள்ளது. தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் பல்வேறு சுவைகளை பொதுமக்கள் தற்போது நுகரத் தொடங்கி உள்ளார்கள். Satelite டி.வி. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இன்று Internet மூலம் பொருட்களை வாங்கவோ விற்கவோ முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இத்தனை சுவைகளைக் கண்ட பொது மக்கள் அரசுப் பணியில் மட்டும் தகவல் தொழில் நுட்பத்தினை சுவைக்காமல் இருப்பது அவர்களுக்கு ஒரு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது. இதனை தீர்க்க வேண்டியது நியாயமான ஒன்றாகும். அரசுப் பணிகளை கணினி மயப்படுத்துவது என்பது அரசு அலுவலகங்களில் எழுதப்படும் கடிதங்களை கணினி வாயிலாக அச்சிடுவது (Print Out) என்பது பொருளல்ல. உண்மையான கணினி மயப்படுத்துவது என்பது அரசு அலுவலகங்களில் உள்ள தகவல்களை கணினிக் கோப்புகளாக மாற்றி இந்த கணினிக் கோப்புகளை ஒவ்வொரு நாளும் புதுப்பிப்பதோடு மட்டுமின்றி மென்மேலும் கால மாற்றத்திற்கு ஏற்ப கூட்டி கழித்து மாற்றி அமைத்திட வேண்டியதொன்றாகும். இவ்வாறு மாற்றங்கள் செய்ய இயலாத கணினி தகவல்களால் பயனில்லாமல் போய்விடும். இது போன்று கூட்டுதல், கழித்தல் போன்ற மாற்றங்கள் செய்யும் பணிக்கு தகுதியான மென்பொருள் தயாரித்து வழங்க வேண்டியது அவசியமாகும். அரசுப் பணிகளில் பெரும்பாலான பகுதி தகவல்களைக் கொண்டதாகும். தகவல்களை (data base) கணினி மயப்படுத்துவதே உண்மையான கணினி மயமாக்கலாகும். அப்படி இல்லை என்றால் அரசு அலுவலகத்தில் பொருத்தப்படும் கணினி என்பது ஒரு வேடிக்கை பொருள் என்றே பொருள் கொள்ள வேண்டும். அதன் வழியே கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தால் அது பொதுமக்களுக்கும் பயன் தராது, அரசு அலுவலர்களுக்கும் பயன் தராது. எனவே அரசுத் துறையினை கணினி மயமாக்குவது என்பதை எடுத்துக் கொள்ளும் போது முதன் முதலில் கவனிக்க வேண்டியது இப்பணிகளில் தகவல் கோப்புகள் (Data base content) எவ்வளவு என்பதை கணிக்க வேண்டும். குறைந்த பட்சம் 80% அளவிற்காவது தகவல் கோப்புகள், இருந்தால் அது பொதுமக்களுக்கு நன்மை உடையதாக அமையும்.



அரசுப் பணிகளை கணினி மயமாக்கும் போது இன்னொரு முக்கிய அம்சம்

என்னவென்றால் இக்கணினிக் கோப்புகள் எந்த மொழியில் உள்ளது என்பதாகும். கணினிக் கோப்புகளை முடிந்தவரையில் எந்த மாநிலத் திற்காக உருவாக்கப்படுகிறதோ அந்த மாநில மொழியில், இருப்பது அவசியமாகும். தமிழ் நாட்டில் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டியது அவசியமாகும். கணினிக் கோப்புகள் மட்டும் அல்லாமல் கணினி மென்பொருளும் தமிழில் தோன்று மாறு அமைத்திட வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் இதனைக் கருத்தில் கொண்டு கணினி மென்பொருள் அனைத்தும் ஆங்கிலம் மற்றும் தமிழில் மாறி மாறி தோன்றும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கணினிக் கோப்புகள் அனைத்தும் தமிழிலேயே வடிவமைக்கப்படுகின்றன.

கணினியில் எந்த ஒரு பணியைச் செய்தாலும் அதனை இரண்டு முறைகளில் செயல் படுத்தலாம். ஒன்று Online முறையில் செயல்படுத்துவது மற்றொன்று Back Office முறையில் செயல்படுத்துவது. Online முறையில் கோப்புகள் அனைத்தும் கணினியிலேயே இருக்கும். கோப்புகள் எதுவும் இருந்தாலும் மிகவும் சொற்ப அளவே இருக்கும். பெரும்பாலும் Online முறையில் பெறப்படும் கணினிக் கோப்புகள் கணினி வாயிலாகவே எடுக்கப்பட்ட அறிக்கைகளாகவே இருக்குமே தவிர காகிதக் கோப்புகளாக இருப்பது மிக மிக அரிது. இவ்வாறு கணினியிலேயே முழுத்தகவல்களும் பரிமாற்றம் செய்யப்படுவதினால் அரசுப் பணிகள் மேற்கொள்ளும் போது அப்பணி மிக இலகுவாகின்றது. எந்த ஒரு முடிவிற்கு வர வேண்டும் என்றாலும் அதனை Online முறையில் கணினி வாயிலாகவே எடுத்து விடலாம். இது Online முறையின் மிகப் பெரிய நன்மையாகும். இதனால் காலதாமதம் முழுவதுமாக தவிர்க்கப்படும். Online முறையில் ஒரு முடிவு எடுக்கும் பொழுது அதற்கான கீழ் அலுவலர்களின் ஆலோசனை களை பெற வேண்டும் என்பது எழுவதில்லை. உதாரணமாக 30 நாட்களில் செய்து முடிக்கக்கூடிய பணியினை 3 நிமிடங்களில் Online முறையில் கணினியில் செய்து விடலாம். Online கணினி நிர்வாகம் என்பது கணினி மயத்தின் உச்சநிலை நிர்வாகம் என்று கூட கூறலாம். ஏன் என்றால் Online கணினி மயமாக்குவதில் நிறைய சிறப்பம் சங்களை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

திருவாரூர் மாவட்டத்தை Online முறையில் நிர்வாகம் செய்திட ஏதுவாக மென்பொருள்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இதனால் திருவாரூர் மாவட்டத்தில் பெற்ற அனுபவம் மற்றவர்களுக்கும் மிக்க பயனுள்ளதாக அமைந்திட வாய்ப்புள்ளது. உதாரண மாக முதியோர் உதவித் திட்டம் Online முறையில் கடந்த ஒன்பது மாதங்களாக திருவாரூர் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் அளவில் நடைபெற்று வருகின்றது. இந்த Online முறையில் முதியோர் உதவித் தொகை நிர்வகிக்கும் பணி மூலம் வழங்கும் ஒப்பற்ற அனுபவம் திருவாரூர் மாவட்டத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ஏற்கனவே நிர்வகிக்கப் பட்டு வந்த காகிதக் கோப்புகள் முறை முற்றிலும் மாற்றப்பட்டு முழுவதும் கணினிக் கோப்புகள் முறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு வெகு விரைவில் உத்தரவுகள் கிடைக்கப் பெறுகின்றது.

> மாணவர்களுக்கு தன் தாய்மொழியில்
> எழுதவும் படிக்கவும்
> முதலில் கற்பியுங்கள்; அது
> அவர்கள் வள வாழ்விற்கு
> வழிவகுக்கும்.
>
> **– எச்.ஜி.வேல்ஸ்**

இதன் முக்கிய அம்சங்கள் என்னவென்றால் வருவாய் ஆய்வர் விசாரணை தவிர வேறு அனைத்துப் பணிகளையும் Online முறையில் தானியியங்கி முறையில் செயல் படுகின்றன. மனுதாரர் எந்த நேரமும் மனுவின் நிலை என்னவென்பதை தெரிந்து கொள்ளலாம். திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கான முதியோர் உதவித் தொகை கோரும் மனுதாரர்களின் விண்ணப்பங்கள் 15 தினங்களுக்கு மேல் நிலுவையில் உள்ளதா என்பதை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமாக தெரிந்து கொள்ள Network முறை செயல் படுத்தப்பட்டு வருகிறது. பணவிடை அனைத்தும் வட்ட அலுவலகங் களுக்கும் மூன்று அல்லது 4 மணி நேரத்திற்குள் கணினி மூலம் அச்சிடப்பட்டு விடுகின்றது. இதனால் பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் 4 அல்லது 5 தேதிக்குள்ளாக பணவிடையினை பெறுகின்றனர். ஒரு பயனாளி இறந்துவிட்டால் அவருக் கான பணவிடை நிறுத்தத் தினை Online முறையில் செய்திட வசதியுள்ளது. அதே போன்று ஒருவருக்குப் புதிதாக முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டால் அவருக்கு தானியியங்கி முறையில் பணவிடை அச்சிடவும் முகவரி மாற்றம் மற்றும் கணினிக் கோப்பில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ள வேண்டியிருந் தால் அதனை எளிதாக செய்திடவும் வசதி உள்ளது.

உதாரணமாக விதவை களுக்கான ஓய்வூதியம் பெறும் மனுதாரர்கள் வயது முதிர்ச்சியின் காரணமாக முதியோர் உதவித் தொகை பெறும் திட்டத்திற்கு மாற்றம் செய்வதற்கும் தானியியங்கி முறையில் வசதிகள் செய்யப் பட்டுள்ளது. இந்த மென்பொருள் முழுவதும் தமிழிலேயே அனைத்து தர நிர்ணய முறைகளுடன் தயாரிக்கப் பட்டுள்ளது என்பது இதன் கூடுதல் சிறப்பு அம்சமாகும்.

வட்ட அலுவலகங்களைத் தானி யியங்கி முறையில் செயல்படுத்த Taluk Automation Software (TAS) என்ற மென்பொருள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த மென் பொருள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.12.1999 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த மென்பொருள் தற்போது திருவாரூர் மாவட்டத்திலுள்ள 7 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்

பட்டு வருகின்றது. சிறப்பான தரக்கட்டுப்பாடுகளுடன் 361 கிராமக் கணக்குகள் Online முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 214 கிராமத்திற்கான கணக்குகள் ஓரிரு வாரங்களில் முழுமையாக இக்கணினி மென்பொருளுடன் இணைக்கப்படும்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளில் பட்டா மாறுதல் என்பது முக்கியமான பணியாகும். இதுவரையில் பட்டா மாற்றம் செய்வதற்கு அதற்கான விண்ணப்பங்கள் முதலில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களது கருத்துரையினைப் பெற்றபின் வட்ட அலுவலகங்களிலுள்ள பதிவேடுகளில் மாற்றம் செய்யப்பட்டு வந்தது. இதனை மாற்றி தற்போது பட்டா மாறுதல் உத்தரவு கணினிக் கோப்புகள் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. பொதுமக்கள் எவரேனும் பட்டா மாறுதல் கோரி மனு செய்தால் முதலில் அம்மனு நேரடியாக கணினிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

கணினியில் நிலத்தினை விற்றவரின் பெயரும் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்து கொண்டவரின் பெயரும் அரசு ஆவணங்களில் ஒத்து இருந்தால் ஒருசில நிமிடங்களுக்குள்ளாக பட்டா மாற்ற உத்தரவு கணினிக் கோப்புகள் மூலமாக வழங்கப்படுகிறது. இந்த பட்டா மாற்ற உத்தரவினை அப்பொழுதே ரூ.20 கொடுத்து மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம். பட்டா மாற்ற உத்தரவு தானியியங்கி முறையில் லேசர் பிரிண்ட் மூலம் அச்சிடப்படுகின்றது. இந்த கணினி சேவைக்குத்தான் மனுதாரர் ரூ.20 வழங்க வேண்டி உள்ளது. ஆயினும் பட்டா மாற்றம் கோரி பொதுமக்கள் மனு செய்து கொண்டு மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை மாறி மனு செய்து கொண்ட மறு நிமிடமே ஆவணங்களைச் சரி பார்த்து கணினியில் பட்டா மாற்ற உத்தரவினை பெற்றுக் கொள்ளக் கூடிய இந்த புரட்சிகரமான நிலையினை இந்த Online கணினி நிர்வாக முறை திருவாரூர் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பட்டா மாற்ற உத்தரவினைத் தவிர பட்டா நகலினை எந்த நேரமும் பொது மக்கள் ரூ.10 செலுத்தி லேசர் பிரிண்ட் மூலமாக தொடர்புடைய வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக லேசர் பிரிண்டர் அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது.




பட்டா மாற்றம் செய்யும் போது பதிவு ஆவணங்களில் நிலத்தினை விற்பனை செய்பவரின் பெயரும் அரசு ஆவணங்களில் உள்ள பெயரும் மாறுபட்டால் அவ்வாறான விண்ணப்பங்கள் விசாரணைக்காக கீழ் அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறு அனுப்பப்படும் நடவடிக்கைகளையும் தானியியங்கி முறையில் கணினி மூலம் அச்சிட்டு அனுப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்குப் பிறகும் தானியியங்கி முறையில் உத்தரவுகளைப் பிறப்பித்து ஆணைகளை அச்சிடவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு மேற்கொள்ளுகின்ற போது நிலத்தினை வாங்குபவருக்கு ஏற்கெனவே அந்த கிராமத்தில் சொந்தமாக நிலங்கள் இருந்து அவரது பெயருக்கு பட்டா இருந்தால் அந்த எண்ணையும் பத்திரம் பதிவு செய்கின்ற பொழுதே அவரிடமிருந்து பெற்று வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பும் அறிக்கையோடு சேர்த்து அனுப்புமாறு திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலனுக்காக வட்டாட்சியர் அலுவலகங்களில் இது தொடர்பான அறிவிப்புப் பலகை ஒன்று அனைத்து விவரங்களையும் தெரிவிக்கும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலமாக அ-பதிவேடு, அடங்கல் மற்றும் பட்டா நகல்களை எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

வட்ட அலுவலகங்களில் மிக அதிக அளவு காகிதம் செலவிடப் படுவது சாகுபடி பற்றிய விவரங்களை பதிந்து கொள்வதற்குத்தான். இதனால்

சாகுபடி மற்றும் அறுவடை விவரங்கள் முழுமையாக கணினி மயப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு முழுவதும் நடைபெறும் சாகுபடி மற்றும் அறுவடை விவரங்களை கிராம நிர்வாக அலுவலர்கள் தத்தம் கிராமங்களுக்கான கணினிக் கோப்புகளில் பதிவு செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்த உடன் அடங்கல் நகலில் சாகுபடி, அறுவடை மற்றும் புலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரிந்து கொள்ள இயலும். மேலும் அடங்கல் நகலினை பொதுமக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம். அடங்கல் நகலுக்காக விண்ணப்பம் செய்து கொண்டு நாட்கணக்கில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

அதோடு மட்டுமின்றி இந்த மென்பொருள் மூலம் வருடாந்திர கிராம ஜமாபந்தி கணக்குகளைக் கணினி மூலமே தானியியங்கி முறையில் செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பட்டா மாறுதல், நஞ்சை வஜா கணக்கு, சாகுபடி கணக்கு ஆகிய கணக்குகள் தானியியங்கி முறையில் உருவாக்கிட வசதி செய்யப் பட்டுள்ளது. இவற்றோடு சேர்த்து பி மெமோ, நிலவரி வசூல் ஆகிய கணக்குகள் கணினியிலேயே செயல்படுத்த வசதி செய்யப்பட்டுள்ள தினால் மிக முக்கிய கணக்கான 10 பகுதி 2 (10 Part-II) என்ற கணக்கும் தானியியங்கி முறையில் உருவாக்கிட வசதி செய்யப் பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமக் கணக்கு களையும் கணினி மூலம் இந்த ஆண்டு ஜமாபந்தி நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. உண்மையில் கூறப் போனால் திருவாரூர் மாவட்டத் திலுள்ள கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்திட அடுத்த பசலி ஆண்டு முதல் ஜமாபந்தி நடத்திட வேண்டிய அவசியம் ஏற்படாது என்ற நிலை தற்போது உருவாக்கப் பட்டுள்ளது. ஏனென்றால் கணினியில் உள்ளீடு செய்யப்படும் ஒவ்வொரு தகவலும் தானியியங்கி முறையில் தணிக்கை செய்யப்பட்ட பின்னரே உள்ளீடாக கணினியில் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு கணினி மென்பொருளில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது. எனவே விவரங்கள் அனைத்தும் முறையாக தணிக்கை செய்யப்பட்டு விடுவதால் மீண்டும் ஒரு முறை ஜமாபந்தி மூலம் தணிக்கை செய்திட வேண்டிய அவசியம் ஏற்படாது. இதனால் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பெரிய தலை வலியாக இருக்கும் ஜமாபந்தி என்ற முறை இல்லாமலே போய்விடும் பிரகாசமான வாய்ப்பு உள்ளது. இது Online முறையில் கணினி நிர்வாகம் செய்வதன் மூலம் கிடைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய நன்மையாகும். இதன் அடுத்த பயன் என்னவென்றால் நூற்றுக்கணக்கான கிலோ கணக்கில் காகிதம் விரயமாவதை தடுப்பதும் ஆகும். நடப்பாண்டிலேயே புஞ்சை வஜா, நஞ்சை சாகுபடிக் கணக்கு, தண்ணீர் தீர்வை போன்ற கணக்குகளை கணினி மூலம் தயார் செய்து அவற்றை அச்சடிக்காமல் Adobe acrobat என்ற நிரந்தர கணினிக் கோப்புகளாக மாற்றி அதனை CD-Romகளில் பதிவு செய்து வட்டாட்சியர் அலுவலக வைப் பறையில் பாதுகாத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் காகிதம் மிச்சப்படுத்தப்படுவதுடன் கால விரயமாவதும் தடுக்கப்படும்.

> பழமை என்பதற்காக எல்லாவற்றையும் போற்றும் பழக்கத்தை மாற்றவேண்டும்.
>
> – பெர்னார்ட் ஷா

இதற்கடுத்தாற்போல் திருவாரூர் மாவட்டத்திலுள்ள நியாய விலைக் கடைகளை Optical Mark Reader என்ற முறையில் திருவாரூர் வட்டத்திலுள்ள 55 கடைகளை சோதனை அடிப்படையில் கணினி படுத்தப்பட்டு 1.10.1999 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு செயல் பட்டு வருகிறது.

இதன் மூலம் அங்காடி விற்பனை யாளரால் கொடுக்கப்படும் OMR விற்பனை ரசீது ஆனது OMR கருவியின் மூலம் கணினியில் உள்ளீடு செய்யப்பட்டு அங்காடிகளில் ஒதுக்கீட்டிற்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருந்தால் அதனை கண்டுபிடித்திட வசதி செய்யப் பட்டுள்ளது.

இந்த OMR பட்டியலின் மூலம் குடும்ப அட்டைதாரர்கள் முகவரிக்குச் சென்று தணிக்கை செய்து குடும்ப அட்டைகளில் அங்காடி விற்பனை யாளரால் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் சரிதானா என்று சோதனை செய்திட இயலும். 1.10.1999 முதல் 31.1.2000 வரை அங்காடி விற்பனையாளர்களால் செய்யப்பட்ட முறைகேடுகளை OMR பட்டியல் மூலம் கண்டு பிடித்து இதுவரையில் சுமார் 8 இலட்ச ரூபாய் அபராதமாக வசூலிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியா வசியப் பொருட்கள் முறையாக விநியோகம் செய்யப் படுகின்றதா என்பதைக் கண்காணிக்க முடிவதுடன் அங்காடி தினந் தோறும் திறக்கப்படுகின்றதா என்பதையும் அங்காடிகளிலுள்ள இருப்பு விவரங் களையும் துல்லியமாக தெரிந்து கொள்ள முடிகிறது.

திருமண உதவித் திட்டம் மற்றும் இதர உதவித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி முகமை மூலம் நடைபெறும் பணிகள் வேளாண் கூட்டுறவு வங்கி, கல்வி உதவித் தொகை, சிறு வணிகக்கடன் திட்டம், வட்டார போக்குவரத்து அலுவலகம், சாதி சான்றிதழ், அரசு மருத்துவமனை போன்றவைகளின் பணிகள் கணினி மயமாக்கப் பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு விரைவாக பயன்கள் கிடைக்கிறது. அத்துடன் கணினி மயமாக்கப் பட்டதால் மனுநீதி நாளில் பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக செயல்பட்டு குறைதீர்க்க முடிகிறது.

எனவே ஏராளமான நன்மைகளை இந்த கணினி மயமாக்கலால் திருவாரூர் மாவட்ட மக்கள் பெற்று வருகின்றனர்.

★ ★ ★

# திருவள்ளுவர்

## தமிழகத்தின் முதல் புரட்சியாளர்

உலக மக்கள் உயர்ந்த நெறியில் வாழ்ந்து இன்பம் பெறுவதற்காக வழிவகைகளை வகுத்துக் கூறியவர் திருவள்ளுவர். அவர் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அவருடைய ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா இன்று தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் அவரை என்றும் போற்றிப் புகழக் கடமைப்பட்டுள்ளனர். வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்றுள்ளோம் அன்றோ!

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியர் பிறமொழித் தாக்குதலால் தமிழ் அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தினார். திருவள்ளுவர், அயல் மக்கள் செல்வாக்கால் தமிழ்ப் பண்பாடு அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தினார். தமிழ் மக்களின் பழைய பண்பாட்டில் காணப்பட்ட நல்வாழ்வுக்குப் பொருந்தாதவைகளையும் களைந்தெறிய அறிவுரை கூறியுள்ளார்.

புரட்சி என்பது மக்கள் வாழ்வில் காணப்படும் பொருந்தாத மூட நம்பிக்கைக் கொள்கைகளை எதிர்த்துப் போர் முழக்கம் செய்து மாற்றி அமைக்க முயலுவதே ஆகும். பழமையைப் புரட்டிவிட்டு, அகற்றிவிட்டு - புதுமையைப் புகுத்துவதுதான் புரட்சி. புரட்சி என்றால் பூசலும் போரும், கொள்ளையும், கொலையும் தோன்றுமென்று கருதலாம். மேல்நாடுகளில் அவ்வாறுதான் புரட்சிகள் நடந்துள்ளன. ஆனால் திருவள்ளுவர் செய்துள்ளது எண்ணப் புரட்சியாகும். எண்ணமே செயலின் அடிப்படையாகும். அதனால் செயலின் தாய் எண்ணம் என்பர் மேனாட்டார்.

எண்ணம் திண்ணியதாக உருவானால் செயல்தானே தோன்றிவிடும். எண்ணம் தோன்றுமிடம் மனம். அம்மனம் தூய்மையாக இருக்க வேண்டுமென்று வள்ளுவர் கூறுவதே ஒரு புரட்சியாகும். மனம் தூய்மையாக இருத்தலே அறம் என்கின்றார். மனம் தூய்மையற்று என்ன நற்செயல்கள் செய்தாலும் அவை பயன்படா. வெறும் ஆர்ப்பரவ வேட்கைக்கு உரியனவாகிவிடும். மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்; ஆகுலநீர பிற என்பதை நோக்குமின்.

எவ்வகையினும் சாதியாலோ நிறத்தாலோ பொருளாலோ, வேறுபாடு அற்று வாழ்ந்த தமிழ் மக்களிடையே சாதி வேறுபாடுகள் புகத்தொடங்கின. அச்சாதி வேறுபாடுகள் இன்றும் அகன்றுவிடவில்லை. மக்களை அலைக்கழித்து வருகின்றன. வள்ளுவர் அன்றே பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார்.

பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுதல் பேதமை. ஒழுக்கத்தால் உயர்ந்தோரே நல்ல குடியில் பிறந்தோர் ஆவார். ஒழுக்கக்கேடர்களே இழிந்த பிறப்பினர்




ஆவார்கள். ஆதலின் ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் என்று இடித்துரைத்தார். ஒழுக்கத்தால் உயர்வுபடுத்தும் நெறி வெற்றி பெற்றிருக்குமேல், இன்று நாட்டில் பூசல்கள் தோன்றுமா? ஒழுக்கம்

• சி. இலக்குவனார்

உடையாரை ஒதுக்கிப் புறக்கணிப்பதனால் அன்றோ இன்று எங்கு நோக்கினும் பூசற் களமாகக் காணப்படுகின்றது. மக்களாட்சி வெற்றிபெற வேண்டுமென்றால் ஒழுக்க முடையோர் உயர்ந்தோராகக் கருதப்பட்டு உயர்வாகப் போற்றப்படுதல் வேண்டும்.

மக்களில் கல்விப்பேறு அடைதற் குரியவர் சிலரே என்றனர். சில நாடுகளில் படிப்பவர் வேறு உழைப்பவர் வேறு என்று வகைப்படுத்தினர். உயர்ந்தோரே படித்தல் வேண்டும் உழைப்பவர் படித்தல் வேண்டாம் என்றும் விதியாக்கினார். ஆனால் வள்ளுவர் கூறியது என்ன? கல்வி அனைவர்க்கும் பொது; கண்கள் அனைவர்க்கும் இயல்பாக உரியன; அது போலக் கல்வியும் எல்லார்க்கும்



உரியதாகும். கண்களோடு பிறத்தல் போலக் கல்வியோடு வளர்தல் வேண்டும். கண்ணில்லாது வாழ முடியாதது போல் கல்வியில்லாதும் வாழ முடியாது. கல்வி பெறாதிருத்தல் பெருங்குற்றம். பெற முடியாது தடுத்தல் அதனினும் பெருங்குற்றம். கல்வியைப் பறிப்பது கண்ணைப் பறிப்பது போலாகும் என்று கல்வி, கல்லாமை என்னும் இயல்களில் தெளிவுறக் கூறியுள்ளார். எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு என்று கூறுவதில் ஒரு புரட்சியையும் செய்துள்ளார். கல்வி என்றால் வெறும் காப்பியங்களை மட்டுமோ இலக்கண நூல்களை மட்டுமோ கற்றல் அன்று. அறிவியலை (எண்)யும், கலை (எழுத்து)களையும் ஒருவர் கற்றால்தான் முழுமைக் கல்வியாகும் என்கிறார். இரு பகுதிகளையும் கற்பவர் தாம் மக்களாக வாழ்வர். பிறர் மாக்களாகி விடுவர் என முன்னறிவுப்புக் கொடுத்துள்ளார்.

ஒருவனுடைய ஏற்றத்தாழ்வு அவன் போன பிறவியில் செய்துள்ள புண்ணிய பாவங்களுக்கேற்பவே உண்டாகும். சிலர் பல்லக்கில் (அக்காலத்தில் மகிழ் உந்து இல்லை) ஏறிச் செல்லுகின்றனர் என்றால் அவர்கள் போன பிறவியில் புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள்; அதனைச் சுமந்து செல்பவர்கள் போன பிறவியில் பாவம் செய்தவர்கள் ஆவார்கள் என்று கூறி வந்தனர். இக்கூற்று மிகமிகக் கொடியது; உண்மைக்கு மாறுபட்டது. இன்று காண்கின்றோம், அறஞ்சாரா நெறியில் அளவுகடந்து பொருளீட்டியவர் அழகார்ந்த வியன் உந்தில் ஆர்ப்பரவுடன் செல்கின்றார். அறநெறி கோடாது வாழ்கின்றவர் அடக்கமாக நடக்கின்றார். வியன் உந்தில் வீறு தோன்றச் செல்லுகின்றவர் புண்ணியம் செய்தவர் என்றும், கால்நோவ நடந்து செல்லுகின்றவர் கடும் பாவம் செய்தவர் என்றும் கழறுதல் பொருந்துமா? பொருந்தாது அன்றோ? ஆகவே திருவள்ளுவர் அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை எனச்சினந்து உரைத்தார். இதன் உண்மைப் பொருள் : பல்லக்கில் ஏறியிருப்பவரையும் அதனைச் சுமந்து செல்பவரையும் காட்டி இது தான் அறவழியென்று கூறற்க என்பதாகும். பிற்காலத்தார் அவ்வுண்மைப் பொருளை மறைத்து வேறு வகையாகக் கூறிவிட்டனர். ஏனெனில் உண்மைப் பொருளை அறிந்த மாந்தர் பல்லக்கில் செல்லுபவரை வாளா விட்டுவிட மாட்டார் என்று அஞ்சியே ஆகும். உண்மைப் பொருளுணரின் பல்லக்கில் செல்லுபவரைக் கீழே இறக்கிப் பல்லக்கைச் சுக்கு நூறாக உடைத்துத் தள்ளி விடுவரன்றோ.

கொடுத்தல் நன்று தான். ஆனால் ஆளறிந்து கொடுக்க வேண்டும். சிலருக்குக் கொடுத்தால் தான் வீடு பேறு கிட்டும். வேறு சிலருக்குக் கொடுத்தால் நரகம் தான் கிட்டும் என்றனர். கொடுத்தலால் வீடு அடைதல் போன்றே பெறுதலாலும் வீடு அடையலாம் என்ற கொள்கை பரப்பப்பட்டு வந்தது. ஆனால் பழந்தமிழர் கொள்கையோ இதனின்றும் வேறுபட்டது. ஈயென இரத்தல் இழிந்தது; ஈயேன் என்றல் அதனினும் இழிந்ததாகும்; கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது; கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்ததாகும். இவ்வாறு கூறி ஒழுகி வந்தனர் பழந்தமிழர். திருவள்ளுவர் இத்தமிழ்க் கொள்கையில் ஊறி முதிர்ந்தவர். ஆகவே அவர் கூறினார், நல்லாறு எனினும் கொளல் தீது; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று. பிறரிடம் ஒன்றைப் பெறுவது சிறந்த வாழ்வு நெறியாகும் (யாசகம் புருட இலட்சணம்) என்று சிலர் கூறினாலும் பிறரிடம் ஒன்றைக் கொள்ளுதல் கொடுங்குற்றமே. கொடுப்பதனால் வீடு கிட்டாது எனத் தெரிந்தாலும் கொடுத்தலே நல்ல செயலாகும்.

வீடு (மோட்சம்) கிட்டாது என்றாலும் கொடு; வீடு கிட்டுமென்றாலும் வாங்காதே என்பது எத்தகைய புரட்சிக் கொள்கையாகும் என்பதை எண்ணுமின்!

வேள்விகளைச் செய்து ஆற்றலைப் பெறலாம். அடைதற்கரியனவற்றை அடையலாம் என்ற கூற்றில் மயங்கி வேள்வியை அறியாத் தமிழ் நாட்டில் வேள்வி செய்தலைப் பெருங்கடனாகச் செய்தனர் சிலர். தமிழரசர்களில் சிலர் எளிதில் எதையும் பெறலாம் என்று எண்ணி வேள்விகளைச் செய்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தனர். பல வேள்விகளைச் செய்த அரசர்க்குப் பல்வேள்விசெய்தோன் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது. பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்பதே சான்றாகும்.

அவ்வேள்விகளில் ஆடு மாடு குதிரைகளைக் கொன்றனர். மக்கள் நலன் அடைய மாக்களைக் கொல்லுதல் அறமாகுமா? பேரருளாளர் வள்ளுவர் தம் எதிர்ப்புக் குரலை எழுப்பினார். அரச சீற்றத்திற்கு ஆளாவோமே என்று அஞ்சினார் இலர். அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று என ஓங்கி முழங்கினார். வேள்விகளைச் செய்யாதே; வீணில் உயிரைக் கொல்லாதே என்பது வியத்தகு புரட்சி அன்றோ? வேந்தரை எதிர்ப்பது அக்காலத்தில் சாகும் தண்டனைக்கு ஆட்படுத்துமே!

மாந்தர்களில் பலர் மனத்தின்கண் மாசு கொண்டு புறத்தில் மாண்புடையார் போன்று நடித்துப் பொய்க் கோலம் பூண்டு வாழ்ந்து வருகின்றனர். வள்ளுவர் காலத்திலும் வாழ்ந்தனர். இவர்கள் பொதுமக்களை ஏமாற்றித் தம் வலைக்குள் சிக்க வைத்துத் தாம் எண்ணியபடி ஆட்டி வைத்தனர். அவர்களால் பூசனையும் பொருளும் பூவையரும் பெற்றனர். அணிந்திருந்த வேடத்திற்கும் துணிந்திடும் செயலுக்கும் பொருத்தமின்றி ஒழுகி வந்தனர். வஞ்ச மனத்தினராய்க் கரவொழுக்கம் பூண்டு வாழ்வதைக் கண்டு அவர்களின் ஐம்பூதங்களும்கூட அகத்தே நகா நிற்கும். அக்காலத்தில் துறவிகட்கு மக்களிடையே நல்ல செல்வாக்கு இருந்தது. துறவிகள் கடவுளைவிட உயர்ந்தவராகக் கருதப்பட்டனர். உண்மைத் துறவிகள் மக்களுக்காக உயிர் வாழ்ந்ததனால் அத்தகைய மதிப்பை அவர்கள் பெற முடிந்தது. எங்கு மதிப்பும் மாண்பும் கிட்டுகின்றனவோ அங்குக் கயவர்கள் புகுவர் அன்றோ? ஆதலின் துறவிகளின் கூட்டத்திலும் கயவர்கள் புகுந்தனர். துறவிகள் போல் உருக்கொண்டனர். அக்காலத் துறவிகளில் சிலர் தலைமயிரை நீளமாக வளர்த்துச் சடையாகப் பின்னி, முடியாகக் கொண்டிருந்தனர். சிலர் தலை மயிரைப் போக்கி மொட்டையாக இருந்தனர். உண்மைத் துறவிகள் தலைமயிரால் அழகு செய்து கொள்ள விரும்பிலர். தலைமயிரைப் பேணாது விடின் சடையாய்ப் பின்னலுறுவது இயல்பு. இதனைப் பொருட்படுத்தாது வாழ்ந்தனர் சிலர். சடைமுடித் தொல்லையைத் தாங்க இயலாதவர்கள் தலைமயிரைக் களைந்து கொண்டனர். இவர்களே மொட்டையாகக் காட்சி அளித்தவர்கள்.



கரந்துறை மாந்தர்கள் - துறவிகள் இவ்வாறு இருப்பதனால் தான் மதிப்புப் பெறுகின்றனர் என்று கருதினர். அவர்களில் சிலர் தலைமயிரைச் சடையாக வளர்த்தனர். சிலர் மழித்துக் கொண்டு மொட்டையாயினர். துறவிகள்போல் தோற்றம் கொண்டு நடித்ததனால் பொதுமக்கள் மயங்கி அவர்களைப் பூசித்துப் பொன்னும் பொருளும் அளித்துப் போற்றினர். அவர்களோ போலித்துறவிகள். தவம் மறைந்து அல்லவை செய்தனர். பெற்றம் புலித்தோல் போர்த்திப் பசும் பயிரை மேய்வது போல் அஞ்சத்தகும் வடிவம் பெற்றுத் துறவி போல் காட்சி அளித்து நெஞ்சில் துறவாது படிற்றொழுக்கம் கொண்டிருந்தனர். திருவள்ளுவர் அவர்கள் வாழும் முறையைக் கண்டு வெறுப்புற்றார். இத்துறவிகளை, அவர்களுடைய செல்வாக்கினைக் கண்டு அஞ்சாது எதிர்க்கத் தொடங்கினார். மன்னரினும் வலிமை வாய்ந்த அவர்களைக் கண்டு வள்ளுவர் அஞ்சினார் இலர். உலகம் - உயர்ந்தோர் - பழிக்கும் குற்றங்களை நீக்கி வாழ்ந்தால் அஃதே உயர்ந்தோர் ஆக்கும்; சடையை வளர்த்தலும் மொட்டையடித்தலும் எதற்கு? என்று அவர்களை நோக்கி அறைகூவல் விடுத்தார் மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்.

மகளிரின் உயர்வுக்காகப் போராட்டம் தொடங்கிய முதல் புரட்சியாளரும் வள்ளுவரே. பெண்களின் சமநிலைக்காக அவர் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் என்றும் பொன்போலப் போற்றத்தக்கன. மனைவியை வாழ்க்கைத் துணை என முதல் முதலாக அழைத்தவரும் அவரே. கணவனும் மனைவியும் நண்பர் போன்று வாழ்தல் வேண்டும் என்று கட்டுரைத்தவரும் அவரே. ஆண் மகனுடைய ஒழுக்கத்திற்குப் பெண் மகளை எடுத்துக்காட்டாகக் கூறியவரும் இப்பெரியாரே. ஒருமை மகளிரே போல் பெருமையும் தன்மைத்தான் கொண்டொழுகின் உண்டு என்பதை நோக்குக. இல்லவள் மாண்பானால் இல்லது என் என்று எல்லாம் மனைவியால் தான் என மகளிரை உயர்த்திக் கூறினார். இவ்வாறு மகளிரை உயர்வுபடுத்தும் வள்ளுவர் மகளிரைச் சிறுமைப்படுத்தினால் வாளாயிருப்பாரா?



சிலர் தம் மனைவியின்பால் ஐயங்கொண்டு தாம் இல்லாத காலத்தில் கெட்டுவிடுவாள் என்று அஞ்சி, தம் இனிய நல்வாழ்வுத் துணையைக் காவலுக்கு ஆட்படுத்தினர். வீட்டினுள் பூட்டி வைத்தனர். மகளிர் விரும்பின் எக்காவலையும் கடந்து எதனையும் செய்யும் ஆற்றலுடையவர். இதனை அறியாது ஏன் அவர்களைச் சிறுமைப்படுத்திச் சிறையிட, வேண்டும்? அவர்கள் உள்ளத்தை அறிந்து உள்ளம் ஒன்றுபட வாழ முற்படின் அவர்களே தம்மைக் காத்துக் கொள்வர். ஆதலின் திருவள்ளுவர் ஆடவரை நோக்கிச் சிறைகாக்கும் காப்பு என்ன செய்யும்? மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை என்று கழறினார்.

மக்கட் பேறு எதற்கு? என்ற வினாவுக்கு விடையாகப் பரிமேலழகர் கூறுகின்றார் : புதல்வரைப் பெறுதல், அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும் தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லாது இறுக்கப்படாமையின், அக்கடன் இறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். ஆகவே மக்களின் கடன் தென்புலத்தார்க்குக் கடன் செலுத்துதல் ஆகும் என்று நம்பி வந்தனர் என்று தெரிகின்றது. தென் புலத்தார் என்பவர் பிதிரர் ஆவார். படைப்புக்காலத்து அயனால் படைக்கப்பட்டது கடவுட்சாதி. அவர்க்கிடம் தென் திசையாதலின் தென் புலத்தார் என்றார். இவ்வாறு கூறுபவர் பரிமேலழகர். பிதிரர் என்பார் இறந்து போன முன்னோர் அல்லர் என்பது அவர் கருத்து. ஆனால் பெற்றோர் இறந்து போனால் அவரை நினைத்து அவர் தாம் பிதிரர் என்று கருதி அவர் தம் மக்கள் அவர் இறந்த நாளில் புரோகிதரை அழைத்துப் பொன்னும் பொருளும் கொடுக்கின்றனர். இதனை, திதி, திவசம், சிரார்த்தம் என்றெல்லாம் அழைப்பர். மக்கள் தம் தந்தைக்குச் செய்யும் கடன் இதுதான் என்று, இன்றும் பலர் கருதுகின்றனர். ஆனால் வள்ளுவரோ இதனை ஏற்றுக் கொண்டார் இலர். வெளிப்படையாகவே மறுத்துள்ளார். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல் என்று முழங்கினார். மகன் தந்தைக்குச் செய்யும் கடனாவது எல்லா வகையாலும் சிறந்து விளங்கும் இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ? என்று உலகத்தார் சொல்லும் சொல்லை உண்டாக்குதல் ஆகும் என்பது இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்துமன்றோ?

இவ்வாறு பல புரட்சிகளைத் திருவள்ளுவர் ஆற்றியுள்ளார். ஊன் உண்ணுதலை எதிர்த்தார். கள் உண்ணுதலைக் கடிந்தார். கவறாடுதலை இகழ்ந்தார். இவர் செய்துள்ள புரட்சிகளை விரிப்பின் பெருகும். இவரைத் தமிழகத்தின் - ஏன் உலகத்தின் முதற்புரட்சியாளர் என்று வாயார வாழ்த்தி நெஞ்சார நினைந்து அவர் வழிமுறைகளில் வாழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவோமாக!

நன்றி : குறளமுதம்
வெளியீடு : தமிழ் வளர்ச்சித்துறை

★ ★ ★

# சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலும் கணினிப்புரட்சி!

## வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகிறது தஞ்சை மாவட்டம்

மனித சமூகம் தோன்றிய நாள்தொட்டு, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினை படிப் படியாகக் கொண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வருகின்றது. இயற்கையையும் அதன் பல்வேறு கூறுபாடுகளை ஒரு காலத்தில் பார்த்து அஞ்சிய மனித சமூகம் இயற்கையின் போக்கையே வெல்லுகின்ற திறம் பெற்றதை விஞ்ஞான வளர்ச்சி நினைவூட்டுகின்றது.

''அகிலத்தை மாற்றிய ஐந்து சிந்தைகள்'' (Five Ideas that changed the World) என்ற அற்புதமிகு நூலை வரைந்திட்ட - பா:ப்பாரா வார்டு (Barbara Ward) என்ற அற்புதமிகு எழுத்தாளர், இலண்டன் ஒலிபரப்பு நிறுவனத்தின் ஆளுநராக இருந்த பெருமைமிக்க பெண்மணி, ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார்.

''மனித இனம் எண்ணவோட்டத்திற்கும், கற்பனைத் திறனுக்கும் முழுமையாக ஈடுகொடுக்கும் வகையில் வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக்கிறது'' (For the first time in History Human beings have resources almost to match their imagination) என்று குறிப்பிடுகின்றார்.

கணிப்பொறி வளர்ச்சியும் நிர்வாக செயல்பாட்டின் பிரிவுகள் கணினி மயமாகும் நிலையும் இந்த கருத்திற்கு வலு சேர்க்கின்றன என்றால் மிகையாகாது.

நிர்வாகத்தில் தூய்மை, செயல்பாட்டில் தேக்கமற்ற நிலை, எதிலும் ஒளிவு மறைவற்ற தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, ஒவ்வொரு துறையிலும் கணிப்பொறியின் அவசியத்தை நிலை நிறுத்தும் வகையில் திட்டங்களை வகுத்து தமிழக முதல்வர் சீரிய முறையில் அவற்றிற்கு வடிவம் தருகின்றார்கள்.

''சொற்புதிது, பொருள் புதிது, சுவை புதிது'' என்றார் பாட்டுக்கொரு புலவர், பாரதியார்.

''திட்டம் புதிது, செயல்படுத்தும் முறை புதிது, மக்கள் பெறும் பயன் மிகுதி'' என்று சொல்லத்தக்க வகையில், தமிழ்நாட்டில் திட்டங்கள் பலவற்றை முதல்வர் செயல்படுத்தி வருகிறார்கள்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுர திட்டம், வாழ்வொளித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், கால்நடை பாதுகாப்புச் சிறப்பு திட்டம் - இப்படி சீர்மிகு திட்டங்களைத் தந்த முதல்வர், கணிப்பொறியின் பயன்பாடு எல்லாத் துறைகளிலும் வரவேண்டும் என்று எண்ணி, வழிவகைகள் கண்டு, புதுயுகம் நோக்கி தமிழகத்தை வழிநடத்திச் செல்கிறார்கள்.

இது கணினிமய யுகம் (This is the Age of Computerisation) என்று சொல்லத்தக்க வகையில், நிகழ்ந்திடும் அறிவியல் அமைதிப் புரட்சியில் - ''தண்ணீரும் காவிரியே தார்வேந்தனும் சோழமன்னனே'' என்ற புகழோவியத்திற்கு நிலைக்களனாக விளங்கிடும் தஞ்சைத் தரணி பங்கேற்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழக அரசின் திட்டங்களும், திட்டங்களின் பயன்களும் பொதுமக்களை விரைவாகவும், இடர்பாடு ஏதுமின்றி சிந்தாமல் சிதறாமல் சென்றடைய வேண்டும் என்ற முதல்வரின் எண்ணம் ஈடேறும் வகையில் - முதற்கட்டமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள



□ டாக்டர் மு. இராசாராம், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.

8 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கணினிகள் நிறுவப்பட்டு, கடந்த 20-2-2000 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் கணினிமயமாக்கல் திட்டம், சிறப்பம்சம் பலவற்றை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள கணினிகள், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தலைமை கணினியுடன் மிக விரைவு இணையம் (High Speed Net Work) மூலம் இணைக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம் செய்தி மற்றும் தகவல் பரிமாற்றம் எளிதாக்கப்பட்டுள்ளது.

மிக விரைவு இணையம் நேரடியாக செயற்கைக்கோள் (Satellite) உதவியுடன் உயர் தகவல் பரிமாற்ற சாதனங்களுடன் இணைக்கப்படுவதால், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களும் இண்டர்நெட் (Internet) வசதி பெற்றுள்ளது.

இத்தகைய மிக விரைவு இணையத்தினை வட்ட அளவில் முதன் முதலில் பெற்ற பெருமை, இந்திய நாட்டிலேயே தஞ்சை மாவட்டத்தைச் சாரும் என்பது குறிப்பிடத் தக்க உண்மையாகும்.

வட்ட அளவில் அமைந்த மிக விரைவு இணையத்தின் மூலம், அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களையும் அதற்கான விண்ணப்பங்களையும் மக்கள், வட்டாட்சியர் அலுவலகங்களில் விரைவாக பெற்றிடும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், 'அ' பதிவேடுகள், சிட்டா பதிவேடுகள், நில ஆக்கிரமிப்பு, அடங்கல், பட்டா மாற்றம், நில ஒப்படை மற்றும் நில உடமை தொடர்பான பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் பிரிவிலிருந்து பெறப்பட்ட மனுக்கள், முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர் விவரம், குடிமைப் பொருள் வழங்கும் திட்டம், சம்பளப்பட்டியல் தயாரித்தல், அரசு அலுவலர்களின் பணிப்பதிவேடுகள் பராமரித்தல் அறிக்கைகளை கூடிய வரை படிவங்கள் வடிவில் கணினி மயமாக்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளுக்கான மென்பொருள் (Software) மாவட்ட தேசிய தகவலியல் மையத்தினால் தயாரிக்கப்பட்டு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்தது.

ஒரு பூவைப் போல்
சப்தமில்லாமல் கொடு

ஒரு விளக்கைப் போல்
பேதமில்லாமல் கொடு

உன்னிடம் உள்ளது
நதியில் உள்ள நீர்போல்
இருக்கட்டும்

கொடு
நீ சுத்தமாவாய்

கொடு
நீ சுகப்படுவாய்

கொடு
அது உன் இருத்தலை
நியாயப்படுத்தும்.

● கவிக்கோ அப்துல் ரகுமான்

தற்போது இப்பணி வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 906 கிராமங்களில் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் பதிவு செய்யப்பட்டு, பட்டா மாற்றம் மற்றும் சிட்டா நகல் வழங்குதல் போன்ற பணிகள் கணினி மூலம் செயல்படுத்தப் படுகின்றது.

வட்டாட்சியர் அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் இந்த உன்னத திட்டத்தினை கடந்த 20-2-2000 அன்று திருவையாறு திருநகரில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள கணினி அமைப்பின் செயல்பாடு, பயன்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்திட அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணனின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக்குழு தஞ்சாவூர், பாபநாசம் வட்டாட்சியர் அலுவகங்களில் அமைக்கப்பட்டுள்ள கணினி மையத்தினை பார்வையிட்டு பாராட்டு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து சுமார் 20 இலட்ச ரூபாய்

பெறப்பட்டு, தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கணினி மையம் அமைக்கப் பட்டுள்ளது.

மேலும், வட்டாட்சியர் அலுவலகங்களில் நிலப்பதி வேடுகளை கணினிமயமாக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதித்த ரூ.15 இலட்சத்தை பயன்படுத்தி வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி அறைகள், குளிர் சாதனை வசதிகள், தடையில்லா மின் வழங்கி சாதனங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி அமைப்பினை செம்மையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக 60-க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறையில் கணினி மைய திட்டம் செயல்வடிவம் பெற்றதை தொடர்ந்து வளர்ச்சித் துறையிலும், இந்த அதிநவீன அறிவியல் தொழில்நுட்ப கதிரொளி பாய்ந்து பரவத் தொடங்கியுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாய தகவல் மையம் அமைப்பதற்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. இந்த தகவல் மையங்களில் கணினி அமைப்பு பணி தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் மூலம் ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினை தொடர்பு கொள்ளவும், தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகள் அவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பான மக்கள் சாசனம், மாவட்டம் குறித்த பொதுதகவல், சமத்துவபுரம் மற்றும் சுற்றுலா மையங்கள் குறித்த விவரம் ஆகியவற்றை கணினியில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணாப் பல்கலைக்கழக தொலைநோக்கு ஆய்வு மையத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஊராட்சி வள ஆதார தகவல் அமைப்பு குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சையின் நகராட்சி குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியங்களிலும் 2 அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு கணிப்பொறி இயக்கம் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கணினியாக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்தவும், அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு ஆலோசனை வழங்கி செம்மைப்படுத்தவும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், வருவாய் மற்றும் வளர்ச்சித் துறை அலுவலர்கள், மாவட்ட தகவலியல் அலுவலர் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் செயல்படுத்தும் கணினியாக்கத் திட்டமும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் உருவாக்கப்படும் கணினி சமுதாய தகவல் மையமும் தஞ்சை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு புதிய ஆக்கம் தரும் என்பதில் ஐயமில்லை.

இன்றைக்கு படித்துக் கொண்டிருக்கிற இளம் மாணவர்கள் எதிர்காலத்தில் வேலை தேடி அலையும்போது வேலைக்கு எடுத்துக் கொள்வோர் அவர்களிடம் கேட்கின்ற முதல் கேள்வி ''உனக்கு கம்ப்யூட்டர் (Computer) தெரியுமா என்பதாகத்தான் இருக்கும். வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்தில் கம்ப்யூட்டர் சாதனம் மிக அவசியமான ஒன்றாகிவிட்டது'' என்று குறிப்பிட்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பினை துவக்க ஆணை பிறப்பித்து, முதற்கட்டமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 36 மேல்நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு, 1173 மாணவ-மாணவிகள் கணிப்பொறி பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இதைப் போன்று, நகராட்சிகளில் பிறப்பு, இறப்பு விவரங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு மக்களுக்கு பயன்தரும் வகையில் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முதியோர் ஓய்வூதியத் திட்டம், உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்கான நிதி உதவி வழங்கும் திட்டம், அரசு ஊழியர்களுக்கான வீட்டுவசதி கடன் வழங்கும் திட்டம், வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டங்கள், பிற சமூக நலத் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் பயன்பெறுவோரின் விவரம், வழங்கப்படும் உதவிகள் ஆகியவை குறித்த விவரங்களையும் கணினி அமைப்பில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றாசிரியர்கள் காலத்தை வகைப்படுத்தும்போது (From Adam Age to Atomic Stage) என்று குறிப்பிடுவார்கள். ''ஆதாம் காலத்திலிருந்து அணுயுகம் வரை'' என்பது அதன் பொருளாகும். ஆனால் இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சியின் உயர்ந்த நிலையாக, நவீனயுகத்தின் அடையாளமாக கணினியுகம் கருதப்படுகிறது. அப்படிப்பட்ட கணினி மயமாக்கல் திட்டத்தில், தஞ்சை மாவட்டம், சிறப்பான வளர்ச்சி பெற்று, குறிப்பிடத்தக்க சாதனை படைத்து பெருமை அடைந்துள்ளது.

''அலுவலகங்களைப் புதுமையாக கணினி மயமாக்கும் முயற்சி தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்னோடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பெரிதும் பாராட்ட விரும்புகிறேன்''

- என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருவையாற்றில் நடைபெற்ற விழாவில், தஞ்சை மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ள கணினி அமைப்பினை துவக்கிவைத்து பேசும்போது குறிப்பிட்டார்கள் என்றால், இந்த வகையில் இம்மாவட்டம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு சான்று பகர வேறென்ன வேண்டும்? □

# தமிழகச் சுற்றுலாத் தலங்கள்



தமிழ்நாடு –
தமிழர்களின் தாயகம்.

தமிழ் – மிகப் பழமையான, மிக வளர்ச்சி பெற்ற இந்திய மூத்த மொழிகளுள் ஒன்று.

தனித்தன்மை வாய்ந்த இனப்பெருமை கொண்டதே இந்த மண். எனினும் இந்தியப் பண்பாடுகளோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஒரு பகுதியாக, மாபெரும் நாகரிகத்தின் கனிச் சோலையாக இம் மாநிலத்தின் வரலாறு மணம் வீசிக் கமழ்கிறது.

தமிழ்நாடு – கோவில்கள் மலிந்த கலைக்கோட்டம். இங்கே ஆயிரக்கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள் அந்தந்தக் கால நிலையை, சிற்பக் கலையின் எழிலை, தங்களை எழுப்பிச் சிறப்பித்த ஏந்தல்களைக் கண்ணாடி போல் காட்டும் வார்ப்படங்கள்.

தமிழ்நாட்டின் வடக்கே பல்லவர்களும், தெற்கிலும், தென்மேற்கிலும் பாண்டியர், சேரர்களும், கிழக்கே சோழர்களுமாகத் தனித் தனியே கோலோச்சினாலும் பெரும்பாலும் ஒப்புரவு கொண்டவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கலாச்சாரம் ஏசுநாதர் பிறந்த முதல் சில நூற்றாண்டுகளிலேயே சீன நாட்டின் எல்லைவரை பரவியிருந்திருக்கிறது. அதற்குரிய அடையாளச் சின்னங்கள் கம்போடியா, வியட்நாம், மலேசியா முதலான கீழை நாடுகளில் இன்னும் காணப்படுகின்றன. கம்போடியாவிலும், வியட்நாமிலும் உள்ள தெருக்கள் வீதிகள் என்னும் தமிழ்ச் சொல்லினால் இன்றைக்கும் வழங்கப்படுகின்றன.

## சென்னை

வானளாவும் கட்டடங்கள், பரந்து நீண்ட கடற்கரைகள், பசுமை கொழிக்கும் பூங்காக்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் தன்னகத்தே கொண்ட சென்னை மாநகர், தமிழகத்தின் தலைநகர்.

கோட்டைக்குள் உள்ள புனித மேரி மாதாகோவில் கி.பி.1680ல் கட்டப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதுதான் இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பெற்ற பிராட் டஸ்ட்ண்ட் கிறித்துவ ஆலயமும், ஆசியாவிலேயே மிகப் பழமை யானதும் ஆகும்.

## கோட்டை அருங்காட்சியகம்

கோட்டைக்குள் இருக்கும் அருங்காட்சியகம் வரலாற்றுக் கருவூலமாகும். தென்னாட்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியின்

நடவடிக்கைகளைப் பற்றிய வரலாறுகளை எடுத்துரைக்கும் கண்கவர் தடயங்கள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. படைக்கலன்கள், உடை வகைகள், நாணயங்கள் பதக்கங்கள், பீங்கான் பாத்திரங்கள் ஆகிவற்றைக் கொண்ட பிரிவுகள் குறிப்பிடத்தக்கன.

## அண்ணா சதுக்கம், எம்.ஜி.ஆர். நினைவிடம்

பேரறிஞர் அண்ணா கோடிக்கணக்கான மக்களின் இதயக் கோவிலிலே குடியேறி தங்களது மூத்த அண்ணனாகவே மக்களால் கருதப்பட்டு 'அண்ணா' என்று பாசம் பொங்க அழைக்கப்பட்டார். ஒப்புவமை இல்லாத மக்கள் செல்வாக்குடன் ஒளிவீசிய அவர், தலைசிறந்த அரசியல் சிற்பி, முன்னாள் தமிழக முதல்வர்.

மெரினா கடற்கரையின் வடகோடியில் அண்ணா அடக்க மேடை அமைந்துள்ளது. இதன் நுழைவாயில் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது.



அடக்க மேடையை ஒட்டியே நெடுதுயர்ந்து நிற்கும் நினைவுத் தூண் நம் நெஞ்சம் கவரத்தக்கது.

அண்ணாவின் எண்ணக் கருவூலங்களைப் போன்றே அணையா விளக்கொன்று இங்கே எரிந்து கொண்டேயிருக்கிறது. சுற்றிலும் அழகுமிகு பூங்கா அமைதி தவழுவதாக அமைந்துள்ளது.

அதன் அருகிலேயே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் நினைவிடம் அழகுற நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சமாதிக்கும், அண்ணா சதுக்கம் போன்று ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் வந்து போவதை நாம் காணலாம்.

மெரினா கடற்கரையின் தென்கோடியில் சாந்தோம் கதீட்ரல் பாசிலிகா என்னும் கிறித்துவத் தேவாலயம் அமைந்துள்ளது. 1896ல் கட்டி முடிக்கப் பெற்றுப் புனிதம் செய்யப்பட்ட இக்கோவில் ஜெர்மானிய கோத்திக் கட்டடக் கலையெழிலைக் கொண்டதாகும்.

## செயின்ட் தாமஸ் மவுண்ட்

புனித தோமையர் மலை என்பது அந்த யேசுபக்தர் வாழ்ந்ததும் மறைந்த இடமுமாகும். பழம் பெருமைமிக்க இக்குன்றின் உச்சியில் உள்ள மாதா கோவிலில் சிலுவை ஒன்று இருக்கிறது.

## காந்தி, இராஜாஜி, காமராசர் நினைவாலயங்கள்

கிண்டியில் ஆளுநரின் மாளிகையான இராஜ்பவனை அடுத்து மகாத்மா காந்தியடிகள், இராஜாஜி, காமராசர், பக்தவத்சலம் ஆகியோரது நினைவகங்கள் எழுப்பப் பெற்று உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் நினைவாக தியாகிகள் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

## கபாலீசுவரர் கோவில்

மயிலாப்பூரில் உள்ள கபாலீசுவரர் கோவில் கம்பீரமானது; காட்சிக்கு இனியது. புராணக் கதையின் படி, சிவபெருமானின் வரம் வேண்டி முக்தி பெறுவதற்காகப் பார்வதிதேவி மயிலாக உருவெடுத்து இங்கேதான்அவரை வழிபட்டாராம்.

## பார்த்தசாரதி கோவில்

திருவல்லிக்கேணியில் எழுந்துள்ள வைணவக் கோவில் மிகவும் அழகானது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மன்னர் ஒருவரால் கட்டப்பெற்றது. விசயநகர அரசர்களாலும் ஏனைய வேந்தர்களாலும் பலமுறைப் புதுப்பிக்கப் பெற்றது.

## தேசியக் கலைக்கூடம்

எழும்பூர் பாந்தியன் சாலையில், எழில் கொஞ்சும் எடுப்பான பெரும் மாளிகையில் தேசியக் கலைக்கூடம் அமைந்துள்ளது. இக்கட்டடம் இந்து அராபியக் கட்டடக் கலையெழிலுக்கு நேர்த்தியான ஒரு சாட்சியாக நெஞ்சைக் கவர்கிறது. 'மாடர்ன் ஆர்ட்' எனப்படும் நவீன ஓவியமும், பழைய வண்ண ஓவியங்களும் கொண்ட கலைச் சோலையாக இது காட்சி தருகிறது. இராசபுதன, முகலாய தென்னிந்திய வகைகளைச் சார்ந்த சில அருமையான வண்ண ஓவியங்களும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.



### அரசு அருங்காட்சியகம்

தேசியக் கலைக்கூடத்தை ஒட்டியே அரசு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப் பெற்றது இது. இங்குள்ள அருங்காட்சிப் பொருள்களில் அமராவதியில் உள்ள புத்த தூபிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திய அருமையான சிற்பப் பொருட்கள் அடங்கிய பிரிவு குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர, சிறுவர் அருங்காட்சியகமும், இப்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

### வள்ளுவர் கோட்டம்

மனித குலச் சிந்தனைகளின் மலையுச்சியான தமிழ் மறையாம் திருக்குறளை, உலகுக்கு அளித்த செந்நாப்புலவர் திருவள்ளுவரின் நினைவாக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் எழுப்பப்பட்ட கலைச்சின்னமே வள்ளுவர் கோட்டம். சென்னை நுங்கம்பாக்கத்தில் எழில் கொஞ்ச இது எழுந்துள்ளது.

இதன் ஒரு பிரிவு திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள தேர்ப்பகுதி, இன்னொன்று பரந்த கலைக்கூடம். தேர்ப்பகுதி, பாதி கருங்கல்லாலும், மீதி கான்கிரீட்டாலும் கட்டப்பட்டது. திருவாரூர் தேரின் வார்ப்படம் போல் இது சிற்பச் சித்திரங்களுடன் அழகுற வடிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 106 அடி [29 மீட்டர்] கலை அரங்கம் நீண்ட இரும்பு உத்திரங்களைக் கொண்டு கட்டப்பட்டது. 220 அடி [64 மீட்டர்] நீளமும்,100 அடி [30 மீட்டர்] அகலமும் கொண்ட இந்தப் பரந்த அரங்கில் ஒரு தூண் கூட இடையில் இல்லை.

ஒரே நேரத்தில் 4,000 பேர் உட்கார வசதியுள்ள இந்த வள்ளுவர் கோட்டம் ஆசியாக் கண்டத்திலேயே மிகமிகப் பெரிய கலை அரங்கமாகக் கருதப்படுகிறது. தொன்றுத் தொட்ட கலைத்திறன் வாய்ந்த சிற்பிகளின் ஆற்றலும் இக்காலத்திய மிக நவீன பொறியியல் நுட்பங்களும் கலந்து கனிந்த கலைக் கோவிலே வள்ளுவர் கோட்டம்.

### கலாச்சேத்திரம்

சென்னையின் தென்பகுதியான திருவான்மியூருக்கு அருகில் கிராமியச் சூழ்நிலையில் அமைந்துள்ளது கலாச் சேத்திரம். தென்னிந்திய நாட்டிய இசைக் கலைகளுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் மாபெரும் பணியைப் பல ஆண்டுகளாகப் புரிந்து வரும் உலகப் புகழ் பெற்ற கலை நிறுவனம் இது.

### மெரினா கடற்கரை

உலகிலேயே மிக நீண்ட கடற் கரைகளில் இது இரண்டாவது. ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் நீளமுள்ள வண்ணப் பூங்காக்கள் அமைந்த வெண்மணற் பரப்பில் அமர்ந்து, வீசிடும் தென்றலில் திளைத்து, சென்னை வாழ் மக்கள் ஆசையோடு பொழுது போக்கி மகிழும் அருமையான திறந்த வெளி மெரினா.

### காஞ்சிபுரம்

இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்று. பன்னெடுங் காலமாகக் கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் தலை சிறந்த பீடமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்து வந்திருக்கிறது. இந்து மதத்தோடு சமண சமயமும் பவுத்த நெறியும் இங்கே செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றன. ஆதிசங்கரர் காமகோடிபீடம் என்னும் சமய அமைப்பை இங்கே நிறுவியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த கட்டடக் கலையெழிலுக்குக் கட்டியம் கூறும் கம்பீரமான கோவில்கள் உள்ளன. வைகுந்தப் பெருமாள் கோவில், ஏகாம்ப ரேசுவரர் கோவில், வரதராஜர் கோவில், கைலாசநாதர் கோவில், காமாட்சியம்மன் கோவில், சக்தீஸ்வரர் கோவில் முதலானவை தென்னிந்தியக் கோவில் சிற்பக்கலை வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி மாணவர்க்கு அருமையான வாய்ப்புக்களை வழங்கக் கூடிய பாட பனுவல்களாகும். பட்டுப் புடவைகளுக்கு உலகப்புகழ் பெற்றது காஞ்சிபுரம். காஞ்சிபுரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ஆயிரக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் தங்கள் தறிகளில் வண்ணக் கோல எழில் கொஞ்சும் பட்டுத் துணி நெய்து வாழ்க்கிறார்கள்.

## ஏலகிரி மலை

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தனித்து நிற்கும் கவர்ச்சிமிக்க சுற்றுலாக் குன்று. உடல் நலத்துக்கு உகந்த பருவ நிலை, பசுமை கொஞ்சும் இயற்கையெழில், முருகன் கோவில் இந்த இடத்தில் காணக்கூடிய காட்சிகள். இதன் உயரம் சுமார் 1000 மீட்டர்கள்.

## திருவண்ணாமலை

புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பின் வடிவமாக சிவன் இங்கே வழிபாடு செய்யப்படுகிறார்.

இரமண முனிவர் ஆசிரமம் இங்கே உள்ளது. இந்தியாவிலிருந்து மட்டுமின்றி உலகம் முழுவதிலுமிருந்து பக்தர்களையும், பார்வையாளர்களையும் இது ஈர்க்கிறது.

## செஞ்சிக்கோட்டை

வரலாற்றுப் பெருமையும் கலையெழிலும் படைத்த செஞ்சிக்கோட்டை நம் நெஞ்சைக் கவர்வதாகும். தேசிங்குராஜன் கொடி கட்டி ஆண்ட சரித்திரச் சிறப்புடையது இந்தக் கோட்டை.

## சிதம்பரம்

பரதக் கலையின் முழு முதற் பொருளான நடராசர் ஆனந்த நடனமாடும் கோலத்தில் காட்சி தரும் இடம் தான் சிதம்பரம். சோழ மன்னன் குலோத்துங்கனால் பொன் ஓடு வேயப்பட்ட இந்தக் கோவிலில் பரதக் கலையின் 108 வகைத் தோற்றங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆனித் திருமஞ்சனம் ஆருத்ரா தரிசனம் ஆகியவை இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழா வாகும். சிதம்பரத்தில் 'நாட்டியாஞ்சலி' நாட்டியக் கலைவிழா பிப்ரவரி–மார்ச் மாதத்தில் நடைபெறும் குறிப்பிடத்தக்க நாட்டிய விழாவாகும்.



## பிச்சாவரம்

சிதம்பரத்திலிருந்து 13 கி.மீ. தூரத்திலேயே பிச்சாவரம் இருக்கிறது. கிழக்குக் கடற் கரையில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு உப்பங்கழிகள் உள்ளடங்கி இருக்கும் இது, அடர்ந்த காடுகளைக் கொண்ட தீவுகளின் கூட்டமாகும். படகுப் பயணத்துக்கும், மீன் பிடிப்புக்கும், நீர் சருக்கு விளையாட்டுக்கும் இங்குள்ள அமைதியான கடல் நீர் ஏற்ற இடம்.

## பூம்புகார்

சிலப்பதிகாரத்தின் பிறப்பிடமான பூம்புகார் வங்காள விரிகுடாக் கடலோரத்தில் இன்று சின்னஞ் சிறு கிராமமாகச் சிறுத்துக் கிடந்தாலும் ஒரு காலத்தில் சோழப் பேரரசர்களின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. கீழை நாடுகளோடும், கிரேக்கம், ரோமாபுரி ஆகிய மேலை நாடுகளோடும் அது வணிகத் தொடர்பு வைத்திருந்தது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பண்டைய பூம்புகார் சிறப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இங்குப் புதிதாக எழுந்துள்ள கலைக்கூடம், ஒரு காலத்தில் பெருமையோடு திகழ்ந்த இத்துறைமுகப்பட்டினத்தின் வரலாற்றுச் சிறப்புகளை நினைவுறுத்திச் சிலப்பதிகாரக் காட்சிகளை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.

## தஞ்சாவூர்

நாற்புறமும் அகழிகள் சூழ்ந்த பெரிய அரண்மனைக்

கோட்டையினுள் பிரகதீசுவரர் கோவில் உள்ளது. சிற்பக் கலையின் செழுமை மிகுந்த இப்பெரிய கோவில், பிற்காலச் சோழர்களில் பெரும்புகழ் பெற்ற மாமன்னன் இராஜ இராஜ சோழனால் கட்டப்பெற்றது. மொத்தம் 66 மீட்டர்கள் உயரமுள்ள மிகப் பெரிய கோபுரம் கொண்ட இந்த ஆலயத்தின் மூலக்கருவறையின் மேலேயுள்ள விமானம் எடுப்பான ஒரு சிறப்பு அம்சம். இது அந்நாளையப் பொறியியல் கட்டடக் கலையின் நுட்பமான அற்புதம்.

கோவில் வாசலைக் கடந்து சென்றால், உள்ளே நந்தியைக் காணலாம். நம் நாட்டில் ஒரே கல்லில் வடிக்கப் பெற்ற மிகப் பெரிய சிற்பங்களில் இந்நந்தியும் ஒன்று.

தஞ்சையில் சரபோஜி மன்னரால் உருவான சரசுவதி மகால் புகழ் மிக்க பழங்கால நூலகம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பனை ஓலைச் சுவடிகளும் தற்கால நூல்களும் இருக்கின்றன. அவற்றில் சில எங்குமே காணக் கிடைக்காத அருமையானவை.

இங்குள்ள கலைக்கூடம் வெண்கலச் சிலைகளுக்கும் கருங்கல் சிற்பங்களுக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்னும் பெருமையோடு இசை, நடனம், மிக நேர்த்தியான கைவினைப் பொருள்கள், பஞ்சலோகச் சிலைகள், வெண்கலத் தாமிரக் கலைப்பொருள்கள், தஞ்சாவூர்த் தட்டுகள், நெட்டி வேலைகள் முதலானவற்றுக்குப் பெயர் பெற்றது.

தஞ்சாவூருக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவையாற்றில், ஆண்டு தோறும் சனவரித் திங்களில் நடைபெறும் தியாக பிரம்ம ஆராதனை விழா சிறப்பானதாகும்.

## வேளாங்கண்ணி

இங்குள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயம் ஆரோக்கிய மாதாவுக்காகக் கட்டப்பட்டது. இக்கோவிலுக்கு நாடு முழுவதிலுமிருந்து எல்லா மதத்தினரும் நாள் தோறும் வருகிறார்கள்.

## நாகூர்

புகழ்பெற்ற இஸ்லாமிய யாத்திரைத் தலம் இது. ஆண்டு தோறும் நடைபெறும் கந்தூரி விழா, திரளான மக்களை இங்கே ஈர்க்கிறது. இந்தப் புண்ணியத் தலத்துக்கு எல்லாச் சமயத்தவரும் வருகிறார்கள்.



## திருச்சிராப்பள்ளி

காவிரிக் கரையில் அமைந்த பழமையான நகரம் திருச்சிராப்பள்ளி. இதன் வரலாற்றில் அற்புதமான அழிக்க முடியாத அத்தியாயங்களைத் தீட்டியவர்கள் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள்.

## மலைக்கோட்டை

திருச்சியில் கம்பீரமாகக் காணப்படும் எண்பத்து மூன்று மீட்டர் உயரமுள்ள மலைக்கோட்டையின் உச்சிக்குச் செல்ல 431 படிகளை மலையிலேயே செதுக்கிச் செய்திருக்கிறார்கள். மலைக்கோட்டையின் உச்சியில் பிள்ளையார் கோவில் இருக்கிறது. இங்குள்ள வேறு இரண்டு குகைக் கோவில்களில் ஆறாவது ஏழாவது நூற்றாண்டுச் சிற்பங்கள் நிரம்ப உள்ளன.

## திருவரங்கம்

காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளின் நடுவே காட்சிக்கு இனிய தீவாகத் திகழ்கிறது திருவரங்கம். 13-14 நூற்றாண்டு அளவில் கட்டப்பட்ட இங்குள்ள அரங்கநாதர் கோவில் மிகவும் புகழ் பெற்றது. இங்கே ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் முதல் சனவரி இரண்டாம் வாரம் முடிய 21 நாட்களுக்கு வைகுந்த ஏகாதசி திருவிழா, கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

## திருவானைக்காவல்

ஜம்பு என்பது புனிதமான நாவல் மரத்தின் பெயர். அதன் அடியில் சிவலிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. அதனால் திருவானைக்காவலுக்கு ஜம்புகேசுவரம் என்றும் பெயர். ஒரு காலத்தில் இங்குள்ள சிவ லிங்கத்தை யானை ஒன்று வழிபட்டதாகப் புராணக் கதையும் உண்டு.

## கல்லணை

காவிரியின் குறுக்கே சோழ மாமன்னன் கரிகால் பெரு வளத்தானால் இது எழுப்பப் பட்டுள்ளது.

அந்நாளையப் பொறியியல் கலை வளத்துக்கு இது இணையற்ற சான்றாகும்.



## சங்கத் தமிழ் வளர்த்த மாமதுரை

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே கீழை நாடுகளின் ஏதன்ஸ் எனக் கிரேக்கத் தலைநகரோடு ஒப்பிடத்தக்க புகழ் கொண்ட பெருநகர் மதுரை. மிடுக்காக எழுந்து நிற்கும் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பெயர் பெற்ற மாநகர் இது. வைகை நதிக்கரையில் மதுரை மாநகர் அழகுற அமைந்துள்ளது.

## மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்

மதுரையின் மையத்தில் கவினுற அமைந்துள்ள இந்தக் கோவில் 263 மீட்டர் நீளமும் 247 மீட்டர் அகலமும் உள்ளது. இதன் நான்கு புறங்களிலும் உள்ள நான்கு உயர்ந்த கோபுரங்களிலும் வண்ணச் சித்திரச் சிற்பங்கள் கண்ணைப் பறிப்பனவாகும்.

இது ஓர் இரட்டைக் கோவில்; ஒன்று தென்புறத்தில் உள்ள மீனாட்சிஅம்மன் கோவில். இன்னொன்று சுந்தரேசுவரர் கோவில். இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் கோவில் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது.

## கூடல் அழகர் கோவில்

மதுரை மாநகரின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ளது. இங்கு ஒன்றின்மேல் ஒன்றாக - உட்கார்ந்த நிலையிலும், நிற்கும் நிலையிலும், ஓய்வாகச் சாய்ந்த நிலையிலும் பொருத்தியுள்ள திருமாலின் தோற்றங்கள் கோவிலின் தனிச் சிறப்பாகும்.



## திருமலை நாயக்கர் அரண்மனை

புகழ்பெற்ற திருமலை நாயக்க மன்னரால் 1636ல் இந்தோ அராபிய பாணியில் எழுப்பப் பெற்றுள்ள பிரமாண்டமான அரண்மனை இது. இங்கு ஒலி-ஒளிக்காட்சி சுற்றுலாத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது.

### திருப்பரங்குன்றம்

சுப்பிரமணிய சுவாமிக்கும் தெய்வயானைக்கும் இங்குத் திருமணம் நிகழ்ந்ததாகப் புராணக் கதையொன்று வழங்கி வருகிறது.

### திருச்செந்தூர்

நீலத்திரைக்கடல் ஓரத்திலே அமைந்துள்ள புகழ்மிக்க இங்குள்ள அருள்மிகு முருகக் கடவுளின் புண்ணியத் தலம், அறுபடை வீடுகளில் ஒன்று.

### கோயம்புத்தூர்

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்பெறும் கோயம்புத்தூரும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் - கணக்கிலடங்கா நெசவாலைகளுக்கும், வேளாண்மை மற்றும் நெசவுத் தொழில்களுக்குரிய ஆராய்ச்சிகளுக்கும் கேந்திரப் பகுதிகளாகும். பொறியியல் கருவிகள், நெசவாலைக் கருவிகள் உற்பத்திக்கும் இது முன்னணியில் நிற்கிறது. அருகில் பேரூரில் உள்ள சிவன் கோவிலும் மருத மலையில் உள்ள முருகன் திருக்கோவிலும் கண்டு களிக்கத்தக்கவை. இம்மாவட்டத்திலுள்ள பவானி அணைக்கட்டு பார்க்கத்தக்க ஓர் அழகிய சுற்றுலா இடம் ஆகும்.

### காடு வளம் காண வாரீர்

தமிழ்நாட்டில் எண்ணற்ற வெப்ப மண்டலக் குறுங்காடுகளும், பெரும் புதர்களும் உள்ளன. அவற்றில் வகைவகையான தாவர இனங்களையும், விலங்கினங்களையும் காணலாம்.

### மான்கள் பூங்கா, கிண்டி

புதர்கள் மண்டிய பசுமை கொஞ்சும் பூங்காவாகும் இது. சென்னை நகர எல்லைக்குள் வெப்ப மண்டலப் பகுதிக்குள் அமைந்துள்ள இதில், முப்பதுக்கும் மேற்பட்ட மரவகைகள் உள்ளன. விரைந்து அழிந்துவரும் இந்தியக் கருப்பு நிறக்கலைமான் இனத்தைச் சார்ந்த கணக்கற்ற மான்களுக்கு இங்கே காப்பு வெளி அமைக்கப்பட்டுள்ளது.

### பாம்புப் பண்ணை, கிண்டி

விதவிதமான பாம்புகளையெல்லாம் இந்தப் பண்ணையில் பார்க்கலாம்.

### முதலைப் பண்ணை

சென்னையிலிருந்து 45 கிலோமீட்டர் தொலைவில், மாமல்லபுரம் செல்லும் சாலையில், கோவளத்தை அடுத்து இந்த முதலைப் பண்ணையைக் காணலாம். மாநில அரசின் துணையோடும், உலகக் காட்டு விலங்கு நிதி உதவியோடும் இது இயற்கைச் சூழலில் நிறுவப்பட்டுள்ளது.



### வேடந்தாங்கல்

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நீர்ப் பறவைப் புகலிடங்களில் வேடந்தாங்கலும் ஒன்று. இது சென்னைக்குத் தெற்கே 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள ஏரியில் நெடிய கால்களைக் கொண்ட நாரைகளின் கூட்டத்தைக் காண்பது தென்னிந்தியாவில் வேறு எங்குமே இல்லாத வியக்கத்தக்க காட்சியாகும். அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாதங்களில் பருவ நிலைக்கேற்ப எண்ணற்ற நீர்க்கோழிகள் அங்கே நீந்தித் திளைக் கின்றன. ஆண்டுதோறும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பறவைகள் வரை இங்கே வருகின்றன எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

### முதுமலை

தமிழகத்திலேயே மிகப் பெரிய வனவிலங்குப் புகலிடங்களில் ஒன்றான முதுமலைக்காடு, நீலகிரி மலையில் உள்ளது. உதகமண்டலத்திலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இது இருக்கிறது. இங்கே ஒரே சமயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட புள்ளிமான்கள் கூட்டமும், ஏறத்தாழ 20–30

இந்தியக் காட்டெருமைகள் கூட்டமாகச் செல்வதும் காண்பதற்கரிய காட்சியாகும்.

புலிகள், சிறுத்தைகள், குள்ளநரிகள், கழுதைப் புலிகள், புனுகுப்பூனைகள் முதலானவற்றுக்கும் இது வசதியான உறைவிடம். சாம்பர் என்னும் மான் வகைகள், நான்கு கொம்புகள் உடைய கருப்பு மான்கள், மருண்டோடும் புள்ளி மான்கள், மிகப் பெரிய அணில்கள், குலைக்கும் மான்கள், நீலகிரி ஐபெக்ஸ் எனப்படும் மலை ஆடுகள் அடர்ந்த குரங்குகள் இப்படி விந்தையான விலங்குக் கூட்டத்தையும் இங்கே நாம் காணலாம்.

### ஆனைமலை

கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலைக் காடு வகைவகையான தாவரச் செடி, கொடி, மரங்களுக்குப் பெயர் பெற்ற இடம். காட்டு மான்கள், காட்டு நாய்கள், முள்ளம் பன்றிகள், எருமைகள், யானைகள், புலிகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டுப் பன்றிகள், கருமுயல்கள், பறக்கும் அணில்கள், குள்ளநரிகள், புனுகுப் பூனைகள் முதலான கணக்கில் அடங்காத விலங்கினங்களையெல்லாம் இங்கே காணலாம்.

## ஓய்விற்குகந்த குறிஞ்சி நகரங்கள்

### உதகமண்டலம்

இயற்கை எழிலின் இன்பமெல்லாம் ஊட்டுவதாலோ என்னவோ ஊட்டி என்று சிறப்பாக அழைக்கப்படும் உதகமண்டலம் மலைத் தலங்கள் அத்தனைக்கும் பேரரசியாக விளங்குகிறது. இங்குள்ள 2,633 மீட்டர்கள் உயரம் கொண்ட ‘தொட்ட பெட்டா’ மலையேறிகளுக்கு உவகைக் கிளர்ச்சியூட்டும் அருமையான உல்லாசத் தலம். எழில் மலர்கள் கொஞ்சும் தாவரத் தோட்டங்கள், படகுச் சவாரிக்கேற்ற உல்லாச ஏரி, வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பசுமை கொழிக்கும் தேயிலைத் தோட்டங்கள் இவையெல்லாம்–இந்தியாவில் என்றுமே பசுமை எழில் குன்றாத மலைத் தலங்களில் ஒன்றாக உதகமண்டலத்தை ஒளிவீசச் செய்கின்றன.

இந்நகரை அடுத்து இன்னும் இரண்டு சிறிய மலைத்தலங்கள் உள்ளன. ஒன்று குன்னூர், இன்னொன்று கோத்தகிரி. சிம்ஸ் பூங்கா, லேம்ஸ் பாறை, கேனிங் சீமாட்டி மேடை, டால்பின்ஸ்மூக்கு, ராலைய்யா அணை, லாஸ் அருவி இவையெல்லாம் குன்னூரின் அழகுக் கவர்ச்சிக்கு மெருகு சேர்ப்பவை.

கோத்தகிரியில் கொடநாடு காட்சி முனை, செயிண்ட் கேதரின் அருவி, அரங்கசாமி கல்தூண் மற்றும் கற்பாறை ஆகியவை காணத் தகுந்த இடங்கள். பொதுவாக, நீலகிரி மலைத்தொடர் காபி, தேயிலை, உருளைக் கிழங்கு தோட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். இங்கே தோதர்கள், கோதர்கள், குரும்பர்கள், படகர்கள், பனியாக்கள் ஆகிய பழங்குடி மக்கள் தொன்மைச் சிறப்புள்ள குடும்பத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

### கொடைக்கானல்

மயக்கும் அழகு கொஞ்சும் இந்த மலைத்தலம், கடல் மட்டத்திலிருந்து 2,133 மீட்டர் உயரத்தில் உள்ளது. பிணியகற்றும் பெருமருந்தாகப் பருவ நிலையும் பொருந்தியுள்ள (கோடையில் உச்சவெப்பம் 19.8 டிகிரி சென்டிகிரேடு, குறைந்த வெப்பம் 11.3 டிகிரி சென்டிகிரேடு) இந்த மிடுக்கான மலை நகரில் பகற்பொழுதில் அதிக நேரம் கதிரவனின் ஒளிக்கதிர்கள் பொன்முலாம் பூசுகின்றன. படகு விளையாட்டுப் பந்தயக்காரர்கள் சிந்தை மகிழும் வண்ணம், அணி அணியாகப் படகுகள் பாயும் அழகான ஏரியும் நட்சத்திர வடிவில் காட்சி தருகிறது. பிரியன்ட் பூங்கா, பாறைத் தூண்கள், பெருமாள்குன்று, வெள்ளி நீர் வீழ்ச்சி, கரடிச் சோலை அருவி போன்றவையும், செண்பகனூர் புனித இருதயக் கல்லூரியில் உள்ள தாவர மற்றும் விலங்குப் பொருட் காட்சியும் கொடைக்கானலை நோக்கி நம் உள்ளத்தைக் கொள்ளையிட்டுச் செல்வனவாகும்.



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர்கள் இவையெல்லாம் சேர்ந்து கொடைக்கானலை இயற்கை அன்னையின் எழில் கூடமாகவே மாற்றி விட்டிருக்கின்றன.

### ஏர்க்காடு

அமைதி தவழும் ஓய்வுக்கு உகந்த உல்லாச மலைத்தலம் ஏர்க்காடு.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத்தொடரில் பசுமையும், குளிர்ச்சியும் கொண்டு இது அமைந்துள்ளது.

# மனங்கவர் கடற்கரைகள் கடலோர ஓய்விடங்கள்

### கோவளம்

மாமல்லபுரம் செல்லும் வழியில் ஓய்வுக்கு உகந்த ஊர் இது. அழகிய கடற்கரை ஓட்டல் ஒன்று இங்கே உருவெடுத்துள்ளது.

### மாமல்லபுரம்

தொன்மைச் சிறப்புமிக்க இந்தக் கடற்கரைப்பட்டினம் சென்னைக்குத் தெற்கே 60 கி.மீ. தொலைவிலுள்ளது. கி.பி. 600 முதல் 750 வரை தழைத்துச் செழித்த பல்லவர் காலத்து உளிகள் எவ்வாறெல்லாம் கற்களுக்கு உயிரூட்டிச் சிரிக்கும் சிற்பங்களைச் செதுக்கியுள்ளன என்பதை இங்குள்ள பாறைக்கோவில்கள் பறைசாற்றுகின்றன. மாமல்லபுரம் இன்று கடற்கரை ஓய்விடமாகவும், புகழ்மிக்க சுற்றுலாத் தலமாகவும் பெயர் பெற்று விளங்குகிறது.

### குடவரைக் கோவில்கள்

மாமல்லபுரத்தில் உள்ள ஒன்பது குடவரைக் கோவில்களில், கிருஷ்ண மண்டபம் காட்சி எழிலுக்குப் பெயர்பெற்றது ஆகும். மகிஷாசுரமர்த்தினிக் குகையின் ஒரு புறத்தில் மகாவிஷ்ணு கம்பீரமான கோலத்துடன் (அனந்த சயனமாகப்) பள்ளி கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மறுபுறத்தில் எருதுத் தலையுள்ள அசுரர்களோடு காளிதேவி போராடுவதைக் காணலாம்.



### கடற்கரைக் கோவில்

கடல், புயல், வெயில், காலச்சுழல் இவற்றின் தாக்குதல்களுக்கெல்லாம் தப்பித் தலைநிமிர்ந்து நிற்கிறது இந்தத் தொன்மையான கற்கோவில்.

### அர்ச்சுனன் தபசு சிற்பப் பாறை

உலகிலேயே மிக நீளமாக மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கற்பாறைக் கலைப் பெட்டகம் இது. திமிங்கிலத்தின் முதுகு வடிவில் அமைந்த பாறையில் செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பங்கள் இடையிலே பிளவு கொண்டதாகக் கடலை நோக்கி நிற்கிறது.

### ஐந்து ரதங்கள்

மாமல்லபுரத்தில் குகைக் கோவில்களுக்குத் தெற்கே இந்த ஐந்து இரதங்கள் அமைந்துள்ளன. இவை ஐந்தும் ஒரே பாறையில் செதுக்கப்பட்ட சிறப்புக் கொண்டவை. இவை பஞ்ச பாண்டவர் இரதங்கள் என வழங்கப்படுகின்றன.

### இராமேசுவரம்

இந்தியாவின் மிகப் புனிதமான மிகப் பெரிய யாத்திரைத் தலங்களில் இராமேசுவரம் ஒன்று. இது இராமாயண இதிகாசக் கதையை ஒட்டி எழுந்த கோவிலைக் கொண்டது. இக்கோவிலில் வேறெங்கும் காண முடியாத வியப்புக்குரிய மிக நீளமான உள்மண்டபப் பிரகாரம் உள்ளது.

### கன்னியாகுமரி

இந்தியாவின் தென்கோடி முனையில் கன்னியாகுமரி இருக்கிறது. முக்கடல் முத்தமிட்டுத் தாலாட்டும் கன்னியாகுமரிக்குள்ள மாபெரும் மாட்சி, அங்கு நாம் காணும் கதிரவன் கடலில் மறையும் காட்சியாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முழுநிலவு நாளில் சூரியன் மறைவும் நிலவின் உதயமும் ஒரே நேரத்தில் நிகழும் அற்புதமான காட்சியைக் காணக்கூடிய ஒரே இடம் கன்னியாகுமரி தான். பனை ஓலைகளால்



செய்யப்படும் பொருட்களுக்கும், சங்கு மாலைகளுக்கும் இப்பகுதி பெயர் பெற்றது ஆகும்.

### கன்னியாகுமரி அம்மன்

கன்னித் தெய்வமான கன்னியாகுமரிக்கு இங்கே அழகிய ஆலயம் ஒன்று உள்ளது. பெரும்பாலோரால் இந்தியாவுக்கே விழிப்பு மிக்க காவல் தெய்வமாகக் கருதப்படுகிறாள் குமரி அன்னை.

### காந்தி நினைவு மண்டபம்

இந்தியாவின் தந்தை காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்னால், எங்கே பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டிருந்ததோ, அங்கே - அதே இடத்தில் இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

### விவேகானந்தர் நினைவுப் பாறை

கன்னியாகுமரி கோவிலுக்குத் தென் கிழக்காக, கடலில் இரு பாறைகள் உள்ளன. அவற்றில் ஒரு குன்றின் மீது அமர்ந்து, விவேகானந்தர் சில நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். 1970-ல் அவரது நினைவாக ஒரு மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ளது. இந்தியாவின் கட்டடக் கலை எழில்கள் அத்தனையின் முழுமையான கலவையாக இது ஒளிர்கிறது.

### வள்ளுவனின் வானுயரச் சிலை

கன்னியாகுமரியின் விரிகடல் பரப்பில் உலக அதிசயங்களில் ஒன்றென திகழும் வான்புகழ் வள்ளுவனின் 133 அடி உயரம் கொண்ட வானுயரச் சிலை முதலமைச்சர் கலைஞர் அவர்களால் புத்தாயிரம் ஆண்டின் முதல் நாளான 1-1-2000 அன்று திறக்கப்பட்டது. இச்சிலை கண்ணையும் கருத்தையும் கொள்ளைக் கொள்ளும் எழிலுடன் விளங்குகிறது. சுற்றுலா பயணிகளை தன்பால் ஈர்க்கின்றது.

## இசை பாடும் எழில் அருவிகள்

### குற்றாலம்

தீராத நோயெல்லாம் தீர்த்து வைக்கும் மூலிகைகளின் தாயகமாக விளங்கும் குற்றால மலை அருவி உடலுக்கு நலம் தருகிறது. வெள்ளியே உருகி விழுந்தாற்போல் அங்கு விழும் நீர் வீழ்ச்சியில் நீராடுவதே பேரின்பம். ஜூன் முதல் செப்டம்பர் வரை இங்கே பக்குவமான பருவநிலை ஆகும்.

## ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி

பாய்ந்து விழும் நீர்வீழ்ச்சியால் மேனி எழும் நீர்த்திவலைகள் புகைப்படலம் போன்ற எழில் தோற்றம் தருகின்றன. அதனாலேயே ‘ஒகேனக்கல்’ என்ற பெயர் இதற்கு வந்துள்ளது. விரைந்து கொட்டும் நீர்வீழ்ச்சி, அடர்ந்து செறிந்த மரக்காடுகள், பசுமை கொழிக்கும் இயற்கை எழில்கள் ஆகியவற்றின் அழகுச் சோலையான ஒகேனக்கல் விடுமுறையைக் கழிக்க ஏற்ற இடம் இது.

## காண்போர் விபக்கும் கைவினைப் பொருட்கள்



கலைநுட்பம் வாய்ந்த கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத் தனித்தன்மையுடனும், சிறப்பு அம்சங்களுடனும்புத்தம்புது வகைகளில் உருவாகும் தமிழ்நாட்டு கைவினைப் பொருட்கள் உலகம் முழுவதும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. தறியிலே நெய்யப்படும் புடவையும் சரி, சக்கரத்தில் வனையப்படும் மண் பானையும் சரி, கலைமுத்திரை பதிந்த கவினழகுச் சின்னங்களாகவே உருவாகின்றன. நெடுங்காலமாகவே தமிழ்நாட்டில் கோவில்கள் சமய, சமுதாய அமைப்பின் மையமாக விளங்கி வந்திருக்கின்றன. வண்ணத் துணிகள், மெல்லிய நெட்டி மாலைகள், நேர்த்திமிக்க உலோகச் சிலைகள் - ஒவ்வொன்றும் கலை எழில்மிக்க கைவினைப் பொருட்களாம். சிவன் - பார்வதி வெண்கல விக்கிரகங்கள், நடராசர் சிலை, திருமால், இலட்சுமி சிலைகள் ஆகியவை நுட்பம் செறிந்த கைவினைத் தொழிலுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கலைஞர்களின் அருமையான அழகுப் படைப்புகளாகும். பனை ஓலைகள், கோரைப் புற்கள், போன்றவற்றால் செய்யப்படும் விளக்குக் குல்லாய்கள், பூக்கூடைகள், கைப்பைகள் முதலான பயன்படு பின்னல் பொருட்களை அழகுறப் படைப்பதிலும் தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை முதலான இடங்களில் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் எழில் வடிவங்களில், பட்டிலும், பஞ்சிலும் பாங்காக நெய்யப்படும் வண்ணப் புடவைகள் கண்ணைப் பறிப்பவையாகும்.

இவ்வாறு இதயம் கவரும் சுற்றுலாத் தலங்கள் தமிழ்நாட்டில் இவை மட்டுமல்ல, இன்னும் பல உண்டு, இவை அவற்றுள் குறிப்பிடத்தக்க சில!

★ ★ ★

# ஒரு மனிதன்

■ எம்.வி.வெங்கட்ராம்

மிதமான குடியால் உண்டான மிதமிஞ்சிய உற்சாகத்துடன் வெளிவந்தபோது, மழை முரட்டுத் தனமாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. நனையாமல் காத்துக் கொள்ள நான் 'மழைக் கோட்டும்' கொண்டு வரவில்லை. எங்காவது தங்கி இரவைக் கழிக்கலாம் என்றால், துணையில்லாத தூக்கத்தில் இனிமை ஏது? உடலையும் மூளையையும் ஒட்டிக்கொண்டிருந்த உற்சாகத்தைச் சேதமாக்காமல் அழகாக நனைந்து கொண்டே ரயில்வே ஸ்டேசனுக்குச் சென்றுவிடுவதே நலம் என்று நிச்சயித்து, கால்சட்டையை முழங்கால்கள் வரை மடித்துவிட்டுக் கொண்டு புறப்பட்டேன்.

மழையில் நனைந்து கொண்டே இரவில் தனியாக நடந்து செல்லுவதிலும் இன்பம் இருக்கிற தல்லவா? அந்த இன்பத்தை 'சீட்டி' அடித்து அனுபவித்துக் கொண்டே ஸ்டேசனுக்கு விரைந்தேன். பிளாட்பாரத்தில் நின்றது ரயில்; புறப்படுவதற்கு இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்கள் தான் பாக்கி, அவசர அவசரமாய் டிக்கட் வாங்கிக் கொண்டு சேற்றை வாரி இறைக்கும் பூட்ஸ்கள் கால்வாரி விடாதபடி ஓடி ...

ஒரு வண்டி – நாலு பேர் படுக்கலாம். ஒரே ஒரு வெள்ளைக் காரனைத் தவிர காலியாகக் கிடந்தது. அவனும் தூங்கிக் கொண்டிருந்தான்; கதவைத் தள்ளினேன்; உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. திறந்து கிடந்த ஜன்னல் வழியாக நான் உள்ளே ஏறிக் குதிக்கவும், ரயில் ஊதவும் சரியாக இருந்தது.

முதலில் என்னைக் கவனித்துக் கொண்டேன். ஈர உடைகளைப் பிழிந்ததும், தொப்பியை உதறிக் கொண்டும், 'அப்பாடா', என்று அலுத்துக் கொண்டே படுத்திருந்த ஆளைக் கவனித்தேன். அவன் அசல் வெள்ளைக்காரன்; அசல் என்றால் அசல் தான், கருப்பு மனைவிக்கும் வெள்ளைக் கணவனுக்கும் பிறக்கும் 'அரை ஜாதி' அல்ல; நேராக எங்கோ மேற்கு நாட்டிலிருந்து வந்தவன். நல்ல வெள்ளை நிறத்தை நீளமாய்ப் பரப்பி நன்றாய் உறங்கிக் கொண்டிருந்தான்; வெண்மை படுக்கையில் கூட அழகாகவே இருந்தது. அதிலும் ஆச்சரியம் என்னவெனில், அவன் தன் உடுப்பைக் கழற்றவே இல்லை. கால் சட்டை (பாண்ட்), கோட், பூட்ஸ்கள், நெக்டை, ஏன்? மூக்குக் கண்ணாடியைக் கூட அவன் கழற்றவே இல்லை. லேசாக மேலும் கீழும் போய் வரும் மார்பு–ரயிலின் ஆட்டத்தினால் அசையும் உடம்பு– அவனைப் பார்த்தால் ஒரு அழகான பொம்மையைப் படுக்க வைத்திருப்பது போலத் தோன்றியது.

நான் வருத்தத்துடன் நினைத் தேன்; 'எவ்வளவுதான் நாங்கள் – அதாவது, பனிக்கட்டி போன்ற நிறம் படைத்த அல்லது நிறத்துடன் படைக்கப்பட்ட நாங்கள் – எவ்வளவுதான் 'மேற்கு மோஸ் தருக்குள் உடம்பைத் திணித்துக்



கொண்டாலும் அசல் மேற்கத்தி யானுக்கு உள்ள கம்பீரமோ நேர்த்தியோ உண்டாகப் போவ தில்லை. பிறவியுடன் வருபவை அவை; அவைகளை அடைபவர்கள் பாக்கியசாலிகள்!

“ஆனால், பிறந்து விட்டோம் இப்படி, அந்த நிறத்துடன், அந்த நாட்டில்; எப்படியாவது வாழ்ந்து முடிக்க வேண்டியதுதான். குறைந்த பட்சம் மேற்கு முறையில் நம்மை உயர்த்திக்கொள்ள முயற்சியாவது செய்ய வேண்டியது பொறுப்பு, கடன் ....”

நான் உட்கார வேண்டும். முடிந்தால், ஈரவுடையுடனேயே கொஞ்சம் கைகால்களை நீட்டிக் கொண்டு படுக்கவாவது வேண்டும். அவன் – கண் அயரும் என் மேற்கத்தித் தோழன் – ஒரு 'பெர்த்தில்' தூங்கிக் கொண்டிருந்தான். கீழுள்ள மற்றொரு 'பெர்த்தி'லாவது படுக்கலாமா என்று பார்த்தேன். அங்கே உடைக்காத பிராந்தி பாட்டில் ஒன்று, ஒரு காலி பாட்டில், சிகரெட் பெட்டி ஒன்று, ஒரு தீப்பெட்டி, ஒரு வாக்கிங் ஸ்டிக், எல்லாவற்றையும் விட பயப்படும்படியாக ஒரு கைத்துப்பாக்கி கிடந்தன. எல்லா வற்றையும் கீழே எடுத்து வைத்து விட்டுப் படுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை.

“ஒருவேளை இந்த கம்பார்ட் மெண்ட் முழுவதும் அவன் ரிஸர்வ் செய்திருப்பானோ?'' என்று நினைத்தேன். அப்படியாயின் இந்த வண்டியில் ஏறியதே தப்பு. என் தூங்கும் தோழன் விழிப்பில் சாதுவாக இருந்தால் மன்னிப்பு கோரித் தப்பிவிடலாம். அதுவும் அவனுடைய உயர்ந்த பண்பாட்டிற்கு சிஷ்யனாகத் தோற்றம் அளிக்கும் நான் மன்னிப்பு கோரினால் அவன் அளித்துக் கொஞ்ச நேரம் பேசவும் செய்யலாம். ஆனால் அவன் சாதுவாக இராமல் முரடனாக இருந்தால்? கைத்துப்பாக்கி .....

அதைப் பார்த்தேன்; சட்டம் என்றால் 'சட்டம் தான்' என்று நினைத்து, சொல்லி, செய்யும் வெள்ளைக்காரனின் முன் கோபத்திற்குப் பாத்திரம் ஆகிவிட்டால் அவன் என்னை நாயைப் போல் சுட்டுக்கூட தள்ளலாம் ....

நான் அதற்காகப் பயந்து விடவில்லை. இன்னும் நான்கு மணி நேரத்திற்கு மேலாகும் ரயில் புனாவை அடைய – அதுவரையில் மேல் 'பெர்த்தில்' சந்தடி செய்யாமல் படுத்திருக்கலாம் என்று முடிவு கட்டி, மற்றொரு முறை அந்த அழகான வெள்ளைப் பொம்மையைப் பார்த்து பெருமூச்சு விடுத்து, மேலே ஏறி, ஈரவுடலைத் தளர்த்தினேன்.

ஈர நாய் உதறிக் கொள்வது போல் ரயில் இடமும் வலமும் புரண்டு

நின்றது. கீழே படுத்துள்ள தோழன் விழித்துக் கொண்டு என்னைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக மூக்கைக் கையால் பிடித்துக் கொண்டு மூச்சை வெளியில் விட்டேன். வீண் கலாட்டா எதற்கு, அதுவும் ஒரு வெள்ளைக்காரனுடன் என்பது தான் என் அடக்கத்திற்குக் காரணம்; பயம் அல்ல. இல்லவே இல்லை.

கீழே, ஜன்னலிலிருந்து யாரோ கூப்பிட்டார்கள். ''ஜான்!'' படுத்திருந்தவன் பதில் அளித்தான். ஓ, இருக்கிறேன்."

பிறகு கீழிருந்த ஆள் ஜன்னலுக்கு நடந்து செல்வது தெளிவாய்க் கேட்டது. சாதாரணமாகவே வெள்ளையர் நடக்கும் போது, குதிரை மலை மீது ஓடுவது போல சத்தம் கேட்கும்.

கீழே குரல்கள் பேசின; மறந்து விட்டேன். படுத்திருந்த ஆளின் குரல் கிளாரிநெட் வாசிப்பது போல் 'ஙொய்ங்' என்றிருந்தது.

வெளிக்குரல்; "உடம்பு எப்படி இருக்கிறது?"

உள் குரல், "நல்ல தூக்கம்".

''மார்வலி இல்லையே? அந்த டோஸ் எடுத்துக் கொண்டாயா?"

"ஓ! மார்வலி இல்லை".

"பிராந்தி, இருக்கிறதா?"

"இருக்கிறது ..... ஆனால் உடம்பு தான் ரொம்ப கனக்கிறது; புனாவுக்குப் போக இன்னும் நாலுமணி நேரமாவது ஆகும். நான் உடம்பை லேசாக்கிக் கொள்ளட்டுமா?"

''செய். ஆனால் ஜன்னலை நன்றாக மூடிவிடு, வெளியிலிருந்து யாரும் பார்க்க முடியாதபடி."

"ஓகே!"

ரயிலின் குரல் அவர்களைப் பிரித்தது; வெளிக்குரல், "அடுத்த ஸ்டேஷனில் பார்க்கிறேன்." என்று சொல்லிவிட்டு ஓடியது

அந்தச் சம்பாஷணை எனக்கு அதிசயமாக இருந்தது. உடல் கனத்தைக் குறைக்க நண்பனின் அனுமதியை ஏன் கேட்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை; ஆடைகளைக் கழற்றுவதானால் யாரும் பார்க்காதபடியாய் ஜன்னலைக் கெட்டியாக மூடும்படி நண்பன் ஏன் யோசனை கூற வேண்டும்? ஒரு வேளை... ஒரு வேளை... முழுக்க முழுக்க உடையின் கனத்தை குறைக்க ....

சே, வெள்ளையர் காட்டு மிராண்டிகள் அல்ல; சூரியன் எப்படிக் கொதித்தாலும், அவர்கள் உடை குறைக்கமாட்டார்களே...

அவர்கள் பேசியதன் பொருள் என்னவென்று புரியவில்லை...

ஜன்னலை—கண்ணாடி உள்பட—இறுக மூடிவிட்டு...பிறகு 'கடபுட' வென்று சிறிது நேரம் கீழே ஏதேதோ சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் அசையவே இல்லை. இன்னும் சிறிது கழிந்து, கீழே மௌனம் நிலவியது.

அவன் என்னதான் செய்கிறான் என்று பார்க்கத் தோன்றியது; ஒருபுறம் கூச்சமாகவும் இருந்தது. தலைமையை மட்டும் மெதுவாய்க் கீழே நீட்டிப் பார்த்தேன்;

மறு நிமிஷம் 'ஐயோ' என்று வாய் தொண்டைக்குள் மானசீகக் கதற, கைகள் தாமாக ஊன்ற கால்கள் பாய, மார்பு படபடக்க எழுந்து உட்கார்ந்தேன்.

அழகாய்ப் படுத்திருந்த வெள்ளைக் காரன் அங்கே இல்லை; அவனுக்குப் பதிலாக தாறுமாறாகவும் கோரமாகவும் வெட்டுண்டது போன்று ஓர் அரை உடல் அங்கே கிடந்தது!

நான் எதற்கும் பயந்ததில்லை; ஆனால் இப்போது பயந்துவிட்டேன். உன்னால் பயப்படாமல் இருக்க முடியுமா, கேட்கிறேன்? கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஓர் ஆளைத் தனியாகப் பார்க்கிறாய்; ஆனால் திடீரென்று அவன் இருக்கும் இடத்தில் பார்வைக்கே பயங்கரமான அரை உடல் கிடந்தால் பயப்படாமல் இருக்க முடியுமா உன்னால்? கண்கட்டு வித்தை நடக்கும் இடம் அல்ல என்பதையும் மறந்துவிடாதே.

நீ எப்படி பயந்திருப்பாயோ, நானும் பயந்துவிட்டேன். கீழே பார்க்கவும் எனக்குப் பயமாக இருந்தது. சிரித்து பயத்தை விரட்டலாம் என்று நினைத்தால் சிரிப்பும் வாயை இளித்துவிட்டது. ரயிலில் இருந்து இறங்கிவிடலாம் என்றால் அது தலை கிறுகிறுக்கும்படி ஓடிக் கொண்டிருந்தது. அபாயச் சங்கிலியை இழுக்கலாமே என்று நீ சொல்லலாம். ஆனால் அபாய காலத்தில் அந்த நினைப்பே உண்டாவதில்லையே!

பயம் ஐந்து நிமிஷங்களைச் சாப்பிட்டபின், என்னைத் தட்டி கொடுத்து சமாளித்துக் கொண்டேன். உயிராசை ஒருபுறம் இழுக்க, பயம் மறுபுறம் இழுக்க, இறுதியில் பயம் சிறிது பின்வாங்கியது.



பேய் பிசாசுகளைப் பற்றி நான் எப்போதும் நம்பியதில்லை; 'எப்போதும்' என்று சொல்லுவதில் பொய்க்கலப்பு இருக்கிறது; சிறு வயதில் இருட்டில் கூட போக மாட்டேன்; விவரம் அறிந்தபின் நான் பேய் பிசாசுகளை நம்பியதில்லை. அவை ரயில் பிரயாணம் செய்ததாய், ...அதுவும் மனித நண்பர்களுடன். ..நான் கதையில்கூட படிக்கவில்லை. ஆகவே கீழே கிடப்பவன் ... அல்ல, ...கிடப்பது பேயோ பிசாசோ அல்ல.

பின்?

அவன் தன்னைத் தானே வெட்டிக் கொண்டிருப்பானா?

இது பைத்தியக்கார எண்ணம். வெட்டிக் கொள்ளும் போது ஒருத்தன் கூச்சல்கூட போடமாட்டானா? வெள்ளைக்காரனுக்கு ரத்தம்கூட உண்டு; இல்லையா.

என்ன யோசித்தும் எனக்கு சமாதானப் படவில்லை. யோசனையால் அச்சம் மங்கலுற்று விட்டது. குனிந்து நன்றாய்ப் பார்த்தேன்.

'பாண்ட், கோட்' இல்லாமல் ஒரு ட்ரௌஸர் மட்டும் அணிந்துகொண்டு அந்த உருவம் கிடந்தது. வலது கையும், வலது காலும் இருக்கவேண்டிய இடங்கள் காலி; மார்பின் வலப்பாகம் சரிந்திருந்தது. எல்லாவற்றிலும் கோரம், அந்த உருவத்திற்கு மூக்கே இல்லை.



நான் முதலில் பார்த்த பொம்மை அழகுக்குப் பதிலாகப் பயங்கரமான ...அல்ல; அசிங்கம், சே, அசிங்கமான உருவம்...

நினைப்பில் தடுமாறி என் கால் ஒன்று கீழே சாய்ந்து சப்தம் எழுந்தது.

'யாரது?' என்றது உருவம், குயிலொத்த குரலில்.

நிர்ப்பந்தத்தால் கீழே இறங்கினேன். உருவம் கண்களையும் திறந்துவிட்டது; வலது கண் இருக்கவேண்டிய ஸ்தானத்திலிருந்து ஒரு பள்ளம் முறைத்தது; அங்கே கருவிழி, ஒன்றுமே இல்லை! மொத்தத்தில் அந்த உருவம், மனித உடலின் இடது பாதியாகத் தோன்றியது...

"யார் நீ" அதுவும் பயந்துள்ளது என்று அதன் குரலும், இடது கண்ணும் சாட்சி சொல்லின.

"நானா?. ..நான்..." என்று குழறினேன்.

"நீ எப்படி இந்த வண்டியில் வந்தாய்?" அந்த வெள்ளை அரை உடல் தன் இடது கையை ஊன்றி எழுந்திருக்க முயன்றது; முடியாமல் கீழே தொப்பென்று சாய்ந்தது; மீண்டும் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்துவிட்டது.

"இது ரிஸர்வ் வண்டி என்று உனக்குத் தெரியாதா? கறுப்பு நாயே உனக்குப் புத்தி இல்லையா?"

கடவுளே! உனக்கு (கடவுளுக்கு அல்ல, உனக்கு) இந்த மாதிரி அனுபவம் ஏற்படவே கூடாது. எமனுக்கும் பதில் சொல்லிவிடலாம்; அரை உடலுடன் பேசுவது என்றால்...

"தெரியாமல்..."

"உடம்பு கறுப்பு என்றால் புத்தியுமா கறுப்பு உனக்கு?"

இருமியது; மறுபடி மெத்தைமீது விழுந்து இடக் கையால் சரிந்திருந்த மார்பின் வலப்பாகத்தை தடவிக் கொடுத்தது. அதனுடைய முணுமுணுப்பின் அர்த்தம் நான் நாசமாய்ப் போக வேண்டும் என்பதுதான். நான் ஏன் பேசுகிறேன்?

"ஏய், அந்த பெர்த்மீது, பாட்டிலுக்குப் பக்கத்தில் கிடக்கிறதே சின்ன சீசாவிலிருந்து இரண்டு துளி வாயில் ஊற்று".

அப்படியே செய்தேன். உலகத்தை ஆட்டும் மகா சக்தியின் கட்டளைக்குப் பணிவதுபோல்.

சிறிதுநேரம் அந்த உருவம் துடிதுடித்தது. கழுத்து அறுபட்டதும், கோழி துடிக்குமே. அதுபோல.

கடவுளே, புனாவைக் கொஞ்சம் முன்னாலாவது அனுப்பக்கூடாதா?... என்று என் நெஞ்சு துடிதுடித்தது.

கொஞ்ச நேரத்தில் அந்த உருவம் நிதானமுற்றது. இடது விழியையும் வலது பள்ளத்தையும் விழித்த அந்த பார்வை!

மறுபடியும் அது கஷ்டப்பட்டு எழுந்து அமர்ந்தது.

"நீ எப்போது இங்கே வந்தாய்?" அதன் குரலில் அதிகாரமோ ஆத்திரமோ இல்லை; சாதா உணர்ச்சி ஒலித்தது. நான் உண்மையைக் கூறினேன்.

"அப்படியானால் நீ என்னை உடையுடன் பார்த்திருக்கிறாய்!"

நான் ஒப்புக்கொண்டேன்.

"உட்காரேன்" என்ற குரலில் சாமானியத்தன்மை மட்டும் அல்ல, ஒரு விதப் பணிவும் இருந்தது. உட்கார்ந்தேன்.

"பிராந்தி கொஞ்சம் சாப்பிடுகிறாயா. எடு..."

எடுத்துக் கொடுத்தேன்; நான் சாப்பிடவில்லை. இடது கையில் கிளாஸைப் பிடித்து குடித்துக்கொண்டே அந்த அரை உடல் கேட்டது; என்னை இப்படிப் பார்க்க உனக்குப் பயமாக இல்லையா?"

நான் இப்போது பயப்படவில்லை. அந்த உருவம் பேய் பிசாசு அல்ல என்று எனக்கு நிச்சயமாகிவிட்டது. சாதாரண மனித ஜன்மம்; ஆனால் வெள்ளைப் பிறப்பு.

"நீ கொடுத்தாயே, சின்ன சிசாவிலிருந்து மருந்து. அது மார்வலிக்கு..."

அதற்கு சிகரெட் பற்ற வைத்துக் கொடுத்தேன்.

"ஆடை எல்லாம் அணிந்திருந்த போது நான் எப்படி இருந்தேன்?"

"உம்" என்ற முனகலின் பொருள் வைத்துப் பதில் சொன்னேன்.

"இப்போது?"

பதிலை வேண்டுகிற கேள்வி அல்ல அது; பதில் அந்த உருவிலேயே இருந்தது. இடது கண்ணில் நீர் படிந்தது; வலது பள்ளத்தின் அடியில் நீர் ஊற்று இருக்கலாம். தென்படவில்லை. அந்த உருவம்... பாவம், மனிதன் என்று சொல்ல முடியாவிட்டாலும், அரைமனிதன் என்பதால் என்ன நஷ்டம்? அரைமனிதன் வருந்தினான்.

"நான் பிறவிலேயே இப்படி இருந்தேன் என்று நினைக்கிறாயா?"

அவனை அறிய வேண்டும் என்ற ஆவல் எனக்கும் அதிகமாய் இருந்தது.

"நான் குழந்தையாக இருக்கும் போது ரொம்ப அழகாய் இருந்தேன். என் தாயாரின் குழந்தைகளில் நான்தான் ரொம்ப அழகு என்று பெருமைப்படுவாள். இப்போது அவள் என்னைப் பார்த்தால்...நல்லவேளை! அவள் போய்விட்டாள், அவள் ஆன்மா சாந்தி அடைவதாக!"

அரைமனிதன் பெரிய மூச்சு ஒன்றைச் சீறினான்; அதாவது, மூக்கு இருக்கவேண்டிய இடத்திலிருந்த துவாரத்திலிருந்து 'புஸ்ஸ்' என்ற சத்தம் வந்தது.

''எத்தனை பெண்கள் என் காதலைவேண்டி என் பின்னால் அலைந்தார்கள்? எத்தனை பெண்களுடன் நான் காதல் நாடகம்...சட்டத்திற்கு விரோதமாக... நடத்தினேன்! இப்போது மேரிகூட என்னைப் பார்க்கப் பயப்படுவாள்..."

''மேரி யார்'' என்றேன்; என் ஆத்திரம் எனக்கு.

அவனுடைய இடது கண் ஒரு முழு சூரியனைப் போல பிரகாசித்தது.

"மேரி என் கண்மணி. என் காதலி. என் உயர்வான பாதி! இலண்டனிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் நடனவிருந்து நடக்கும்போது அவளைச் சந்தித்தேன். கன்னியர் கும்பலில் அவளிடம் என் மனம் ஏனோ சென்றது. டான்ஸுக்கு அவளை அழைத்தேன்...அந்த டான்ஸை நினைத்தாலே...ஆஹா! எவ்வளவோ பெண்களுடன் ஆடியிருக்கிறேன்; ஆனால் அவள் எவ்வளவு ஹிதமாக இருந்தாள்! மறுநாள் விருந்தாளியாக அவளால் அழைக்கப்பட்டேன்..."

"தனியாகவா இருந்தாள்".

''இல்லை, தகப்பனாருடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். விருந்தின் போது அவளுடைய தகப்பனாரிடம் என் நிலைமையைச் சொல்லி, அவளை மணக்க விரும்புவதையும் ஜாடையாகச் சொன்னேன். நல்ல மனுஷர், ஒப்புக் கொண்டார். பிறகு அவளிடம் தனிமையில் என் காதலை விவரித்து விவாகத்தைப் பிரேரேபித்தேன்... அப்போது அவளுடைய முகம் எப்படி சிவந்தது! ரோஜா, ரோஜா!"

புனா நெருங்கிக் கொண்டிருந்தது அரைமனிதனின் காதல் காப்பியத்தைக் கேட்டுக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. கதையின் முடிவுக்கு அவனைத் துரத்தினேன்.

"நீ எப்படி இப்படி மாறினாய்?"

அரைமனிதன் பரிதாபமாய்ச் சொன்னான், "மேரி என்னை இனி திரும்பியும் பார்க்கமாட்டாள். நான் எந்தப் பெண்ணுடனும் டான்ஸ்கூட செய்ய முடியாது! ஐயோ, நான் செத்திருக்கக் கூடாதா?..."

''மனைவியின் காதல் உனக்கு ஆறுதல் அளிக்கும்...''

''யார் கண்டார் அவளுக்கோ இளம்பருவம்... நான்...என்னை மனிதன் என்று யாரும் கூறமுடியாது. எனக்குக் கலியாணமாகி மூன்று வருஷங்கள் தான் ஆகின்றன. என்னால் அவளுக்கு இரண்டுமாதங்கூட சுகம் இல்லை... அந்த பாழும் ஜெர்மன் எருமைகள் எதற்காகவோ சண்டை ஆரம்பித்து விட்டார்கள்; அவர்கள் நாசமாய்ப் போக! எனக்கு யுத்தத்தில் சேருவதற்கு இஷ்டமில்லை; ஆனால் சர்க்காரின் கட்டளையை யாரால் மீறமுடியும்? ஜெர்மானியனோடு சண்டை போட்டு உயிர் விட்டாலும் கௌரவமுண்டு. இந்த மஞ்சள் பேய்களுடன் குள்ள ஜப்பானியர் களுடன் சண்டை போட என்னை அனுப்பிவிட்டார்கள். அஸ்ஸாமில் ஜாப்கள் குண்டு போட்டார்கள் அல்லவா. அப்போதுதான் எனக்கு உடம்பெல்லாம் காயம். ஒரு கையும் ஒரு காலும் போச்சு, ஒரு கண்ணில் கண்ணாடி புகுந்தது! மூக்குக் காணாமல் போய்விட்டது. இதோ இந்த மார்பைப் பார், ஒரு பக்கம் சரிந்துள்ளதல்லவா? அடிக்கடி சகிக்க முடியாதபடி வலி எடுக்கிறது. அதற்கு மருந்து, என் மண்டையைப் பார்..."

பார்த்தேன். ஒட்டு போட்டாற் போலத் தோன்றியது இரு பிளவாக.

"என் மூளைகூட சரியாக வேலை செய்வதில்லை? அதற்காகவும் அடிக்கடி மருந்து சாப்பிடுகிறேன்.. .இவ்வளவும் போன பிறகு உயிர்மாத்திரம் ஏன் தப்பியதோ தெரியவில்லை. ஆஸ்பத்திரியில் ஒரு வருஷம் கிடந்தேன்; என்னைக் கொன்றுவிடும்படி டாக்டர்களைக் கெஞ்சினேன். என் மூளை மிகவும்



நான் இப்போது பயப்படவில்லை. அந்த உருவம் பேய் பிசாசு அல்ல என்று எனக்கு நிச்சயமாகிவிட்டது. சாதாரண மனித ஜன்மம்; ஆனால் வெள்ளைப் பிறப்பு.

உயர்ந்ததாம்; கைகால் எது போனாலும் அது நாட்டுக்கு உபயோகப்படுமாம். அதற்காக என் உயிரை உடலுடன் ஒட்டிவைத்து விட்டார்கள். பாவிகள்! ஆனால் என் மூளை சரியாக இல்லையே!"

அரைமனிதனின் புலம்பல் எனக்கு இரக்கத்தை உண்டாக்கியது. சிறிது கழித்து கேட்டேன், "நான் முதலில் பார்க்கும்போது நீ முழுமனிதன் போல் இருந்தாயே?"



கொஞ்ச நேரத்தில் அந்த உருவம் நிதானமுற்றது. இடது விழியையும் வலது பள்ளத்தையும் விழித்த அந்த பார்வை!

"அந்த கண்ராவியைப் பார்க்கிறாயா? இதோ, இந்த கோட்டையும் பாண்டையும் எடுத்துப் பார்..."

அந்த இரண்டிற்கும் கீழே கட்டையால் செய்யப்பட்ட ஒரு கை, ஒரு கால் பூட்டுடன்!...ஒரு போலி மூக்கு, மூக்குக்கண்ணாடி, சின்ன மருந்து சீசா...இவ்வளவையும் தரித்துக் கொண்டால் அவன் முழுமனிதன் போலக் காட்சி அளிப்பான்!

எனக்கு ஒரே திகைப்பு; நீக்கிவிட அவன் விரும்பவில்லை போலும்.

"பத்து நிமிஷத்தில் புனா வந்துவிடும். நீ கொஞ்சம் ஜன்னலுக்கு வெளியில் பார்த்துக் கொண்டு இரேன்".

என் தலையை வெளியே அனுப்பினேன். சுமார் பத்து நிமிஷங்கள் நான் உள்ளே பார்க்கவே இல்லை.

"சரி" என்றான் அவன்; திரும்பினேன். கைகால் மூக்கு எல்லாவற்றையும் கோர்த்துக்கொண்டு முன் போலவே முழுமையாகத் தோற்றம் அளித்தான் அவன். அந்த போலி மூக்குதான் எவ்வளவு அழகாய் பொருந்தியிருந்தது! 'பொம்மைபோல்' அல்ல, பொம்மைதான் பாவம், அவன் உடல் இப்போது கனமாய்த்தான் இருக்கும்!

அவனுடைய இடது கையில் கைத்துப்பாக்கியிருந்தது. அதை என்னிடம் காட்டிக் கூறினான். "சகிக்க முடிந்தவரையில் சகித்துப் பார்ப்பேன்; கடைசியில் இந்த கைத்துப்பாக்கி இருக்கவே இருக்கிறது. மாய்த்துக் கொண்டு விடுவேன்!"

அவனுடைய பேச்சில் வீரத்தன்மை பீறிட்டது.

புனா ஸ்டேஷனில் ரயில் நின்றது. அவன் தொப்பியைத் தலைமீது வைத்துக்கொண்டான். போலியான வலது கரத்தை கால் சட்டையில் புகுத்தினான். இடது கையில் 'வாக்கிங் ஸ்டிக்கை' எடுத்துக்கொண்டு கம்பீரமாக, ஆனால் சற்று சிரமத்துடன் கதவருகில் சென்றான். பக்கத்து வண்டியில் உட்கார்ந்திருந்த நண்பன் கைலாகு கொடுத்து கீழே இறக்க இருவரும் புறப்பட்டனர்.

"என் நண்பனே, நான் வருகிறேன்" என்று என்னிடம் விடை பெற்றுக் கொண்டு 'டக்டக்' என்று அவன் நடந்ததைப் பார்த்தால், அவன் அரை மனிதன் என்று எவனாலும் கண்டு கொள்ள முடியாது.

அவன் நடந்து செல்வதை பிளந்த வாயுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். வெள்ளைக்காரர்கள் கெட்டிக்காரர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அரை மனிதனை முழு மனிதனாய்த் தோன்றச் செய்யும் சாமார்த்தியமும், அறிவும் உனக்கு எனக்கு உண்டா. வெள்ளைக்காரன், வெள்ளைக்காரன்தான்.

ஆகையால், வெள்ளையரின் ஈடும் இணையும் அற்ற அறிவுக்கு என் வணக்கம் செலுத்துகிறேன்.

**நன்றி :**
**எம்.வி. வெங்கட்ராம் கதைகள்**
**கண்மணி வெளியீடு.**

• • •





# எது வள்ளுவம்?

**ஈரோடு தமிழன்பன்**

விடியும்போது
வானம் வள்ளுவம்;
பொழியும் போது
மழை வள்ளுவம்:

எரிக்கவேண்டியதை எரிக்கத்
தவணை கேட்காத
நெருப்பும்

அற்ப ஆயுளில்
முடிந்து போகாதபடி
அறத்தின் சுவாசப் பைக்கு
அவசியமாகும்
காற்றும் வள்ளுவம்.

கர்ப்பம் தரிக்கும்போது
பூமி வள்ளுவம்.

பயிர்களின் தாகத்தை
நினைத்தபடி பாயும் நதியின்
ஈர ஆன்மாவில்,

இன்றுகளின் உள்ளே இருந்து
கைகால்கள் அசைக்கும்
நாளைகளுக்குப் பால்சுரக்கும்
காலத்தின் மார்புகளில்
வாழ்வாங்கு வாழும் மனிதத்தில்
வாழ்வது வள்ளுவம்.

நட்சத்திர ஒளியில்
நனையும் வார்த்தைகளில்,
விதையுள்ள எண்ணங்களில்
வேர்விடும் உணர்வுகளில்,
மனிதமும் வள்ளுவமும்
கைகுலுக்கிக்கொள்கின்றன.

அடங்கி நிற்பவன்
உயரத்தை அளந்து சொல்ல
மலைகளின் கைகளில்
அளவுகோல்கள் கொடுக்கிறது
வள்ளுவம்.

அது,
அலைகளைப்
பிளந்துகொண்டு வெளியேவந்த
கடலின் ஆழம்
அதிசயிக்கும் படி,
ஆயிரம் ஆயிரம் காணிப் பரப்பளவில்
ஒழுக்கம் உள்ளவர் உள்ளத்தைப்
பயிரிட்டு வைக்கிறது.



வள்ளுவம்
இலைகளில் பசுமையையும்
மலர்களில் வண்ணங்களையும்



எழுதிய கையோடு
மனித
இதயங்களில் அன்பை
எழுதி வைக்கிறது.

நிலாவில்
குளிர்ச்சியை நிரப்பும் முன்
ஞானிகள் நெஞ்சில்
ஊற்றுகள் திறக்கிறது.

அறம்நடுவிழாவை நடத்துவதும்
வள்ளுவம்.

அது
சூரிய வாசனை உள்ள
சொற்களால்
பாடநூல் தயாரித்துச்
சொல்லிக் கொடுக்கிறது
கற்றவழி நடப்பவர்க்கே
பட்டமளிப்பு விழா நடத்துகிறது.





பிறர்க்கெனத் தன்
எலும்புகளையும்
ஆவணம் செய்து வைப்பவன்
இறுதிநாளில்
சிரபுஞ்சிக் கண்களோடு
வழியனுப்பி வைப்பதும்,

அவன் பெயர் சொல்லி
அகன்ற உலகத் தெருக்களில்

ஆள்பவன்
மக்களால் ஆளப்பட்டவனே
என்று சொன்ன அதன் பொறுப்பில்
அரண்மனைச் சாவிகள்
அடைக்கலமாக,

மகுடங்கள்
மாணிக்கக் கற்களை உதிர்த்துவிட்டு
மக்களைப் பதித்துக்கொள்கின்றன.



காதலர்கள்
முத்தங்களைத் தொகுக்கும்
காடுகளில்,
பூக்களைத் திறந்துகொண்டுவந்து
வாழ்த்துப் பொழிகிறது
வள்ளுவம்.

அவர்கள் பிரிவுகளில் எல்லாம்
காதலை வளர்க்க
வள்ளுவம், செய்வது
உரத்தொழிற்சாலைகளில்
அவசர உற்பத்தி!

இல்லற நாள்களில்
மழலைகள் கைகளில்
கிலுகிலுப்பை அசைத்து
மாயக்
கிலுகிலுப்பை ஊட்டும் வள்ளுவம்,

வரும்
விருந்தை வரவேற்கும்
வாசலில் கோலம் போடப்
புள்ளியும் கோடும்
அள்ளிக் கொடுக்கிறது.

பசித்தவன் வயிற்றில்
பற்றி எரியும் நெருப்பிடம்
படைத்தவன்
முகவரியைக் கொடுத்துப்
'பாதகம் இல்லை தாக்கு!'
என்று
அனுப்புகிற வள்ளுவம்

ஈகையாளன் கரங்களில்
'மறுக்காதே
இந்தா பிடி' என்று
புகழ்கள் புகழும் புகழை
எடுத்துப் போடுகிறது.

கோடிகோடி
எலும்புகளை மென்றுதின்ற
சாவு,
இசைபட வாழ்பவன்
எலும்புகள் கிடைக்காமல்
ஓடி ஒளிகிறது!

வள்ளுவம்
எமது நெறி என்று மனிதர்
சொல்லும் முன்
சொல்லியது இயற்கை,
'வள்ளுவம்
எமது நெறி!'

– 'கோட்டம் முதல் குமரி வரை' மலரிலிருந்து...

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். 2000 வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த திருக்குறள் தலைசிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

– சர்.ஆர்.கே. சண்முகம்





## தளராத உறுதியும், மாறாத கொள்கையும் உடையவர்!

**— தந்தை பெரியார்**

“நான் காங்கிரசில் இருந்த பொழுது தோழர் அழகிரிசாமி என்னோடு பணிபுரிந்து வந்தார். நான் அரசியல் பணியிலிருந்து விலகி, சமுதாயப் பணிபுரியத் துவங்கிய 1924ஆம் ஆண்டிலிருந்து அவரை எனக்கு நன்கு தெரியும். அது முதல் 1948 வரையில் ஒரே நிலையில் பணியாற்றி வந்தார்.



அவரைப்போல் தளராத உறுதியுடன் தொடர்ந்து தொண்டாற்றியவர்கள் யாராவது உண்டா என்றால், கண்டு பிடிப்பது சிரமம் என்று துணிந்து கூறுவேன். 1949ஆம் ஆண்டில் முடிவெய்துகிற வரையில் ஒரே கொள்கையுடனும், உறுதியுடனும் நமது இயக்கத்திற்காகத் தொண்டாற்றினார். அவர் கொள்கை மாறியதோ, கருத்து வேறுபாடு கொண்டதோ கிடையாது.

தோழர் அழகிரி நல்ல பேச்சாளி, மக்களின் சிறப்பாக இளைஞர்களின் அபிமானம் பெற்றவர். அவர் நல்ல செலவாளி, தனக்கென்று ஒரு காசும் சேர்த்துக் கொள்ளாதவர். அவருக்கு அடிக்கடி பணக் கஷ்டங்கள் வருவது சகஜம். ஆனால், அதில் தனக்கு எவ்வித தொல்லைகள் ஏற்பட்டபோதிலும் தன் கருத்தையோ, தொண்டையோ கொஞ்சங்கூட மாற்றிக் கொண்டது கிடையாது”.

## அழகிரிசாமியே நீயா மறைந்தாய்?

**— பேரறிஞர் அண்ணா**

சுயமரியாதை இயக்கத்தின் சுடர் –
தன்மதிப்பு இயக்கத்தின் தளபதி!
மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும்
முன்னணித் தலைவன்!
சீர்திருத்தச் செம்மல்!
சொற்செல்வன்–சோர்வற்ற உழைப்பாளி!
தன்னலம் மறந்து, தன் நாட்டுக்குப் பணியாற்றிய
பண்புடையோன்!
அறிவுப் பாதையில் – அங்கும் இங்கும் எங்கும்
கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய
பகுத்தறிவாளன்!
அறியாமையை அகற்ற அஞ்சா
நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த
ஆண்மையாளன்!
“கல்லடியா – கவலைப்படாதே!
சொல்லடியா – சோர்வடையாதே!
பகைவரின் படையா – பயப்படாதே!
எதிர்க்கட்சியினரா – ஏமாந்துவிடாதே!
சனாதனமா – அதில் சாய்ந்துவிடாதே!
சதியா – அதனைச் சாகடி!
மதமா – அதனை மங்க வை!
மாசுகளைத் துடை; மன்பதையின்
மாணிக்கமாக விளங்கு;
மரியாதையைப் பெறு!
சுயமரியாதையைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ
முற்படு!
இதுவே உன்னுடை குறிக்கோளாக இருக்க
வேண்டும்!



என்று எங்கு சென்றாலும்
எக்காளமிட்டு மூலை
முடுக்கெல்லாம் முரசொலி கிளப்பி
– தன்மான இயக்கத்தின்
தளபதியாக விளங்கி அஞ்சா
நெஞ்சுடன் அறிவுப் பணிபுரிந்து
வந்த அழகிரிசாமியே நீயா
மறைந்தாய்?

# பகுத்தறிவுபுரியின் பாதுகாவலன் பட்டுக்கோட்டை அழகிரி

❑ முதல்வர் **கலைஞர்**

அண்ணன் அழகிரி அவர்கள் மாரியம்மன் கோவிலில் தான் அவர் பகுத்தறிவு கற்றார். அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் அவருக்குப் போதகராக ஆரம்பக் காலத்திலே இருந்தவர் மாரியம்மன் கோவில் பூசாரி பக்கிரி சட்டாம்பிள்ளை என்பவர். அந்தப் பக்கிரி சட்டாம் பிள்ளையைப் பற்றி அடிக்கடி அண்ணன் அழகிரி அவர்கள் எங்களிடத்திலே நினைவுபடுத்துவார். அவர்தான் புராணக் கதைகளையெல்லாம் அண்ணனுக்குச் சொல்ல, இவர் அந்தக் கதைகளைக் கேட்டு எதிர்க் கேள்விகள் போட, அவர் அந்தக் கேள்விகளுக்கு பதிலிறுக்க அதன் மூலமாக பகுத்தறிவு புரியினுடைய பாதுகாவலனாக பரிணமிக்கக் கூடிய ஒரு நிலை அண்ணன் அழகிரி அவர்களுக்கு ஏற்பட்டது.

## அழகிரி உடல் நலிவுற்ற நேரத்தில் அண்ணா செய்த உதவிகள்

அவரை 'அஞ்சாநெஞ்சன்' என்றும் 'தளபதி' என்றும் அழைக்கிறோம். இதற்கெல்லாம் மேலாக 'கோடையிடி அழகிரிசாமி' என்று அந்தக் காலத்திலே அண்ணன் அழகிரியை அழைத்த அந்த நினைவும் எனக்கு இன்றைக்கும் நெஞ்சத்திலே பசுமையாக இருந்து கொண்டிருக்கின்றது.

அண்ணா அவர்கள் அழகிரி உடல் நலிவுற்றிருந்த காலத்திலே செய்த உதவிகளை பேராசிரியர் இங்கே குறிப்பிட்டார். 'சந்திரோதயம்' என்று ஒரு நாடகம் அண்ணாவே எழுதி அண்ணாவே நடித்த நாடகம். அதிலே மிச்சப்பட்ட நிதி இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய். அந்த நிதியை திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்களிடத்திலே அண்ணா அவர்கள் ஒப்படைத்து "இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். தேவைப்படும்போது பெற்றுக் கொள்கிறேன்" என்று கொடுத்து வைத்திருந்தார். அண்ணன் அழகிரி உடல் நலிவுற்று பிழைப்பாரா என்பது கேள்விக் குறியாக இருந்த காலக்கட்டத்தில் இங்கே தாம்பரம் சானிடோரியத்திலே அழகிரி சேர்க்கப்பட்டிருந்தார்.

அழகிரிக்கு அண்ணா அவர்களிடத்திலே அதிக உறவு இல்லை. சில மனக்கசப்புகள் உண்டு. ஆனால் அந்த மனக்கசப்புகளுக்கு அப்பால் அண்ணா அவர்களிடத்திலே ஒளிவிட்டுக் கொண்டிருந்த மனிதாபிமானம், மனிதநேயம், பாசம், பகுத்தறிவுபுரியை இன்றைக்கு உருவாக்கித் தந்தவர் தளபதி அழகிரி என்கின்ற நன்றி உணர்வு – இது பட்டுப் போகாமல் இருந்த காரணத்தால் இரவு 12 மணிக்கு அழகிரி மூச்சுத் திணறல் ஏற்பட்டு தவிக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் அண்ணா திருவொற்றியூருக்கு ஓடோடிச் சென்றார். இரவு 12 மணிக்கு திருவொற்றியூர் டி. சண்முகம் பிள்ளையின் வீட்டுக் கதவைத் தட்டி, "அந்த மூவாயிரம் ரூபாயைக் கொடுங்கள்" என்று கேட்டார். அவர், ''ஏன்?'' என்று கேட்டதற்கு, ''கொடுங்கள், தேவைப்படுகிறது" என்று கூறிவிட்டு, அந்தத் தொகையை நண்பர் மதியழகனிடத்திலே கொடுத்து – "இதைக் கொண்டு போய் அழகிரியிடத்திலே கொடுத்து விடு" என்றார்.

அதற்குள்ளாக அழகிரி பிழைக்கமாட்டார் என்ற நிலையை டாக்டர்கள் புலப்படுத்தி, அழகிரி அவர்கள் செங்கற்பட்டு புகைவண்டி நிலையம் சென்று அங்கிருந்து புகை வண்டியில் புறப்பட ஒரு வினாடி இருக்கின்ற நேரத்திலே நண்பர் மதியழகன் ரெயிலுக்குள் சென்று அழகிரியைச் சந்தித்து, "அண்ணா இந்த மூவாயிரம் ரூபாயை உங்கள் சிகிச்சைக்காக கொடுத்தார்" என்று சொன்னதும், அதை வாங்கிய அழகிரி அவர்கள், மதியழகனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, ''மதியழகா, அண்ணாத்துரையிடம் போய்ச்சொல், நண்பர்கள் யார் என்பதை அழகிரி புரிந்துகொண்டான் என்பதைச் சொல்" என்று கூறிய அந்தச் சொல்லை மதியழகன் மரணமடைகின்ற வரையிலே எங்களைச் சந்திக்கும் போதெல்லாம் அதைச் சொல்லி சொல்லி விம்முவார். அப்படிப்பட்ட சரித்திர நிகழ்ச்சிகள் எல்லாம் அழகிரியின் வரலாற்றிலே இடம் பெற்றிருக்கின்றன.

## 'கலைஞர்' என்று முதன்முதலாக எனக்கு பட்டம் சூட்டியவர்

நானும் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களும் நடித்து அரங்கேற்றப்பட்ட தூக்குமேடை நாடகத்திற்கு தலைமை வகித்து ''கலைஞர்'' என்று அவருடைய வாயினால் என்னை முதன்முதலாக அழைத்துப் பட்டம் சூட்டினார்.

அது மாத்திரமல்ல, தஞ்சாவூரில் கிருஷ்ணா தியேட்டரை நடிகவேள் ராதா அவர்கள் தன்னுடைய வீடாகக் கொண்டு அங்கே வசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அந்த நாடகத்தை எழுதுமாறு அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். நான் அந்த நாடகத்திற்கு கதை, வசனங்கள், காட்சி அமைப்புகள் ஆகியவைகளையெல்லாம் எழுதிக் கொடுத்து, அந்தத் தியேட்டரில் தங்கியிருந்த காலத்தில் எங்களுடனேயே இருந்து ஒவ்வொரு நாளும் நான் எழுதி முடிக்கின்ற ஒவ்வொரு காட்சியையும் படித்துப் படித்து வியந்து பாராட்டியவர் அண்ணன் அழகிரி அவர்கள்.

அவர் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தபோது நான் திருவாரூரிலே இருக்கிறேன். எனக்கு அந்த நேரத்தில் உடல்நிலை மிகவும் கெட்டு, படுத்த படுக்கையாக இருக்கிறேன். அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி திருவாரூருக்குக் கிடைத்தவுடன் உடனடியாக காரை எடுத்துக் கொண்டு தஞ்சைக்குச் செல்கிறோம். தஞ்சையிலே தான் அவர் மறைந்தார்.

தஞ்சையிலே அவர் வீட்டுத், திண்ணையிலே அமர்ந்திருக்கும்போது ஒரு மணியார்டர் அழகிரி பெயருக்கு வருகிறது.

யாரோ ஒருவர் அண்ணாவை ஒரு ஊருக்கு கூட்டத்திற்கு அழைத்தவர்கள், அண்ணாவின் நிபந்தனையான, கூட்டத்திற்கு யார் அவரை அழைத்தாலும் 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் அழகிரியின் சிகிச்சை நிதிக்கு அனுப்பிவிட்டு, அந்த ரசீதை தனக்கு அனுப்பினால்தான் கூட்டத்திற்கு வருவேன் என்ற கட்டளைப்படி அனுப்பப்பட்ட மணியார்டர்தான் அது. ❑

பத்தாம் வகுப்பு, +2 படித்த மாணவர்களுக்கு – வழிகாட்டி

# என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்?

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு**

□ Dr.P.T. சூர்யகுமார்

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் மேற்கண்ட குறளுக்கேற்ப, மாணவ, மாணவிகள் பள்ளிக் கல்வியை முடித்த பின் தங்களுக்கு விருப்பமுள்ள ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து, அத்துறை சார்புடைய பல நூல்களைப் படிப்பதன் மூலமும், அந்தத் துறையோடு தொடர்புடைய சான்றோர் மற்றும் வல்லுநர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதாலும், அத்துறையில் அறிவு பெருகி, உலக மக்கள் எல்லோராலும் புகழப்படுகின்ற ஒரு இளைஞனாக திகழ முடியும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கிணங்க ஒரு துறையைத் தேர்ந்தெடுத்த பின், அத்துறையில் சமுதாயப் பணியில் ஆர்வம் கொண்டு, மனித இன மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதன் மூலம், சமுதாயத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற முடியும். ஒவ்வொரு ஆணின் வெற்றிற்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பது எவ்வளவுக் கெவ்வளவு உண்மையோ அது போல் ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும் ஆர்வமும், தன்னம்பிக்கையும், கடின உழைப்பும், அயராது பாடுபடுதலும் நிச்சயம் இருக்கும். தன் அறிவையும், ஆற்றலையும் ஒருங்கிணைத்து, முனைந்து, செயலாக்குகின்ற போது, வெற்றிப்படியை அடைய முடியும்.

எடுத்துக்காட்டாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் தனிப்பெரும் நிதி. தந்நிகரில்லாத தமிழ்க் காவலர். தமிழ் நாவலர். தமிழ்த் தொண்டாற்றும் தலைமைச் சான்றோர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் பல புரட்சியைச் செய்தவர். தமிழகப் பெருமையை மூச்செனக் கொண்டவர். செங்கோல் ஏந்தியிருந்தாலும் அவர் சிந்தையில் செங்கோலோச்சுவது செந்தமிழே. கலைஞர் கருவிலேயே எழுத்தாளராக உருவாகி வந்த ஒரு இலக்கியப் படைப்பாளி. இத்தகைய அத்தனைச் சிறப்புகளையும் பெற்றிருக்கின்ற கலைஞரின் வெற்றியின் இரகசியம் என்னவென்றால், அவருடைய ஆர்வம், தனித்திறமை மற்றும் அயராது உழைத்தலும் தான்.

இன்று நம்மில் எத்தனையோ பேர் தினமும் கூறும் தாரக மந்திரம் 'எனக்கு நேரமே இருப்பதில்லை' என்பது தான். மாநிலத்தின் முதல்வருக்கென்று ஒரு நேரம், சாதாரண குடிமகனுக்கு என்று ஒரு நேரம் என்று இல்லை. அனைவருக்கும் 24 மணி நேரம் தான். ஆனால் நாம் அதனை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதில் தான் விஷயமே இருக்கிறது.

## வெற்றியின் இரகசியம்

காலம் என்பது தானாக வருவதில்லை. நாமே உருவாக்கிக் கொள்வது தான். 'ஒரு நிமிடம்' என்று நாம் எளிதாகக் கூறி விடுகிறோம். ஆனால் அந்த ஒரு நிமிடத்தில் நம் நாட்டில் 'எத்தனை இலட்சம்' மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன தெரியுமா? நம் இளைய சமுதாயத்தினரில் பெரும்பாலோர் தம் நேரங்களை தொலைக்காட்சியை நோக்குவதிலும், குறிப்பாக கிரிக்கெட் பார்ப்பதற்கு என்று தான் செலவிடுகின்றனர். ஆனால் இவர்களில் எத்தனை பேர் நல்லதொரு கிரிக்கெட் வீரராக வருவர் என்றால் அந்த எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். நம்மில் பலர் எதனையும் திட்டமிடுவதில்லை. எந்த ஒரு செயலையும் திட்டமிட்டுச் செய்தால் தான் வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்க இயலும். எனவே மாணவ மணிகள், தங்கள் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கும் படிப்பை, தேர்ந்தெடுப்பதில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். 'செல்லும் பாதைகள்' பல இருக்கலாம். ஆனால் அவற்றில் சரியான 'எந்தப் பாதையில்' சென்றால் நமக்கு வேண்டிய இடத்தை விரைவில் அடையலாம், என்பது தெரிந்திருக்க வேண்டும். அதற்குச் சரியான அணுகுமுறை தேவை. அப்படி சிறந்த அணுகுமுறையோடு



செயல்பட்டால், நாமும் கணிதமேதை இராமானுஜம் போல், கவிக்குயில் தாகூர் போல், கணினியில் பில்கேட்ஸ் போல், 'செஸ்'ஸில் விஸ்வநாதன் ஆனந்த், விஞ்ஞானி அப்துல்கலாம் போல் இவ்வுலகை வலம் வர முடியும். இவர்கள் அனைவரின் வெற்றியின் அடிப்படை இரகசியம் என்னவென்றால் அந்தந்தத் துறையில் அவர்களுக்கு இருந்த, இருக்கின்ற ஆர்வம், தனித்தன்மை மற்றும் அயராது உழைத்தல் தான்.

பத்தாம் வகுப்பு முடித்து விட்டு, பதினொன்றாம் வகுப்பு செல்லும் மாணவர்களுக்காகவும், பனிரெண்டாம் வகுப்பு முடித்து விட்டு கல்லூரியின் வாயிலில் உயர் கல்விக்காக அடியெடுத்து வைக்க காத்திருக்கும் மாணவச் செல்வங்களுக்காகவும், இந்தக் கட்டுரை வழங்கப்படுகிறது. போட்டிகள் நிறைந்த இவ்வுலகில், சிறந்த கல்வியைப் பெற்று, அதற்கேற்ற வேலை வாய்ப்பு பெற நல்ல அணுகுமுறை தேவை. மேற்கூறியது போல் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தனித்திறமை உள்ளது. அந்தத் திறமையை வெளிக் கொணரும் வகையில் நல்லதொரு படிப்பை தேர்ந்தெடுப்பது சாலச் சிறந்தது. கல்லூரிப்படிப்பு, உயர்கல்வி இவற்றிற்கு அடித்தளமாக அமைவது +2 தான். பத்தாம் வகுப்பு வரை கல்வி என்பது ஒரு வீடு கட்டுவதற்கு அடித்தளம் போடுவது போன்றதாகும். எனவே பத்தாம் வகுப்பு முடிக்கின்ற மாணவர்கள் மேற்கொண்டு பள்ளி உயர்கல்வி, அதாவது பதினொன்றாம் வகுப்பு படிப்பதே நல்லது. அல்லது மேற்கொண்டு Diploma Certificate போன்ற தொழில்துறை சம்பந்தமான துறைகளில் பயில்வது, கட்டாயக் கடமையாகும்.

பத்தாம் வகுப்பு வரை படிப்பது கல்வியில் திருப்புமுனை. ஆனால் +2 படித்து வெற்றி பெறுவது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைகின்றது. பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் ஓர் வேண்டுகோள். பத்தாம் வகுப்பு படித்தவுடன் ஒரு வேலைக்குச் செல்லலாம் என்று நினைக்காமல் மேற்கொண்டு அகாடெமிக் அல்லது தொழிற்துறையைச் சார்ந்த கோர்ஸுகளில் சேர்ந்து பயில வேண்டும். பணவசதி குறைவு என்ற காரணத்திற்காக பள்ளிப் படிப்பை தொடராமல் இருப்பது மிக பெரிய தவறு. நன்றாகப் படிக்கின்ற மாணவ–மாணவிகளுக்கு அரசாங்கம் பலவழிகளில் உதவுகின்றது என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

பத்தாம் வகுப்பு படித்து வெற்றிப் பெற்ற மாணவர்கள் 1. Academic Courses 2. Vocational Courses என்ற இருவகை பள்ளி மேற்படிப்பில் பயிலலாம். Academic Courses என்பது பள்ளிகளிலே மேற்கொண்டு 11, 12ஆம் வகுப்பு படித்தல் ஆகும். Vocational Courses (தொழிற்துறை) என்பது பாலிடெக்னிக்குகளில் சேர்ந்து பயிலுதல் ஆகும். இன்றைய இளைஞர்கள் அறிவு மிகுந்தவர்களாகவும் உலக நடப்பினை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இருப்பினும் இவர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு துறைகளைப் பற்றி சுருக்கமாக விளக்கப்படுகின்றது.

★ ★ ★

**10ஆம் வகுப்பு வெற்றிப் பெற்ற மாணவர்கள் தொழிற்துறை சம்பந்தமாக என்ன படிக்கலாம் என்பதை இப்போது பார்க்கலாம் :**

## HEALTH WORKER TRAINING COURSE

(பெண்கள் மட்டும்) – 1½ வருடம், வயது 18–30.

**கல்லூரிகளின் விவரம், எங்கு கற்கலாம்?**

- ☐ அரசினர் மாவட்ட தலைமை ஆஸ்பிட்டல், திண்டுக்கல், வேலூர், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், கடலூர், நாகர்கோவில், நாகப்பட்டினம், ராமநாதபுரம் போன்ற இடங்களிலும்,
- ☐ துர்காபாய் டேஷ்முக் ஆஸ்பிட்டல், ஆந்திரா மகிளா சபா, சென்னை–600 028.
- ☐ சி.எஸ்.ஐ. ஆஸ்பிட்டல், திருவள்ளூர்.
- ☐ பெத்தஸ்டா ஆஸ்பிட்டல், ஆம்பூர்.



- ☐ திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி, திருநெல்வேலி.
- ☐ கிருஷ்டியன் பெல்லோஷிப் ஆஸ்பிட்டல், ஒட்டன்சத்திரம்.
- ☐ டேனிஷ் மிஷன் ஆஸ்பிட்டல், திருக்கோயிலூர்.
- ☐ மேத்தா ஆஸ்பிட்டல், புல்லம்பாடி.
- ☐ கஸ்தூரிபாய் ஆஸ்பிட்டல், காந்தி கிராமம், திண்டுக்கல் மாவட்டம்.
- ☐ சி.எஸ்.ஐ. ஆஸ்பிட்டல், தாராபுரம்.

இதைப்படித்தவர்களுக்கு அரசு மருத்துவமனைகளிலும், இதர பொது மருத்துவமனைகளிலும் உடனடியாக வேலை கிடைக்கின்றது. மேலும் புதிய புதியதாக மருத்துவமனைகள் தோன்றுகின்ற இந்த காலத்தில் இந்த படிப்பிற்கு மிகவும் கிராக்கி.

இதற்கு விண்ணப்பங்கள் பெற அந்தந்த கல்லூரிகளின் முதல்வரை அணுகி முழு விவரங்களை தெரிந்துகொள்ளலாம்.

★ ★ ★

## MEDICAL RECORD TECHNICIAN TRAINING COURSE

– 6 மாதங்கள்

**எங்கு கற்கலாம்?**

- ☐ மகளிர், குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை–600 008.
- ☐ இன்னும் சில அரசு அல்லாத மருத்துவமனைகளில் சொல்லிதரப்படுகின்றது.

★ ★ ★

## LAB TECHNICIAN

– ஒரு வருடம்

**எங்கு கற்கலாம்?**

பொதுவாக அரசு மருத்துவமனைகளில் கற்று தரப்படுகின்றது.

- ☐ சென்னை மருத்துவக்கல்லூரி, சென்னை–600 003.
- ☐ ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரி, சென்னை–600 001.
- ☐ கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி, சென்னை–600 010.
- ☐ செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி, செங்கல்பட்டு.
- ☐ மதுரை மருத்துவக்கல்லூரி, மதுரை–625 001.
- ☐ தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்.

★ ★ ★

பொறியியல் துறையில் டிப்ளமோ படிப்பு படிக்கலாம் – மூன்று வருடம் படிப்பு. இதை படித்தவர்கள் சொந்தமாக தொழில் தொடங்கலாம் (அல்லது) தொழில் பட்டறைகளில் பணிபுரியலாம் (அல்லது) அரசுத்துறை நிறுவனங்களில் குரூப் C,D போன்ற பணிகளில் வேலைவாய்ப்பு பெறலாம். கடின

உழைப்பும், உண்மையான பயிற்சியும் முக்கியம். ஏனெனில் டிப்ளமோ படித்து முடித்த இளைஞர்கள் Field Experience என்று கூறுவார்களே அது முழுமையாக தெரிந்து இருக்கவேண்டும். இல்லையேல் இப்படிப்பு ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல் ஆகிவிடும். எனவே இந்த படிப்புப் பிரிவு (Course) தேர்ந்தெடுப்பவர்கள், நிச்சயமாக அதன் சார்புடைய தொழில்களில் பயிற்சி முழுமையாக தெரிந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்கவேண்டும். முடிந்தால் மாலை நேரங்களில் பட்டறையில் சென்று பயிற்சி பெறலாம். என்னென்ன பொறியியல்துறை சம்பந்தமான படிப்புப் பிரிவுகள் உள்ளன? என்று பார்ப்போம்.



- ☐ Diploma in Civil Engineering
- ☐ Diploma in Mechanical Engineering
- ☐ Diploma in Electrical Engineering
- ☐ Diploma in Electronics and Communications
- ☐ Diploma in Production Engineering
- ☐ Diploma in Commercial Practics
- ☐ Diploma in Costume Design and Dress Making
- ☐ Diploma in Leather Technology
- ☐ Diploma in Printing Technology
- ☐ Diploma in Instrument Technology
- ☐ Diploma in Architectural Assistanship
- ☐ Diploma in Cosmotology
- ☐ Diploma in Chemical Technology
- ☐ Diploma in Petro-Chemical
- ☐ Diploma in Polymer Technology
- ☐ Diploma in Agricultural Engineering
- ☐ Diploma in Computer Science
- ☐ Diploma in Electronics & Telecommunication Engineering
- ☐ Diploma in Refrigeration & Airconditioning
- ☐ Diploma in Textile Technology
- ☐ Diploma in Fibre Technology
- ☐ Diploma in Machine Tool Maintenance & Repairs
- ☐ Diploma in Automobile
- ☐ Diploma in Mettalurgy
- ☐ Diploma in Foundry Technology
- ☐ Diploma in Pulp Paper Technology
- ☐ Diploma in Prosthetics and Orthotics
- ☐ Diploma in Plastic Moulding Technology (Central Institute of Plastic Eng & Tech, Guindy, Chennai - 600 032.
- ☐ Certificate Course in Salesmanship (1 year)

**எங்கு கற்கலாம்?**

பொதுவாக SSLC –யில் வெற்றி பெற்றவர்கள் தொழிற்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் மேற்கூறிய தொழில் சம்பந்தப்பட்ட மூன்று ஆண்டு தொழிற்துறையின் பாடங்களைப் படித்து வேலைக்கு தகுதி பெறுகின்றனர். டிப்ளமோ அளவில் சிறந்த முறையில் வெற்றிப் பெற்றவர்கள் பொறியியல் துறையின் BE (4 வருடம் படிப்பில்) இரண்டாம் ஆண்டில் (Lateral entry) சேர வாய்ப்பு உள்ளது. டிப்ளமோ படித்தவர்கள் 10+3+3=16 வருட படிப்பில் BE படிக்கின்றனர். +2 முடித்தவர்கள் 10+2+4=16 வருட படிப்பில் BE படிக்கின்றனர். மேலும் டிப்ளமோ படித்தவர்கள் குறைந்தது 3–5 வருட Field Experience இருந்தால் BE (Part time) படிக்கலாம். எனவே டிப்ளமோ படிப்பு மிகவும் கவர்ச்சிகரமானது. வேலைக்கு வேலை, படிப்பிற்கு படிப்பு – நல்லமுறையில் ஆர்வமுடன் படிப்பவர்களுக்கு.

பொதுவாக எல்லா அரசுதுறை பாலிடெக்னிக் கல்லூரிகளிலும், சில தனியார் கல்லூரிகளின் பாலிடெக்னிக்குகளிலும் மேற்கூறிய துறைகளில் படிப்புகள் சொல்லி தரப்படுகின்றது.

ஏறத்தாழ தமிழ்நாட்டில் 215 பாலிடெக்னிக் நிறுவனங்கள் உள்ளன. மேற்கூறிய நிறுவனங்களில் சேர முதலில் நுழைவுத் தேர்வு எழுதிட வேண்டும். கவலைவேண்டாம். காரணம் 215 பாலிடெக்னிக் நிறுவனங்களில் ஏறத்தாழ 42,000 (நாற்பத்திரெண்டாயிரம்) இடங்கள் உள்ளன. இதில் பெண்களுக்கென 4,000 (நான்காயிரம்) இடங்கள் உள்ளன. பெண்களுக்கென தனி பாலிடெக்னிக்குகளும் உள்ளன.

பொதுவாக இந்த நிறுவனங்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது என்னவெனில், தற்போதுள்ள வசதிவாய்ப்புகளை (Infrastructure facilities) அதிகமாக ஏற்படுத்தி, மாணவர்கள் Field Experience –க்கு தயாராக்குங்கள் என்பதுதான்.

டிப்ளமோ கோர்ஸில் சேர SSLC –யில் குறைந்தது 40% கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் எடுத்து இருக்கவேண்டும். அதுவல்லாது இரண்டிலும் வாங்கிய மார்க்குகளின் மொத்தம் 100–க்கு குறையாமல் இருக்க வேண்டும். BC, MBC, DNC சார்ந்தவர்களுக்கு சலுகை உள்ளது. SC/ST இனத்தை சார்ந்த மாணவர்கள் பாஸ் செய்து இருந்தால் போதும்.

மேற்கூறிய மூன்று வருட டிப்ளமோ கோர்ஸ்கள் தவிர, எஸ்.எஸ்.எல்.சி. (SSLC) படித்து முடித்தவர்கள் ஒரு வருடம் அல்லது இரண்டு வருட Certificate Course படிக்கலாம். இது அந்தந்த துறைகளில் பயிற்சிபெறும் வகையில் அடித்தளமாக அமைக்கின்றது. சில குடும்பங்களில் இத்துறையை சேர்ந்த தொழில் செய்யலாம். அவர்களுடைய குழந்தைகள் இதில் படிப்பதால் சிறப்பான முறையில் பல யுக்திகளை கையாள முடியும்.



இம்முறையில் ஒரு வருட படிப்பை வெற்றிகரமாக முடித்தவர்கள் National Trade Certificate என்ற சான்றிதழ் கொடுக்கப் படுகின்றது. மேலும் ஒரு வருடம் அப்பரண்டிஸ்ஷிப் (Apprenticeship) வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், மத்திய அரசு நடத்தும் தேர்வில் வெற்றிப் பெற்றால் நேஷனல் அப்பரண்டிஸ்ஷிப் Certificate கொடுக்கப்படும். இக்காலத்தில் அரசாங்கத்தின் உதவிச் சம்பளமும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதற்கும் கடின உழைப்பும், புதிய யுக்திகளை கையாளத் திறமையையும் பெற வேண்டும். அமெரிக்கா, ஜப்பான், ரஷியா போன்ற மேலைநாடுகள் கைத்தொழில் துறையின் மூலம்தான் வல்லரசாக விளங்குகின்றது. எனவே மாணவர்கள் இத்தகைய தொழிற்சம்பந்தமான படிப்புகளைப் படிக்கும்போது கவனமும் ஆற்றலையும் பயன்படுத்தி படிக்க வேண்டும். வேலையைத் தேடி நீங்கள் செல்லவேண்டாம். வேலை உங்களைத் தேடி வரும். சோம்பேறிகளாக இருக்காதீர்கள். எழுந்திருங்கள், வெற்றிபெறுங்கள். எதையும் உங்களால் செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடன் வெற்றிப் புன்னகையுடன் வருங்கால இந்தியாவின் சிற்பியாக மாறுங்கள்.

### எங்கு கற்கலாம்?

அரசு I.T.I. என்று சொல்லப்படுகின்ற Industrial Technical Institute–ல் முக்கியமாக எல்லா மாவட்டங்களில் கற்பிக்கப்படுகின்றது. சில சமூக தொண்டு நிறுவனங்களும், தனியார் துறையிலும் ITI நடத்தப்படுகின்றது.

### என்னென்ன கற்று தரப்படுகின்றது?

கீழ்க்கண்ட துறையில் S.S.L.C. முடித்தவர்கள் படித்து பயன் பெறலாம்.

### ஒரு வருட படிப்பு :

**Carpenter - Moulder - Mechanic Diesel - Plumber -Mechanic - Tractor - Mason, Painter, Pattern Maker - Welder - Mechanic (Motor), Wiremen, Sheet Metal Worker - Plastic Processing Operator - Computer Software - Stenographer - Hand Compositor - Book Binder - Embroidery and Needle Work - Cutting and Tailoring - Footwear - Leather Goods Maker.**

### இரண்டு வருடப்படிப்பு :

**Turner - Mechanist - Fitter - Electro Plater - Wireless Mechanic - Surveyor - Electrician - Tool and Die Maker - Draughtsman - Radio & T.V.**

அந்தந்த துறையில் சிறப்பை அடையும் வகையில் கோர்ஸ்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவரவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் முறைதான் வேறுபடுகின்றது. எனக்குத் தெரிந்த நண்பர் S.S.L.C. வரை படித்தவர் Computer Software படித்தவர் மிக அருமையாக எத்தகைய ரிப்போர்களையும் BE படித்த இளைஞனைக் காட்டிலும் செய்து முடிக்கின்றார். எனவே அவருக்கு வரவேற்பு அதிகம்.

### மற்ற துறைகள் :

SSLC படித்தவர்கள் கீழ்க்கண்ட துறைகளிலும் சேர்ந்து படிக்கலாம்.

☐ Diploma in Film Acting - 1 year

### எங்கு கற்கலாம்?

☐ சினிமா, வானொலி நிறுவனம், தரமணி, சென்னை–600 113.

☐ சென்னை கிருஸ்துவக் கல்லூரி, தாம்பரம், சென்னை–600 059.

☐ வி.ஜி.பி. நிலையம், ஈஞ்சம்பாக்கம், சென்னை–600 041.

★ ★ ★

### மீன் வளர்ச்சித்துறை

மீன் படகு துறையில், Mate Fishing Vessel (18 மாத கால கோர்ஸ்), Engine Driver Fishing Vessel (18 மாத கால

கோர்ஸ்) படிக்கலாம். மேற்கண்ட இரு கோர்ஸ்களும் 'Central Institute of Fisheries Nautical and Engineering Training Centre, S.N. Chetty St, Royapuram, Chennai-600 013 என்ற விலாசத்தில் சொல்லித்தரப்படுகின்றது. SSLC யில் குறைந்தது 40% எடுத்தவர்கள் சேரலாம்.

**உணவுத்துறை**

Craftsmanship Certificate Course in Food Production (1 1/2 years கோர்ஸ்) என்ற கோர்ஸ் Institute of Hotel Management and Catering Technology, CIT வளாகம், தரமணி, சென்னை–600 113–ல் சொல்லிதரப்படுகின்றது. SSLC படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Foodcraft Institute, துவாக்குடி, திருச்சி–620 015 என்ற நிறுவனத்தில் 'Bakery & Confectionery, Cookery, House Keeping (1 வருட கோர்ஸ்) நடத்தப்படுகின்றது.

தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் பலதுறைகளில் இசைப்பயிற்சி பெறலாம். சில துறைகளுக்கு எட்டாம் வகுப்பு படித்தவர்களாக இருந்தாலே போதும். இசைத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**முதல்வர், தமிழக அரசு இசைக்கல்லூரி,**
**கிரீன்வேஸ் தெரு, சென்னை–600 028.**

இங்கு அல்லது அரசு இசைக்கல்லூரி, பதுமலை, மதுரை–625 004 பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேலும்,

- ☐ கலைக் காவேரி நாட்டியப்பள்ளி, திருச்சி–620 001.
- ☐ கலாஷேத்ரா கல்லூரி, சென்னை–600 041.
- ☐ அரசு நுண்கல்வி, கும்பகோணம்.
- ☐ தமிழ் இசைச்சங்கம், ராஜா அண்ணாமலை மன்றம், சென்னை–600 108.
- ☐ ராஜா சர் முத்தையாச் செட்டியார் இசைக்கல்லூரி, அண்ணாமாலைநகர்.
- ☐ திருவையாறு இசைக்கல்லூரி போன்ற இடங்களில் கற்கலாம்.

★ ★ ★



## +2 மாணவர்கள் என்னப் படிக்கலாம்? எங்கே படிக்கலாம்?

மேலைநாடுகளில் எல்லாம் பள்ளிக் கல்வி பருவத்திலேயே மாணவர்களுக்கு பலதரப்பட்ட வழிகாட்டி சூழ்நிலைகள் உள்ளன. கீழ்க்கண்ட குறிப்புகள் ஒரு வழிகாட்டிதான். முழுமையான விவரங்களான ஹாஸ்டல் வசதி, பணச்செலவு போன்றவற்றைத் தெரிந்துகொள்ள அந்தந்த நிறுவனத்தை அணுகுவது நல்லது.

+2 படித்த மாணவர்கள் பொதுவாக தேர்ந்தெடுப்பது தொழிற்சம்பந்தமான துறையும், விஞ்ஞானம் போன்ற துறை, கலைத் தொடர்புள்ள துறை என பிரிக்கலாம்.

**தொழிற் சம்பந்தமான துறை**

- ☐ பொறியியல் துறை (Engineering), அதன் சார்புடைய துறை
- ☐ மருத்துவம் (Medical), அதன் சார்புடைய துறை
- ☐ விவசாயம் (Agriculture), அதன் சார்புடைய துறை
- ☐ சட்டம் (Law)
- ☐ விலங்கினம் (Vet.Science), அதன் சார்புடைய துறை

**விஞ்ஞானம்**

- ☐ கம்யூட்டர் (Computer)
- ☐ இயற்பியல் (Physics)
- ☐ வேதியியல் (Chemistry)
- ☐ கணிதம் (Maths)
- ☐ உயிரியல் (Biology)

**கலை**

- ☐ வணிகவியல் (Accountancy, Commerce)
- ☐ மேலாண்மை (Management)
- ☐ பொருளாதாரம் (Economics)
- ☐ பூலோகவியல் (Geography)
- ☐ வரலாறு (History)
- ☐ மனையியல் (Home Science)
- ☐ சமூகவியல் (Sociology)
- ☐ விளையாட்டு (Physical Education)
- ☐ ஆசிரியர் பயிற்சி (Teacher - Education)
- ☐ இசை (Music), இன்னும் பல துறைகள்

எனப் பாகுபடுத்தலாம்.

★ ★ ★

**பதினொன்றாம் வகுப்பில் தங்கள் திறமை மற்றும் ஆர்வத்திற்கு ஏற்பப் பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுப்பது எப்படி?**

- ☐ மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவம் சார்புடைய துறைகளில் பணிபுரிய விரும்புவர்கள், பதினொன்றாம் வகுப்பில் (+1) இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology) போன்ற பாடங்கள் அடங்கிய Pure Science Group எடுத்துப் படிக்கலாம்.
- ☐ தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆர்வம் உள்ளவர்கள், கணிதம் (Maths), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) முதலிய பாடங்கள் அடங்கிய Group–ல் சேரலாம்.
- ☐ தொழில்நுட்பக் கல்வி அல்லது மருத்துவம் இவற்றில் எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதை +2 முடித்த பின் தேர்வு செய்யலாம் என்று நினைப்பவர்கள் கணிதம் (Maths), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology) Group எடுத்துப் படிக்க வேண்டும்.
- ☐ வங்கிகள் (Banks), ஆயுட்காப்பீட்டுக் கழகங்கள் (Insurance Companies) போன்றவற்றில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் அல்லது Chartered Accountant, Company Secretary ஆகவோ பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் வணிகவியல் (Commerce), கணக்குப் பதிவியல் (Accountancy), பொருளியல் (Economics) போன்ற பாடங்கள் அடங்கிய Group எடுத்துப் படிக்க வேண்டும்.

வரலாறு (History), புவியியல் (Geography) போன்ற பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றுவர்.

ஒவ்வொரு மாணவனும் எந்தத் துறையில் தனக்கு ஆர்வம் உள்ளது, எந்தத் துறையில் பயின்றால் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது, அத்துறை சார்ந்த படிப்புகள் என்னென்ன? அவை எங்கெங்கு நடத்தப்படுகிறது? தமிழ்நாட்டிலும், வெளி மாநிலங்களிலும் எங்கெங்கு உள்ளது? எத்தனை வருடங்கள்? இளங்கலை படித்து முடித்தவுடனேயே வேலை கிடைத்து விடுமா? இல்லை உயர்கல்வி படிக்க வேண்டுமா? என்பது பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய தனிப்பட்ட திறமை, ஆர்வம், குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, எதிர்காலக் கல்வியை திட்டமிடுவது நல்லது. அவ்வாறு திட்டமிடும் பொழுது, மாணவர்களின் ஈடுபாடும், பெற்றோரின் விருப்பமும் ஒன்றுபோல் இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் சில நேரங்களில் பெற்றோர்கள் அவர்தம் குழந்தைகளின் விருப்பத்தை ஏற்காததையும், தம் விருப்பத்தை குழந்தைகளிடம் திணிப்பதையும் காண முடிகிறது.

★ ★ ★

கல்லூரிக் கல்வி என்பது, ஏதாவது ஒரு பாடப்பிரிவில் சேர்ந்து கல்வி பயில்வது என்று பொருள் கொள்ளக்கூடாது. எந்த ஒரு கல்வியைத் தேர்ந்தெடுப்பதாக இருந்தாலும், அதற்குத் தேவையான தகுதி, திறன் போன்றவை மாணவர்களிடத்தில் இருக்க வேண்டியது அவசியம். (எ–கா) நன்றாக Drawing பண்ணும் திறமை உள்ளவர்கள், கற்பனை வளம், திட்டமிடுதல், பொது அறிவு போன்றவற்றில் திறமை உடையவர்கள் B.Arch கல்விப் பிரிவைத் தேர்ந்தெடுப்பது நலம். கல்லூரிக் கல்வியைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் சில விஷயங்களை நினைவிற் கொள்வது நல்லது.



- ☐ பட்டியலைத் தயார் செய்த பிறகு அது தொடர்பாக திட்டமிடுதலும், முடிவெடுத்தலும் அவசியம். ஏனென்றால் சில நேரங்களில் திட்டமிட்டதை நாம் தொடர்ந்து செயல்படுத்தாத (அல்லது) செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படலாம். எனவே அதனை அலசி, ஆராய்ந்து நல்லதொரு தீர்வு காண முற்பட வேண்டும்.
- ☐ ஒரு குறிப்பிட்ட பாடம்தான் மிகச் சிறந்தது என்று எண்ணுவது தவறான கருத்தாகும். அதுபோல் குறிப்பிட்ட படிப்புதான் படிக்க வேண்டும் என்ற ஆசையையும், மனோ பாவத்தையும் தீவிரமாக மனதில் வளர்த்துக் கொள்வதும், அப்படிப்பில் சேர இடம் கிடைக்காவிடில் மனம் தளர்வதும் கூடாது.

ஒவ்வொரு கல்விப் பிரிவுக்கும், அந்தந்தக் கல்விப் பிரிவுகென்று சில சிறப்புத் தன்மைகள் உள்ளன. இந்தப் பாடம்தான் சிறந்தது, இந்தப் பாடம் சிறந்ததல்ல என்று கருதுவது தவறாகும். எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும், அந்தத் துறையில் முழு மனதுடன் ஈடுபட்டு, ஆழ்ந்த சிந்தனையுடன், திட்டமிட்டுப் படித்தால், வாழ்க்கையில் வெற்றிக்கனி என்பது நம் உள்ளங்கையில். வாழ்வில் படிக்க முடியாதவர்கள் கூட (அல்லது) தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் சிக்கித் தவித்த எத்தனையோ பெரியோர்கள், மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்கிறார்கள். இதுபோன்ற கருத்துகளை மனதில் கொண்டு, பள்ளி உயர்கல்விக்குப் பின் என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம் என்று தீர்மானிக்க வேண்டும்.

இது தவிர இன்னும் பல காரணிகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

- ☐ பாடப்பிரிவு அல்லது பாடம் (Course) பற்றிய முழு விவரங்களையும் பெற்றோர்கள் உட்பட தெரிந்துகொள்வது அவசியம்.
- ☐ இந்தப் பாடப்பிரிவு தேர்ந்தெடுத்துப் படித்தால் அதற்காக ஆகும் செலவை நம்மால் எதிர்கொள்ள முடியுமா? என்பது பற்றி முன்னமையே சிந்திக்க வேண்டும்.
- ☐ நாம் தேர்ந்தெடுக்கும் கல்லூரியில் போதிய வசதிகள் உள்ளனவா? ஏதேனும் உதவித் தொகை வழங்கப் படுகிறதா? என்பது பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.
- ☐ சில துறைகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும்பொழுது, நாம் படிக்கும் பாடப்பிரிவு தவிர, அது தொடர்புடைய பிற துறைகளிலும் நாம் தேர்ச்சி பெற வேண்டியிருக்கும். உதாரணமாக நூலகம் மற்றும் தகவல் அறிவியல்

படிப்பவர்கள், அது தவிர கணினி பற்றியும் படித்திடல் வேண்டும். நூலகம் மற்றும் தகவல் அறிவியல் மட்டும் படித்துவிட்டு வேலைவாய்ப்பு பெற முடியாது. ஏனென்றால் நூலகத்தை கணினி மயமாக்கும் பணி தற்பொழுது மேற்கொள்ளப்படுவதால், கணினி கல்வியும் அவசியம்.

பள்ளி உயர்கல்வி படித்தவர்களில் ஏறத்தாழ 9% பிரிவினர் பொறியியல் (Engineering) பிரிவிலும், 3% பிரிவினர் மருத்துவப் பிரிவிலும் (Medicine) 2% பிரிவினர் கால்நடை மருத்துவப் பிரிவிலும் (Veterinary Science) படிப்பதற்கு ஏற்றவாறு தமிழக அரசின் உயர்கல்விக் கொள்கை அமைந்துள்ளது. வேலைவாய்ப்பு நிறைந்த கல்வித்துறைகள் பின்வருமாறு :

- ☐ மருத்துவம் (Medicine)
- ☐ பொறியியல் (Engineering)
- ☐ இளங்கலை கணிப்பொறி (B.Sc.,Computer Science)
- ☐ Management Courses
- ☐ CA, ICWAI, ACS
- ☐ Fashion Technology
- ☐ Hotel Management

பொறியியல் பாடப் பிரிவில் சேர்ந்து கல்வி பயில விரும்புவர்கள் முதலில்

- ☐ Six I.I.T.s (Indian Institute of Technology)
- ☐ Anna University, M.I.T.
- ☐ P.S.G. Technology, Coimbatore
- ☐ C.I.T. (Coimbatore Institute of Technology)
- ☐ I.I.I.T.(Indian Institute of Information Technology)
- ☐ 17 Regional Engineering College

போன்ற கல்வி நிலையங்களில் சேருவதற்கு தான் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இவைகளில் சேருவதற்கு இந்நாளில் கடும் போட்டி நிலவுகிறது. மேலும், தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 140 பொறியியல் கல்லூரிகளில் ஏறத்தாழ 30,000 இடங்களில் சேருவதற்கு வாய்ப்பு உள்ளது, மாணவர்கள், பொறியியல் துறையில் 4 வருடப் பட்டப் படிப்பு பெற்றவுடன், மேல் படிப்பை வெளிநாடு சென்று பயில விழைகின்றனர். பொறியியல் படிக்க, சுயநிதிக் கல்லூரிகளிலும் கடும்போட்டி உள்ளது.

★ ★ ★

## +2 படித்து முடித்தவர்களுக்கு கல்லூரிகளில் உள்ள பாடப் பிரிவுகள்

### ENGINEERING

- ☐ B.E. - 4 years) (Civil, Mechanical, Electrical, Electronics, EEE, ECE, Computer, ICE, Mettallurgy, Marine)
- ☐ B.E. (Agri) - 5 years
- ☐ B.Tech - 4 years (I.T., Chemical, Textile, Weather Aeronautical, Automobile)
- ☐ B.Arch - 5 years
- ☐ B.Tech (Environmental Technology)
- ☐ B.Tech (Industrial Bio-Technology)
- ☐ M.Sc. (Software) - 5 years
- ☐ A.M.I.E.

### MEDICINE/PARA-MEDICAL COURSES

- ☐ M.B.B.S. - 4 1/2 years



- ☐ B.V.Sc (Veterinary Science) - 5 years
- ☐ B.S.M.S. (Siddha Medicine) - 5 years
- ☐ B.H.M.S. (Homeopathy Medicine) - 5 years
- ☐ B.A.M.S. (Ayurvedic, Siddha Medicine) - 5 years
- ☐ B.U.M.S.(Unani Medicine) - 5 years

B.D.S. (Dentistry) - 4 years

- ☐ B.W.Y.S.
- ☐ B.P.T. (Physiotheraphy) - 3 years
- ☐ B.O.T. (Occupational therapy) - 3 years
- ☐ B.Sc. Nursing - 3 years
- ☐ B.Sc. Medical Ophthalmic Technology - 3 years
- ☐ B.Sc. Medical Nutrition - 3 years
- ☐ B.Sc. Medical Laboratory Technology - 3 years
- ☐ B.Sc. Human Biology - 3 years
- ☐ B.Sc. Audiology and Speech therapy - 3 years
- ☐ B.Sc. Speechtherapy and Hearing - 3 years
- ☐ B.Sc. Hearing, Language and Speech - 3 years
- ☐ B.Sc. Speech and Hearing - 3 years
- ☐ B.Sc.Speech Pathology - 3 years
- ☐ B.Sc. Radiography - 3 years
- ☐ B.Pharm - 4 years
- ☐ D.Pharm - 2 years

### ACCOUNTANCY

- ☐ C.A. (Chartered Accountant)
- ☐ I.C.W.A. (Cost and Management Accountancy)
- ☐ A.C.S.(Company Secretaryship)
- ☐ B.Com - 3 years
- ☐ B.B.M. - 3 years
- ☐ B.B.A. - 3 years

### UNDERGRADUATE COURSES (ARTS)

- ☐ B.A. English - 3 years
- ☐ B.A. Tamil - 3 years
- ☐ B.A. Urdu - 3 years
- ☐ B.A. Hindi - 3 years

- ☐ B.A. Malayalam - 3 years
- ☐ B.A. Telugu - 3 years
- ☐ B.A. Arabic - 3 years
- ☐ B.A. Sanskrit - 3 years
- ☐ B.A. French - 3 years
- ☐ B.A. History - 3 years
- ☐ B.A. Economics - 3 years
- ☐ B.A. Corporate Secretaryship - 3 years
- ☐ B.A. Political Science - 3 years
- ☐ B.A. Psychology - 3 years
- ☐ B.A. Sociology - 3 years
- ☐ B.A. Indian Music - 3 years
- ☐ B.A. Defence - 3 years
- ☐ B.A. Philosophy - 3 years
- ☐ B.A. Co-operation - 3 years
- ☐ B.A. Industrial Organisation - 3 years
- ☐ B.A. Drawing & Painting - 3 years
- ☐ B.A. Geography - 3 years
- ☐ B.A. Social Work - 3 years
- ☐ B.A. Bank Management - 3 years
- ☐ B.A. Oriental Craft - 3 years
- ☐ B.A. Indian Culture - 3 years
- ☐ B.A. Social Science - 3 years
- ☐ B.A. Music - 3 years
- ☐ B.A. Tourism - 3 years

**UNDERGRADUATE COURSES (SCIENCE)**

- ☐ B.Sc. Mathematics - 3 years
- ☐ B.Sc. Chemistry - 3 years
- ☐ B.Sc. Physics - 3 years
- ☐ B.Sc. Biology - 3 years
- ☐ B.Sc. Botany - 3 years
- ☐ B.Sc. Zoology - 3 years
- ☐ B.Sc. Computer Science - 3 years
- ☐ B.Sc. Statistics - 3 years
- ☐ B.Sc. Geology - 3 years
- ☐ B.Sc. Geography - 3 years
- ☐ B.Sc. Biochemistry - 3 years
- ☐ B.Sc. Microbiology - 3 years
- ☐ B.Sc. Applied Microbiology - 3 years
- ☐ B.Sc. Dietics - 3 years
- ☐ B.Sc. Institute Management & Dietics with Chemistry - 3 years.
- ☐ B.Sc. Home Science - 3 years
- ☐ B.Sc. Visual Communication - 3 years
- ☐ B.Sc. Physical Education - 3 years
- ☐ B.Sc.Interior Design & Environment - 3 years
- ☐ B.Sc. Costume Design & Fashion - 3 years
- ☐ B.Sc. Interior Decoration - 3 years
- ☐ B.Sc. Hotel & Catering Management - 3 years
- ☐ B.Sc. Craftsmanship in Food Product - 3 years
- ☐ B.Sc. Catering Technology & Computer Science - 3 years
- ☐ B.Sc. Health Education - 3 years
- ☐ B.Sc. Electronics - 3 years
- ☐ B.Sc. Industrial Electronics - 3 years
- ☐ B.E.S. Electronics Science - 3 years
- ☐ B.Sc. Biotechnology - 3 years
- ☐ B.Sc. Environmental Zoology - 3 years
- ☐ B.Sc. Chemical - 3 years
- ☐ B.Sc. Rehabilitation - 3 years
- ☐ B.Sc. Applied Auto Science - 3 years
- ☐ B.Sc. Leather Science - 3 years
- ☐ B.Sc. Rural Development & Science - 3 years

**SPECIAL COURSES**

- ☐ B.F.Sc.(Fisheries Science) - 5 years
- ☐ B.Sc. Visual Communication Design - 5 years
- ☐ B.Sc. Textile Design & Ceramic Design - 5 years
- ☐ B.Sc. Agri - 4 years
- ☐ B.Sc. Horticulture - 4 years
- ☐ B.Sc. Forestry - 4 years
- ☐ B.L.M. Labour Management
- ☐ B.L. (Law Course) - 4 years
- ☐ B.F.A. (Fine Arts/Drawing/Painting) - 4 years
- ☐ Defence Studies - 3 years
- ☐ Temple Architecture & Sculpture - 2 years
- ☐ Cinematography - 3 years
- ☐ Diploma Plastic Mould Technology Diploma - 3 years
- ☐ Diploma in Fashion Technology - 3 years
- ☐ Teachers Education - 2 years
- ☐ Diploma in Film Technology

அனைத்து கல்விப் பிரிவுகள் பற்றியும் அறிய விரும்புபவர்கள் "Choose the Best Course after +2 என்ற புத்தகத்தை வாங்கி பயன் பெறவும்.

**பேராசிரியர் P.S.B. கல்வி மையம்,**
**4/1399, ஆறாவது ஹால்,**
**முகப்பேர் (மேற்கு), சென்னை–600 058.**

*(அடுத்த இதழில் மேலும் பல சிறப்பு கோர்ஸ்களின் விவரங்களை தெளிவாக படித்து பயன்பெறுங்கள்.)* ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



கடலூர் மாவட்டம் கோமுகி நதி பாசனக் கால்வாய் அன்றும்



கடலூர் மாவட்டம் கோமுகி நதி பாசனக் கால்வாய் இன்றும்

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தொடரும் பயணம்



ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது

முதல்வர் **கலைஞர்** உரை

# தொடரும் பயணம்...

தமிழ்நாடு சட்டப் பேரவையில் **மேதகு ஆளுநர்**
உரை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
9-3-2000 அன்று ஆற்றிய உரை.

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
சென்னை.

சிறப்பு வெளியீடு

'தமிழரசு' இலவச வெளியீடு

மார்ச் 2000

வெளியிடுபவர் :

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை–600 002.

ஆளுநர் உரையின்மீது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில் என்னையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் தவிர்த்து 37 பேர் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 8 பேர், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 பேர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேரும் இரண்டு மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த 8 பேரும் இரண்டேகால் மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். இந்த விவாதத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டசபையிலே நாலைந்து நாட்களாகப் புயல் அடித்தது, அடித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் புயலுக்கு மாறாக அவருடைய பேச்சு தென்றலாக இன்றைக்கு அமைந்து நமக்கெல்லாம் தெம்பூட்டியிருக்கின்றது.

பொதுவாக, தமிழ்நாட்டு மக்கள், சட்டமன்றத்திலே எது நடக்கிறது, யார் எதை, எப்படிப் பேசுகின்றார்கள், அதனால் யாருக்கு என்ன பலன் என்பதையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சட்டமன்றத்திற்குள்ள அந்தச் சிறப்பான தனி உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு, எதை வேண்டுமானாலும் பேசலாம், பொத்தாம் பொதுவில் புழுதி வாரித் தூற்றலாம் என்றால், மக்கள் மன்றம் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்காது. குறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும் பொழுது, அதனைக் களைந்திடல் வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் எடுத்துரைக்கும் போது அதுபற்றிய உண்மையை அறிய விசாரணை நடத்திடல்

வேண்டும், நடவடிக்கை எடுத்திடல் வேண்டுமென்ற அக்கறை உள்ளவன் நான் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக, இந்த அவையில் உள்ளவர்கள் அறிவீர்கள். இதுவரை நடந்து வந்துள்ள நிகழ்வுகளைக் கவனித்தால் இந்த உண்மை நிச்சயமாக விளங்கும் என்றே நான் நம்புகின்றேன்.

## ஜனநாயகத்திலும் சட்டமன்றத்திலும் நம்பிக்கை

ஜனநாயகத்திலும், ஜனநாயகத்தின் காப்பகமாக விளங்கிடும் சட்டமன்றத்திலும், நாம் எல்லோரும் மிகுந்த நம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இங்கே வந்து அமர்ந்து நாட்டு நலத்திற்கும், வளத்திற்குமானத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது பற்றிப் பேச அவையிலே போதுமான இடம் இல்லை என்ற காரணத்தால்தான் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து அவர்களுக்காகப் பேச, வாதாட, விவாதிக்க இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, இங்கே பேசுகின்றவர்கள் யாராக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் அல்லது எதிரிக் கட்சியாகவே இருந்தாலும் கூட, நாம் பேசுகின்ற விஷயங்கள் நாட்டுக்கு, தொகுதிக்கு, மக்களுக்கு எந்த அளவிற்குப் பயனுள்ளதாக, பலன் தருவதாக இருக்கும் என்பதை முடிவு செய்து கொண்டு பேசுவதுதான் மக்களாட்சியின் மாண்புக்கு நாம் செலுத்திடும் மரியாதையாக அமைந்திடும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நானோ, இங்கே உள்ள அமைச்சர்களோ, ஆளும் கட்சி உறுப்பினர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களும் இல்லை. விமர்சனத்திற்குப் பயந்து ஒளிந்து கொள்கிறவர்களும் இல்லை. பொது வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற அளவில் தான், செய்யப்படுகிற விமர்சனங்கள், தரம் உள்ளவையாக இருந்தாலும், தரம் தாழ்ந்தவையாக இருந்தாலும் 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று எல்லாவற்றையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல பொறுத்துக் கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதில் எள் முனையளவும் பிசகாமல் நாங்கள் நடந்து வருகிறோம்.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தரப் பகைவர்களும் இல்லை என்று பேரறிஞர் அண்ணா சொன்னது கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல; அரசியலில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும்தான்.

நண்பர்களாக இருக்கும்போது போற்றிப் பாராட்டி புகழ்வதும் எதிர் முகாமிற்குச் சென்றதும் இல்லாததைப் பொல்லாததையும் பேசுவதும் தான் அரசியல் என்று ஆகிவிட்டால் பொது வாழ்க்கை என்பதே வெறும் போர்வையாக ஆகிவிடும். அதுமாத்திரமல்ல; அரசியல், பொது வாழ்க்கை என்றாலே மக்களிடம் கசப்பும், வெறுப்பும் ஏற்பட்டுவிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, இவற்றையெல்லாம் கவனமாகக் கருத்திலே நாம் அனைவரும் கொண்டிட வேண்டுமென்று விரும்புகின்றேன், கேட்டுக் கொள்கின்றேன்.

அந்த அடிப்படையிலே இங்கே நடைபெறுகின்ற வாதப் பிரதிவாதங்கள் அமைய வேண்டும் என்பது என்னுடைய விழைவு. வாதப்பிரதிவாதங்களில் சில நேரங்களில் சூடு பறந்து, சில

நேரங்களில் விரசம் தலைகாட்டி, கவலைக்கு உள்ளாக்கியது என்றாலும் கூட, ஒரு சிலர் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையோடு தங்களுடைய வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கல்லூரியின் ஆண்டறிக்கை போல் இருக்கிறது

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல செய்திகளை இங்கே எடுத்துக்கூறி இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் ஒருமுறை அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் அறிக்கைபற்றி தொடக்கத்தில் எடுத்த எடுப்பில், இது ஒரு கல்லூரி ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொல்லி பத்திரிகையிலே அந்தச் செய்தி வெளி வந்தது. அதை நான் முழுமனதோடு ஏற்றுக் கொள்கின்றேன்.

'அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம் தான் கல்லூரி' அவர் சொன்னது கல்லூரியினுடைய ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொன்னார்கள். கல்லூரி என்பது சாதாரணமானது அல்ல. அவர் கல்லூரியைக் கேவலமாக எண்ணி சொல்லியிருக்கமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அக இருள் அகற்றி அறிவு ஒளிவீசச் செய்யும் இடம் தான் கல்லூரி, அங்கு சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி அடையக்கூடிய பணி மேற்கொள்ளப் படுகிறது.

அதே போல இப்போது தமிழகத்திலே கல்வியிலே கணினியைப் புகுத்தி, சமூக ஒற்றுமைக்கு சமத்துவபுரங்களை நிறுவி, கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, மக்களின் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு, வருமுன் காப்போம் போன்ற திட்டங்களால் இந்த ஆண்டில் தமிழகம் அடைந்துள்ள மேம்பாடுகளை உள்ளடக்கிய ஆளுநர் உரையின் சிறப்பை, ஒரு கல்லூரியின் ஆண்டு அறிக்கைக்கு ஒப்பிட்டு, சுருக்கமாக, அதே நேரம், மிகச் சிறப்பானதாக அவர் எடுத்துரைத்தது, அதுபோல வேறொரு வாழ்த்துரையை நாம் எங்கும் காண இயலாது. எனவே அவருக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஆண்டு அறிக்கைதான்; நான்கு ஆண்டு காலம் ஆண்டு; இப்போது தரப்படுகின்ற அறிக்கைதான், இந்த அறிக்கை என்பதையும் நான் அவருக்குக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்று ஒரு கேள்வி. சில விஷயங்களைப் பாராட்டி நம்முடைய பழனிச்சாமி போன்றவர்கள் பேசினார்கள். சுப்பராயன் அன்றைக்கு, என்ன இதில் ஒன்றுமே இல்லை; இதிலே உள்வாங்குவதற்கு, இந்த உள்வாங்குவது என்பது அவருக்கே உரிய ராயல்டிவார்த்தை. இதிலே உள்வாங்குவதற்கு என்ன இருக்கிறது என்று அன்றைக்கு அவர் கேள்வியை எழுப்பினார்கள். ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்கின்ற விவாதம் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பல பேரால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

## குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப்பலகை நிறுவியுள்ளோம்

தமிழ் எழுத்தாளர்களுக்கு குறள்பீடம் விருது. இதை நம்முடைய அருமை நண்பர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிலே எடுத்துச் சொன்னார்கள். ஞானபீட விருது தரப்படுவது போல இங்கேயும் ஒரு பீடம் ஏற்படுத்தி ஒரு விருது தர வேண்டும் — அந்த விருதை வழங்குகின்ற அகாடமிக்கு முதலமைச்சரே தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளே இருந்து எதிர்க்கட்சிகள் சொல்வதை மாத்திரம் அல்ல; வெளியிலே இருந்து எதிர்க்கட்சிகள் மூலமாகத் தரப்படுகின்ற கருத்துக்களைக்கூட 'உள்வாங்குகின்ற' அரசு தான் இந்த அரசு என்பதற்கு அடையாளமாகத்தான் அவருடைய விருப்பப்படி நானே தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டு குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப்பலகை ஒன்றை நிறுவி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே உருது அகாடமி அமைக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 15 இலட்ச ரூபாய் இப்போது முன் பணமாக அதற்கு வழங்கப்பட இருக்கிறது. சமூக சீர்த்திருத்தத்துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தி, அன்றைக்கு இங்கே பேசப்பட்டது போல பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நாம் முனைந்திருக்கிறோம்.

**கடந்தகால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை**

ஏகபோக கொள்முதல் முறையின் கீழ் மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கடந்த கால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

தரிசு நிலமேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு, 10 மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலங்களில் தரிசு நில மேம்பாட்டுப்பணி முடிக்கப்பட்டுவிட்டது. வரும் ஆண்டில் சுமார் 30,000 எக்டேர் நிலப்பரப்பு மேம்பாட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் புதிய கொள்கையை உருவாக்க வேண்டுமென்று மாநில திட்டக் குழுவை நான் கேட்டுக்கொண்டு அந்த முயற்சியிலே மாநில திட்டக்குழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. வருகிற நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் இடம் பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது**

100 நகர்ப்புற மையங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தையைப்பற்றி பேசப்பட்டது. நல்ல

திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வேறு சிலரும் இங்கே பேசி அதிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். குறைகளே இல்லையென்று நான் சொல்லமாட்டேன். எதிலும் குறை இருக்கிறது. சந்திரனுக்கே கூட களங்கம் இருக்கிறது. அதுபோல எந்தத் திட்டமாக இருந்தாலும் ஒரு குறை இருக்கும். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உழவர் சந்தை தொடங்கப்பட்டது நவம்பர் மாதம் *14* ஆம் தேதி மதுரையில் — பேரவைத் தலைவர் அவர்கள் முன்னிலையிலே இந்த உழவர் சந்தைத் தொடங்கப்பட்டது. இதுவரையில் *27* சந்தைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பல தேதிகளில் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த *27* உழவர் சந்தைகளில் *8.3.2000* வரை, அதாவது நேற்று வரை விற்பனையான காய்கறிகளின் மதிப்பு *11* கோடியே *8* இலட்சத்து *31,708* ரூபாய் என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனையினுடைய அளவு எத்தனை கிலோ காய்கறிகள் என்றால் ஒரு கோடியே *89* இலட்சத்து *32,086* கிலோ காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன. இதிலே பயன் பெற்ற விவசாயிகள், பயன் பெற்ற விவசாயிகள் என்றால் வந்தவர்களே மறுநாள் வரக்கூடும். ஆனாலும் தொடர்ந்து வந்தவர்கள், திரும்பத் திரும்ப வந்தவர்கள் என்ற கணக்கைப் பார்த்தால் *1,55,998* விவசாயிகள். பயன் பெற்ற பொது மக்களும், திரும்பத் திரும்ப வந்திருக்கக்கூடும். அந்தக் கணக்கைப் பார்த்தால் *68,32,673* பேர். மேலும் *73* உழவர் சந்தைகள் விரைவிலே தொடங்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மதுரை, திருச்சி, பெருந்துறையில் அங்காடிகள்

மதுரையிலே 17 கோடி ரூபாய் செலவிலே நெல் விற்பனை அங்காடி; அதனுடைய பணி, தொடங்கப்பட்டு விட்டது. திருச்சியிலே 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வெல்ல விற்பனை அங்காடி, அதனுடைய பணியும் தொடங்கப்பட்டுவிட்டது. பெருந்துறையில் 30.89 கோடி ரூபாய் செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி; பணி தொடங்கப்பட்டுவிட்டது. அதுபற்றி நேற்றைய தினம் நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் சிலாகித்து நன்றி கூறி பேசினார், நல்ல நேரத்திலே, நான் இல்லாமல் போய் விட்டேன். மற்ற நேரங்களிலே, இருந்தேன். நன்றி கூறிப் பேசுகிற நேரத்திலே நான் இங்கு இல்லாமல் போய்விட்டேன். அதற்கு நான் வருந்துகிறேன். பிறகு கேள்விப்பட்டேன், படித்துப் பார்த்தேன் பேச்சை, அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

தரமணியில் 338 கோடி ரூபாய் செலவிலே டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படுகிறது. 10 இலட்சம் சதுர அடி கொண்ட அந்தப் பூங்கா மே மாதத்திலே திறப்பு விழா நடைபெற இருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்கின்றேன்.

தீப்பிடிக்காத கல்நார் வீடுகள், மாநகராட்சிகளிலே இந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட இருக்கிறது. 19 கிலோ மீட்டர் நீளம் உள்ள சென்னை புறவழிச்சாலை, இந்த ஆளுநர் உரையிலே அந்தத் திட்டமும் இடம் பெற்றிருக்கிறது. 213 கோடி ரூபாய் செலவிலே சென்னையைச் சுற்றியுள்ள ஆரச் சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. அரசு மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் கணினி வசதிக்காக,

இதுவரையிலும் 666 மேல்நிலைப்பள்ளிகளிலே கணினி பயிற்சிக்கான ஏற்பாடு நடைபெற்றதைத் தொடர்ந்து மேலும் 535 மேல்நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு முடிவடைய இருக்கிறது.

420 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு இரண்டாவது திட்டம் **Urban Development** திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. மேலும், 86 சமத்துவபுரங்கள், இதுவரையிலே 64 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதிலே ஒன்றிரண்டு சமத்துவபுரங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அவைகளை எல்லாம் சரிப்படுத்தி, 35 ஆயிரம் ரூபாய் போதாது என்று சொன்னார்கள், அதைவிட குறைந்த செலவிலே கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம்கூட நல்ல முறையிலே இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

## கணினிமயமாக்கும் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படவிருக்கிறது

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் கணினி மயமாக்குகின்ற திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த ஆண்டு விரிவாக்கப்பட இருக்கிறது. கணினிமயம் என்பது சாதாரணமான விஷயமல்ல. இன்றைக்கு இந்தியாவிலேயே கணினி மயமாக்குகின்ற திட்டத்தில் தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது என்பதையும் நான் சிறப்பாக இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நகர்ப்புற பகுதிகளில் 215 கோடி ரூபாய் செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் திட்டம். 10 கோடி

ரூபாய் செலவில் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் நீரடி கழிப்பிடங்களாக மாறும் திட்டம். இது சாதாரணமான திட்டமாகத் தெரியலாம். ஆனால், உலர்க் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதால் மலத்தை தலையிலே அள்ளி சுமக்கின்ற மனிதனுடைய, சமுதாய விடுதலை அதிலே தொக்கி நிற்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. 20 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்போருக்கு பட்டா வழங்கப்படும். அரசுக்குத் தேவையில்லாத பட்சத்தில் அந்த இடம் அவர்களுக்கே உரிமையாக்கித் தரப்படும். 300 கோடி ரூபாய் செலவில் சென்னையில் உள்ள நீர் வழிகளில் தூர்வாரும் பணி ஒரு திட்டம். அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## நீதிபதி இரத்தினவேல்பாண்டியன் குழு பரிந்துரை செய்துள்ள திட்டம்

தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்களுக்கான உச்சநீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் இரத்தினவேல்பாண்டியன், சீத்தாராமதாஸ், ஓய்வு பெற்ற ஐ,ஏ,எஸ், அதிகாரி, வெங்கட்ராமன், ஓய்வுபெற்ற, ஐ,ஏ,எஸ், அதிகாரி செகரட்டரி முருகன் இவர்களைக் கொண்டு ஒரு குழு தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் ஒரு திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். ஒரு பகுதி வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த பகுதி விரைவிலே வழங்கப்பட இருக்கிறது. அவைகள் வழங்கப்பட்ட பிறகு என்னென்ன பணிகள் தொடங்கப்படும் என்பதை வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவிப்பேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக ஆளுநர் உரையிலே முதல் பக்கத்திலே அல்லது இரண்டாம் பக்கத்திலே இடம் பெற்ற அரசியல் சட்டத்திலே மாறுதல் அல்லது ஆய்வு அல்லது திருத்தம். இதில் ஏதோ ஒன்று நடைபெறும் போது, எந்தெந்தப் பிரச்சினைகள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதை வகுத்துச் சொல்லியிருக்கிறோம். **1999–ஆம்** ஆண்டு நாடாளுமன்ற தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியினுடைய தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாசகத்தை இங்கே படித்துக் காட்டவிரும்புகின்றேன்.

**1999** நாடாளுமன்ற தேர்தல்களை ஒட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில்,

''We shall appoint a Commission to review the Constitution of India not only in the light of experiences and developments since 1996, but indeed, of the entire post-independence period, and to make suitable recommendations.

We are convinced that there is a clear case for devolution of more financial and administrative powers and functions to the States. We will take suitable steps to ensure harmonious Centre-State relations in the light of the recommendations of the Sarkaria Commission and also effect decentralisation right upto the grass roots level by activating and involving Panchayats and local bodies''

– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது,

"*1996*–ஆம் ஆண்டிலிருந்து மேலும் நாடு விடுதலை பெற்றதிலிருந்து நமக்கு ஏற்பட்டு வரும் அனுபவங்கள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தை மறுஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கு ஒரு கமிஷனை அமைப்போம்.

மாநிலங்களுக்கு மேலும் அதிக நிதி மற்றும் நிர்வாக ஆதாரங்களையும், செயல்பாடுகளையும் வழங்குவதற்கு தெளிவான நிலை ஏற்பட்டு இருப்பதை நாங்கள் நம்புகிறோம். சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய, மாநில உறவுகள் இணக்கமான வகையில் அமைவதை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மேலும் ஜனநாயக அமைப்பின் வேர்களாக விளங்கும் ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை ஈடுபடுத்தும் வகையில், அவைகளுக்கு தேவையான அதிகாரங்களை வழங்குவோம்".

– என்ற தேர்தல் அறிக்கைக்குப் பிறகு *1–2–2000* அன்று மத்திய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்:

"The Commission shall examine in the light of experience of the past 50 years as to how far the existing provisions of the Constitution are capable of responding to the needs of efficient, smooth and effective system of governance and socio-economic

development of modern India and to recommend changes, if any, that are required to be made in the Constitution within the framework of parliamentary democracy **without interfering with the basic structure or basic features of the Constitution"**

இதுதான் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அதாவது,

*"அரசியல் சட்ட மறு ஆய்வுக் கமிஷன் கடந்த 50 ஆண்டு காலமாக ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில், தற்போது உள்ள அரசியல் சட்டத்தின் அம்சங்கள், திறமையான, சுமூகமான நல்ல விளைவுகளை வழங்கிடக் கூடிய நிர்வாக அமைப்பின் தேவைகளை எப்படியெல்லாம் நிறைவு செய்துள்ளது என்பதைப் பரிசீலனை செய்து,*

*நவீன இந்தியாவின் சமூக, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஆய்வு செய்து, அரசியல் சட்டத்தின் அடிப்படை அமைப்பையோ,* **அடிப்படை அம்சங்களையோ குலைத்திடாத வகையில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற கட்டமைப்புக்குள் தேவையான பரிந்துரைகளை வழங்கும்",**

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969ஆம் ஆண்டு பொங்கல் விழாவையொட்டி 'காஞ்சி' இதழில் எழுதிய கட்டுரையில்,

இதுதான் அண்ணா அவர்கள் "தம்பிக்கு கடிதம்" என்று கடைசியாக அவர்கள் மறைவதற்கு சில நாட்களுக்கு முன் எழுதிய கடிதம் அதில் –

"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரம் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கின்றது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி.

நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதனையும் வலியுறுத்த முன்வந்துள்ளன.

அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர்.

நாம் அரசு நடத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பயன்களிலே இதனையும் ஒன்று என்றே கருதுகின்றேன்".

பொங்கலையொட்டி வெளியிடப்பட்ட **'Home Rule'** இதழில் **"HAIL! THE DAWN!"** என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரையில்,

''If by being in office, the D.M.K. is able to bring to the notice of the thinking public, that the present Constitution is a sort of dyarchy by the back door that would be a definite contribution indeed to the political world''.

அதாவது,

"பதவியில் இருப்பதன் மூலம்; இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டுவர முடியுமானால், அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்" என்று அண்ணா எழுதியுள்ளார்.

சோவியத் ரஷ்யாவில்,

**1918**ஆம் ஆண்டு, பின்னர்

**1924**ஆம் ஆண்டு, பின்னர்

**1936**ஆம் ஆண்டு, பின்னர்

**1974**ஆம் ஆண்டு

ஆகிய ஆண்டுகளில், நான்கு முறை அரசியல் சட்டத்தைத் திருத்தினார்கள். மன்னிக்க வேண்டும். திருத்தவில்லை. அடியோடு மாற்றினார்கள். திருத்தங்களைச் செய்யாமல், பழைய பிரிவுகளை நீக்காமல், புதிய பிரிவுகளை இணைக்காமல், மாறிவரும் சூழ்நிலைகளையும், மக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு,

புதிய அரசியல் சட்டங்களே சோவியத் ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

**அரசியல் சட்ட நிர்ணய சபையில்**
**பண்டித ஜவஹர்லால் நேரு கூறிய கருத்து**

அரசியல் சட்ட நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு பேசும்போது;

'While we want this Constitution to be as solid and as permanent in structure as we can make it, nevertheless there is no permanence in Constitutions. There should be a certain flexibility. If you make anything rigid and permanent you stop a nation's growth, the growth of a living, vital, organic people'. ...........In any event, we should not make a Constitution, such as some other great countries have, which are so rigid that they cannot be adapted easily to changing conditions. Today especially, when the world is in turmoil and we are passing through a very swift period of transition, what we may do today may not be wholly applicable tomorrow''

அதாவது,

இந்த அரசியல் சட்டம், கெட்டியானதாகவும், நிரந்தர மானதாகவும் அமையத்தக்க வகையில் நாம் உருவாக்கினாலும் கூட, அரசியல் சட்டங்களில் நிரந்தரமானது என்று எதுவும் இல்லை.

அதில் நெகிழ்வுத் தன்மை இருந்திடல் வேண்டும். எதையும் இறுக்கமானதாகவும், நிரந்தரமானதாகவும் அமைத்துவிட்டால், நாட்டின் வளர்ச்சியை வாழும், உயிர்ப்பு சக்திமிக்க மக்களின் வளர்ச்சியையும் நிறுத்திவிடுகிறீர்கள் என்று ஆகிவிடும்...ஒருசில நாடுகளில் இருப்பதைப் போல, இறுக்கமான, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மாற்றி பின்பற்ற முடியாததான அரசியல் சட்டத்தை நாம் உருவாக்கிவிடக்கூடாது. கொந்தளிப்பான சூழலில் உள்ள இன்றைய உலகில், வேகமாக மாறிவரும் சூழ்நிலைகளில், இன்று நாம் உருவாக்குவது, நாளையே முழுதும் பயனற்றதாகப் போய்விடக்கூடும்.

மேலும் சொல்கிறார் :

''A Constitution which is unchanging and static-it does not matter how good it is - is a constitution that has outlived its use. It is in its old age already and gradually approaching its death. A constitution to be living must be growing, must be adaptable, must be flexible, must be changeable''

அதாவது,

"எவ்வளவு நல்ல அரசியல் சட்டம் என்றாலும், ஓர் அரசியல் சட்டம் மாறாமல் நிலைத்துவிட்டதாக இருக்குமானால், அந்த அரசியல் சட்டம் அதன் பயன்பாட்டை இழந்துவிட்டது என்று பொருள். அது ஏற்கெனவே முதுமை அடைந்து விட்டது என்று அர்த்தம். அப்படிப்பட்ட அரசியல் சட்டம் மரணத்தை நெருங்கிக்

கொண்டிருப்பதாகப் பொருள். ஓர் அரசியல் சட்டம் உயிரோடு இருக்குமென்றால், அது வளர்ந்து வருவதாக, பின்பற்றக்கூடியதாக, நெகிழ்வுத் தன்மை உள்ளதாக, மாற்றியமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்".

**டாக்டர் அம்பேத்கர் கருத்து**

டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார் :

''A Constitution is not an end in itself, rather a means for ordering the life of a nation. The generation of yesterday might not know the needs of today, and if yesterday is not to paralyse today; it seems best to permit each generation to take care of itself'''

அதாவது,

அரசியல் சட்டம் என்பது, அதுவே முடிந்த முடிவாக அமைந்துவிட முடியாது. அது ஒரு நாட்டின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வழிமுறை மட்டுமேயாகும். நேற்றைய தலைமுறையினருக்கு, இன்றைய தலைமுறையினரின் தேவைகள் எவையென்று தெரிந்திருக்க முடியாது. "நேற்றைய தினம்" என்பது "இன்றைய தினத்தை" வலுவிழக்கச் செய்யக்கூடாது. ஒவ்வொரு தலைமுறையினரும் தமது தேவைகளுக்கேற்ப வழிமுறைகளை வகுத்துக்கொள்ள அனுமதிப்பதே சிறந்தது.

**சோ. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியில் சங்மாவை சேர்த்திருக்கிறார்கள் இல்லையா? அவர் காங்கிரஸ் தலைவர் திருமதி. சோனியா காந்திக்கு பரம எதிரியாக இன்று கருதப்படுபவர். அவரைச் சேர்த்தது எந்த வகையில் நியாயம்? அதை ஏன் நீங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விரிவான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தை எந்த வகையிலேயும் மாற்றக்கூடாது என்று சொல்லப்படுகின்ற வாதங்களுக்கு பதிலாக அது அமைந்திருக்கக்கூடும். அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும்தான். ஆனால் சமூக வளர்ச்சியின் தேவைக்கு தக்கபடி முற்போக்கான திசைவழியில் மாற்றுவதா? அல்லது சமூகச் சக்கரத்தை பின்னுக்கு இழுக்கிற முறையில் மாற்றுவதா என்பதுதான் கேள்வி. மத்தியிலே இருக்கிற பி.ஜே.பி. அரசு ஒருபோதும் சமூகத்தை முன்னுக்கு கொண்டு போகிறபடி சிந்திக்காது என்பதால் அவர்கள் அப்படி மாற்ற மாட்டார்கள் என்ற அச்சத்தைத்தான் நாங்கள் தெரிவித்தோமே தவிர வேறு அல்ல.

**ச. அழகிரி :** பேரவைத் தலைவர் அவர்கள், முதல்வர் அவர்கள் சோவியத் ரஷ்யாவில் 4 முறை அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டதைப் பற்றி சொன்னார்கள். அந்த தேசத்தை உருவாக்கியவர்கள், புரட்சி செய்தவர்கள்; அவர்கள் அந்தச் சட்டத்தை மாற்றி அமைத்தார்கள். சட்டத்திலே திருத்தங்களைக்

கொண்டு வரலாம். ஆனால் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைத்தான் நாங்கள் சொன்னோம்.

**அரசியல் சட்டத்தின் அடிப்படை மாற்றப்படக் கூடாது என்றுதான் கூறிக் கொண்டிருக்கிறேன்**

**முதல்வர் கலைஞர் :** 'விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்னதாக ஒரு பழமொழி உண்டு. அதேபோல, அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படக்கூடாது என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழுவும் போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சங்மாவை சேர்க்கலாமா என்று கேட்டார்.

**ஜே. ஹேமச்சந்திரன் :** அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான ஒரு கமிட்டி உருவாக்குகிற நேரத்தில் அதுவும் நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டு, நாடாளுமன்றம் நிறைவேற்றுகிற குழுவாக அமைவதுதானே அது சிறந்ததாக இருக்கும் என்பதை முதல்வரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர் :** நான் இப்போது சதாவதானம் எடுத்து 4 கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். அழகிரி கேள்விக்கு பதில் சொல்லிவிட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் சங்மாவை சேர்க்கலாமா என்று கேட்டார்கள். கமிட்டியிலே யாரைப் போடுவது என்பது பற்றியல்ல நாம் இப்பொழுது பேசிக்கொண்டிருப்பது.

இப்பொழுது நாம் சொல்லிக் கொண்டிருப்பது அரசியல் சட்டத்திற்கு மாறுதல் தேவையா, இல்லையா என்ற வாதத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கமிட்டியிலே போடுபவர்களைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம்.

**நல்லமுறையில் மாற்றப்பட்டால் ஆதரிப்போம் இல்லையென்றால் எதிர்க்கப் போகிறோம்**

சுப்பராயன் அவர்கள் இது முற்போக்காக மாற்றப்பட வேண்டுமே என்று சொன்னார்கள். எப்படி மாற்றப்படும் என்று இப்பொழுது நான் ஒன்றும் ஜோசியம் சொல்ல முடியாது. இது நல்லமுறையில் மாற்றப்பட்டால் நாம் ஆதரிக்கப்போகிறோம், இல்லையென்றால் எதிர்க்கப்போகிறோம். நாமெல்லாம் மிக விழிப்போடு இருந்து அதை கவனித்துக்கொண்டு இருக்கப் போகிறவர்கள். அதனால் இது நமக்கு தீங்கு அளிக்கக்கூடிய முறையில் சிறுபான்மை சமுதாயத்திற்கோ அல்லது நம்முடைய ரிசர்வேஷன் போன்ற கொள்கைகளுக்கோ எதிரானதாக அடிப்படையை மாற்றக்கூடியதாக இருந்தால் நாம் வன்மையாகக் கண்டிக்கப்போகிறோம் என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தைக் கூட்டி அல்லவா கமிட்டி போட்டு இருக்கவேண்டும் என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் அந்தக் கமிஷனால் ஆலோசிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு வந்த பிறகு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் அது நிறைவேற முடியாது. கடைசி எல்லை நாடாளுமன்றம்தான். அப்படி

இருக்கும்போது நாம் அஞ்சத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதை மாற்றும்போது ஒழுங்காக மாற்றப்பட வேண்டும் என்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து. அடிப்படை மாறாமல் மாற்றப்பட வேண்டுமென்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து.

ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அதி.மு.க. தலைவி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில், "அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு தனிப்பட்ட கட்சி நலனுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. இது பி.ஜே.பி. கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியிலுள்ள மற்ற கட்சிகளாக இருந்தாலும் சரி, அவற்றின் நலனுக்காக அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றக்கூடாது. அரசியல் சட்டம் உண்மையிலேயே புனிதமானது. (அதிலே மாறுபட்ட கருத்து எல்லோருக்கும் உண்டு. அது புனிதமானதா, அல்லவா என்பது. புனிதமானதாக இருந்தால் 80 முறை அதில் கைவைத்திருக்க மாட்டார்கள் அதைத் திருத்துவதற்கு) அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது. மிகவும் கவனமாகவும், ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் மாற்றம் செய்ய வேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒரு அரசியல் கட்சியின் சலனத்தால் கருத்துக்கும், கற்பனைக்கும் ஏற்ப அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்யக்கூடாது"

— என்று அம்மையார் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள்.

### அரசியல் சட்ட மாற்றம்; கொள்கையில் முரண்பாடு

ஆனால் அதே அம்மையாரைத் தலைவராகக் கொண்ட அ.தி.மு.க. கட்சி **24–9–1996** அன்று அவர்களுடைய பொதுக் குழுவிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

"தற்போதுள்ள ஆட்சி முறையில் தக்க மாற்றம் கொண்டுவந்து, நாட்டின் ஜனாதிபதியிடம் முழு அதிகாரம் வழங்கப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதியைப் போன்று, ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை அமைய வேண்டுமென்றும், அதற்கேற்ப அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் இப்பொதுக்குழு கோருகிறது. அதே நிலையில் மாநிலங்களின் ஆளுநர் பதவிகளெல்லாம் நீக்கப்பட்டு, மாநில ஆட்சித் தலைவர் மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை உருவாக்கத் தேவையான மாற்றங்களை அரசியல் சட்டத்தில் செய்ய வேண்டுமென்று இப்பொதுக்குழு கோருகிறது".

என்னென்ன மாற்றமோ, அது வேறு விஷயம். ஆனால் அரசியல் சட்டத்திலே மாற்றங்கள் செய்யலாம் என்று **1996**ஆம் ஆண்டு பொதுக்குழுவிலே தீர்மானித்துவிட்டு, இப்பொழுது மாற்றவே கூடாது என்று கூறுகின்ற அந்த விபரீதமான முரண்டுபாடுகளும் இன்றைக்கு நாட்டிலே காணப்படுகிற காட்சிகளாக அமைந்திருக்கின்றன.

இன்னொன்று, இதன் தொடர்பாகப் பேசிய பிரச்சினைகளில் மிக முக்கியமானது; ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை. ஏதோ என்னையே ஒரு ஆர்.எஸ்.எஸ். என்பதுபோல் சிலபேர் இங்கே உருவகப்படுத்திப் பேசினார்கள்; அல்லது கருதிக் கொண்டு தங்களுடைய வாதத்தை

இங்கே எழுப்பினார்கள். நாங்கள் முஸ்லிம் லீகை ஆதரித்தபோது எங்களையெல்லாம் வகுப்புவாதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள்; முஸ்லிம் லீகோடு நாங்கள் உறவு கொண்டிருந்தபோது – இப்போது அல்ல, ஜின்னா காலத்திலேயே சொல்லுகின்றேன். அந்தக் காலத்தில் இருந்தே, ஜின்னா, அண்ணா என்று பேசப்பட்ட அந்தக் காலத்திலேயே முஸ்லிம் லீகில் சேர்ந்தவர்கள் எல்லாம் வகுப்புவாதிகள் என்று நாங்கள் அன்றைக்கு புறக்கணிக்கப்பட்டோம் ஆர்.எஸ்.எஸ்.க்கு ஒன்றும் நான் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. இருந்தாலும் பழைய அரசியல் வரலாறுகளை நினைவூட்டுவது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்பதால் நினைவூட்ட விரும்புகின்றேன்.

## ஜனசங்கம் இருந்த அரசில் சி.பி.ஐ.அங்கம் வகித்தது

*1967ஆம் ஆண்டு தேர்தல் முடிவுக்குப் பிறகு பஞ்சாப், உ..பி., பீகார் ஆகிய 3 மாநிலங்களிலும், அகாலிதளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஜனசங்கம் என்பது ஆர்.எஸ்.எஸ். கட்சியினுடைய நிழல் என்று சொல்லப்படுகின்ற ஜனசங்கம், பாரதிய கிரந்திதளம், அகாலிதளம் ஆகிய இந்தக் கட்சிகள் எல்லாம் பங்குபெற்ற அரசில் சி.பி.ஐ. கட்சி அங்கம் வகித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அணியிலே பங்குபெற மறுத்துவிட்டது. ஆனால் அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவை அளிக்க மார்க்சிஸ்ட் கட்சி ஒப்புக்கொண்டது. இது, 1967இல் சட்டசபை தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு!*

**கே.சுப்பராயன் :** முதல்வர் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரு மாநிலக் குழு தீர்மானித்தது அப்படி பங்குபெற்றது தவறு என்று மத்திய தலைமை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அதிகாரபூர்வமான கருத்தாக எடுத்துக் கொள்ள இயலாது.

**முதல்வர் கலைஞர் :** நான் அந்த அரசில் இவர்கள் அங்கம் வகித்தார்கள் என்றுதான் சொன்னேன். அது மாநிலக் குழுவா, மத்தியக் குழுவா என்பதெல்லாம் அல்ல. அப்படிப்பட்ட ஒரு அரசில் சி.பி.ஐ. அங்கம் வகித்தது என்பதுதான்; ஜனசங்கம் இருந்த அரசில்,

பிறகு, 1977இல் நடந்த தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையிலே ஜனதா அரசு அமைந்தது. ஜனதாவிலே இடம் பெற்ற கட்சிகளில் ஒன்று ஜனசங்கம் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அரசில் வாஜபாய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மார்க்சிஸ்ட் கட்சி வெளியேயிருந்து அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

1989–90இல் வி.பி.சிங் தலைமையிலே மத்தியில் ஆட்சி. அப்போது சி.பி.எம்., பா.ஜ.க. இரண்டுமே வெளியே இருந்து வி.பி.சிங் ஆட்சியை ஆதரித்தார்கள். அத்துடன், பல மாநிலங்களில் மைனாரிட்டி பலத்தோடு அமைந்த ஜனதா அரசுகளையும் பா.ஜ.க. ஆதரித்தது. என்னவோ, தி.மு.க.மாத்திரம் தான் ஜனசங்கத்தை அல்லது ஆர்.எஸ்.எஸ்.ஐ ஆதரிப்பதாகச் சொல்லி, ஆர்.எஸ்.எஸ்.ஐ.

நாங்கள் ஆதரிக்காத காலத்தில்கூட, பி.ஜே.பி.ஐ. ஆதரிக்கின்ற காரணத்தினாலேயே நாங்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஐ. ஆதரிக்கிறோம் என்று சொல்லி குற்றம் சாட்டுகின்ற அந்தத் தன்மைக்காகத்தான் இந்த சரித்திரத்தை நான் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

நம்முடைய அழகிரி அவர்கள், பெரியாருடைய கொள்கையிலும், அண்ணாவினுடைய கொள்கையிலும் நாங்கள் திடமாக இருக்க வேண்டும் என்பதில் ரொம்ப அக்கறையாக இருக்கிறார். பெரியாருக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ; அண்ணாவிற்கே அந்த அளவிற்கு அக்கறை இருக்குமோ இருக்காதோ; அவ்வளவு அக்கறையாக இருக்கிறார். மூப்பனார் கூட சொன்னார். கருணாநிதி செய்கின்ற இந்த வேலையைப் பார்த்து பெரியாரும் அண்ணாவும் இருந்திருந்தால் ரத்தக் கண்ணீர் வடிப்பார்கள் என்று சொன்னார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. குத்தூசி குருசாமி, விடுதலையிலே பலசரக்கு மூட்டை என்ற தலைப்பிலே எழுதுவார். அதிலே அவர் எழுதியிருந்தார். திராவிடக் கழகத்துக்காரர்கள், பெரியார், இவர்கள் கட்டைவிரல்களை எல்லாம் வெட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் பேசிய காலத்தில் குத்தூசி குருசாமி, பலசரக்கு மூட்டை என்ற தலைப்பில் விடுதலையில் எழுதிய அந்தக் கட்டுரை எல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

## பராசக்தி படம் என்ன பாடுபட்டு வந்தது? எத்தனை முறை தடை விதிக்கப்பட்டது?

"வாட்டர்" படத்தைப் பற்றிச் சொன்னார்கள்; என்னவோ இங்கே எல்லாம் தாராளமாக படம் எடுக்கிற மாதிரி. பராசக்தி படத்தைப் பற்றிச் சொன்னார்கள்; பராசக்தி படம் என்ன பாடுபட்டு வெளியே வந்தது, எத்தனை முறை அதற்கு தடை விதிக்கப்பட்டது; பராசக்தி படம் வந்தபோது காங்கிரஸ் நண்பர்கள் தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டு கண்டனம் செய்தார்கள். நம்முடைய நண்பர் சின்ன அண்ணாமலை அவர்கள் பராசக்தி எதிர்ப்புக்காக ஒரு அணியை அமைத்து தெருவுக்குத் தெரு, சென்னையிலும் சரி, திருச்சியிலும் சரி, கோவையிலும் சரி கூட்டம் போட்டு என்ன சொன்னார்கள் தெரியுமா? பராசக்தி படம் பார்க்கிற தியேட்டருக்கு பெண்களே நீங்கள் எல்லாம் கையில் துடைப்பக்கட்டையோடு செல்லுங்கள் என்று பேசினார்.

மறைந்துவிட்டார்; இருந்தாலும் அவர் பேசிய பேச்சு ஞாபகத்தில் இருக்கிறது. நான் அவரை ஒன்றும் இப்போது குறை சொல்ல விரும்பவில்லை. அந்த அளவிற்கு பராசக்தி படத்திற்கு எதிர்ப்பு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது தடை செய்யப்படும்; தடை செய்யப்படவேண்டும் என்றெல்லாம்கூட சொல்லப்பட்டது. ஒரு வாரப் பத்திரிகையில் பராசக்தியைத் தாக்கிப் பேசுவதை எழுதவே ஒரு அட்டைப் படமே போட்டார்கள். பரப்பிரம்மம் என்று போட்டு, ஒரு நிர்வாணப் பெண்ணை அந்த அட்டைப் படத்திலே போட்டு, பரப்பிரம்மம்; கதை வசவு தயாநிதி என்றே அதைச் சித்தரித்தார்கள்; அந்த அட்டைப் படத்திலே. அந்த

அளவுக்கு எதிர்ப்பு பராசக்தி வந்தபோது இருந்தது. அதைப் போல, சொர்க்கவாசல்; சொர்க்கவாசல் படத்திலே ஒரு பாட்டு, உடுமலை நாராயணக்கவியுடைய பாட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து சொல்வீரே;
நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

— என்று ஒரு பாட்டு. அது சென்சாரிலே அப்போது வெட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது; அறிந்து கொள்வீரே;
நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

— என்ற அந்த வரிகள் சென்சாரிலே அப்போது வெட்டப்பட்டது. அதற்குப் பிறகு அந்தப் பாட்டை நாராயணக்கவி மாற்றி எழுதிக் கொடுத்தார்.

"ஆகும் நெறி எது; ஆகா நெறி எது, அறிந்து கொள்வீரே, நன்றாய்ப் புரிந்து கொள்வீரே" என்று எழுத வேண்டிய நிலைமை அன்றைக்கு இருந்தது.

## காஞ்சித் தலைவன் படத்தில் 'வெல்க காஞ்சி' என்பதை 'வெல்க நாடு' என்று மாற்றச் சொன்னார்கள்

காஞ்சித் தலைவன் படத்திலே வாதாபி என்று ஓர் ஊர். காஞ்சிபுரம் என்று ஓர் ஊர். இரண்டு ஊருக்கும் சண்டை வாதாபியிலேயிருந்து படையெடுத்து வருகிறவன், "வெல்க வாதாபி, வெல்க வாதாபி" என்று சொல்லிக் கொண்டு வருகிறான். காஞ்சிபுரத்திலேயிருந்து படையெடுத்து கொண்டு வருகிற

நரசிம்மவர்மன், "வெல்க காஞ்சி; வெல்க காஞ்சி' என்று சொல்லி வந்தான். வெல்க காஞ்சி என்று சொன்னால், அது அண்ணாவைக் குறிக்கும் என்று சென்சார் வெட்டி விட்டார்கள். அதை மாற்றிப் போடச் சொல்லி "வெல்க நாடு; வெல்க நாடு" என்று, அதுவும் நாடுதான். இதுவும் நாடுதான். எந்த நாடு வெல்வது, இருந்தாலும், வெல்க நாடு என்று மாற்றிப் போடச் சொன்னார்கள்.

திரும்பிப்பார் படத்திலே, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, திரும்பிப் பாருங்கள்; அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்" இது ஒரு வசனம். அது வெட்டு; ஏன் என்று கேட்டால், சென்சார் ஆபீசர் சொல்கிறார். திருக்கோஷ்டியூர் கோவில் கோபுரத்திலே இராமானுஜச்சாரியார் ஏறி நின்று, கீழே குதித்து விழுந்து செத்துப் போய்விட்டார். அதனாலே நீ அவரைக் கிண்டல் பண்ணுகிறாய் என்று சொன்னார். நான் எழுதியது, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்; திரும்பிப் பாருங்கள்" அதை ஏற்றுக் கொள்ளவில்லை அன்றைக்கு இருந்த சென்சார். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையிலேதான் அப்போது படம் வெளிவர முடிந்தது. இப்போது உள்ள இந்தக் கஷ்டங்களைப் பார்க்கும்போது அந்தக் கஷ்டங்களெல்லாம் சாதாரணமானவை என்று யாரும் கூறிவிட முடியாது.

**ச. அழகிரி :** *எவ்வளவு சிரமங்கள் இருந்தபோதும், பராசக்தி படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி பராசக்தி படத்தை நீங்கள் எடுப்பதற்கு அனுமதி மறுக்கவில்லை; தடை செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற பாரதீய ஜனதா அரசாங்கம், 'வாட்டர்' படத்தை எடுப்பதற்கே இங்கே அனுமதிக்கவில்லை.*

**கருத்து சுதந்திரம் என்ற பெயரால் மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்தவும் கூடாது**

**முதல்வர் கலைஞர் :** *பிரச்சினை அது அல்ல. அரசாங்கம் அனுமதித்து ஒரு சாரார் அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான் பிரச்சினை. அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. வெளிநாட்டுக்காரர் வந்து படம் எடுக்கிறார். அதை இந்திய அரசாங்கம் அனுமதித்துவிட்டது. அதாவது, பி.ஜே.பி. அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்று சொல்வது தவறு. அனுமதித்து விட்டது. இங்கே உள்ளவர்கள் அது அவர்களைப் புண்படுத்துகிறது என்று சொல்லி, எதிர்க்கிறார்கள். நான் சொல்வது, கருத்து சுதந்திரத்தை எதிர்ப்பது முறையல்ல என்பதில் நான் அழகிரியோடு ஒத்துப் போகிறேன். அதே நேரத்தில் கருத்து சுதந்திரம் என்ற பெயரால், எல்லாவற்றையும் சொல்லி, மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவதும் கூடாது. அதையும் மறந்துவிடக் கூடாது. இந்து மதத்திலே உள்ள சில தவறான நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளையெல்லாம் ஒரு இந்துவைக் கொண்டு சொன்னால், அது விஷயம் வேறு. அதை இன்னொரு மதத்தைச் சேர்ந்தவரைக் கொண்டு சொன்னால் அந்த விஷயம் வேறு. இதையெல்லாம்*

எண்ணிப் பார்க்க வேண்டும். விரிவாக நான் இதைப் பற்றிப் பேசுவது நல்லதல்ல என்பதால் விட்டு விடுகிறேன்.

**தீரன் :** சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புகின்ற படங்களுக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தடை விதிக்கப்பட்டது என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 'வாட்டர்' திரைப்படம், ஒரு விதவையான இந்துப் பெண், தவறான வழியிலே நடப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறாள். அதிலிருந்து மீண்டு, அவள் ஒரு பொதுக் காரியத்திலே ஈடுபடுகின்ற ஒரு சிறப்பான செயலாக, ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரனை மணந்து கொள்கிற வகையிலே கதை போகிறது. இப்படிப்பட்ட ஒரு படமும், ஒரு சீர்திருத்த, புரட்சிகரமான படம்தான். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்த வகையில் நியாயமானது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் குமாரதாஸ் சொன்ன கருத்து தவறான கருத்து**

**முதல்வர் கலைஞர் :** இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன். அதனால், எனக்கு முரண்பாடான கேள்வியை தீரன் அவர்கள் கேட்கவில்லை.

இங்கே உரையாற்றிய நமது குமாரதாஸ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தேசத்தைப் பற்றிய, தேசத்தின் பாதுகாப்பைப் பற்றிய ஒரு குற்றச்சாட்டு. அதனால் நான் பதில் சொல்லியே ஆகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், "தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று

கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சுமார் **3** தினங்களுக்கு முன்பு மேற்கு பகுதியினுடைய இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் சென்னைக்கு வருகைத் தந்து ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். நீங்கள் இந்த விஷயத்தை மிகக் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வழியாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். உண்மையிலேயே லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் அவர்கள் அப்படிப் பேசவில்லை என்பதுதான் உண்மை. **4–3–2000** அன்று சென்னை இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு ஆண்டு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார். அப்போது "நமது நாட்டைச் சீர்குலைக்க பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. பல்வேறு வகைகளிலும் சதி செய்து வருகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

**"Pakistan's ISI was trying to destabilise India, Oberoi said"** என்று **The New Indian Express, Chennai, 5-3-2000** அன்று வெளிவந்தது. பி.டி.ஐயில் கூட.

**"Lt.Gen.Oberoi said forces like the Pakistani Inter-services Intelligence were going all out to destabilise the country in various ways and hence the armed forces had always to be fully on the guard"** என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார்.

இதுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வாயிலாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று சொன்னதாக நம்முடைய டாக்டர் குமாரதாஸ் சொன்ன அந்தக் கருத்து தவறான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மறுக்கப் போகிறீர்களா?—

**டாக்டர் தே. குமாரதாஸ் :** நான் நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே வேறுபடவில்லை. ஆனால் ஒரு கருத்து. இராணுவத் தளபதி இங்கிருந்து பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு தமிழ்நாடு வழியாக கடத்தினார் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் நான் திருத்திக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் கடைப்பகுதி நெல்லை மாவட்டம் சாத்தான் குளம், திருச்செந்தூர் ஆகியப் பகுதிகளிலே கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கிட்டத்தட்ட 100 முதல் 200 கோடி ரூபாய் போதைப் பொருள்கள் பிடிபட்டிருக்கிறது என்பது பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வந்த செய்தி. அவைகள் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகளின் மூலமாக கடத்தப்படுவதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலே விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இந்தப் பகுதியிலே இருக்கிறது. போதைப் பொருள்கள் கடத்துகிற ஒரு பகுதியாக தமிழ்நாடு அமைந்துவிடக்கூடாது என்ற உணர்வின் அடிப்படையிலே சொல்லப்பட்டது. போதைப்பொருள்கள் அப்படி கடத்தப்படுகிற

செய்திகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**எதிர்க்கட்சியில் இருந்தபோது ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறேன்**

**முதல்வர் கலைஞர் :** தங்களுடைய கருத்தாக சொன்னால் தவறு இல்லை. ஒரு லெப்டினென்ட் ஜெனரல் ஓபராய் அவர்கள் சொன்ன கருத்தாக சொன்னால்தான் தவறு என்று நான் குறிப்பிடுகிறேன். இது தங்களுடைய கருத்தாக இருக்குமேயானால் அதற்கும் என்னிடத்திலே பதில் இல்லாமல் இல்லை.

மத்திய அரசினுடைய வருவாய்த் துறை, நுண்ணறிவுப் பிரிவினரும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினரும் மத்திய சுங்கத்துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டத்தை மத்திய உளவுப் பிரிவினரும், மாநில க்யூ பிராஞ்ச் பிரிவினரும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள் என்பதையும் அதனால்தான் கடத்தப்பட்ட பொருள்கள் எல்லாம் பிடிபட்டிருக்கின்றன என்ற செய்தியைக் கூட தாங்களே சொல்கிறீர்கள் என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் சொன்னதற்காக அல்ல. குறிப்பாக குற்றச் சாட்டுக்களைச் சொல்வது தவறு அல்ல. எப்படி குறைகளைச் சொன்னால் அதைக் களைய வேண்டுமோ அதைப்போல குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது ஒரு ஜனநாயக அரசினுடைய தார்மீக

கடமையாகும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்பது ஒரு முறை. ஆதாரமே தேவையில்லை என்று ஒரு வாதம் எழுப்பப்பட்டு தலைவராகிய தாங்கள் அதற்கு தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். எனவே அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை.

பொதுவாக நான் இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த போது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதிலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும் சரி குறைகளையும் சொல்லியிருக்கிறேன். குற்றச்சாட்டுக்களையும் எடுத்து வைத்திருக்கிறேன். ஆனால், ஆதாரங்களோடு அந்தக் குற்றச்சாட்டுக்களை எடுத்து வைத்திருக்கிறேன்.

ஒருமுறை, மின்சார வாரியத்திற்காக எருக்கஞ்சேரியிலே நிலம் வாங்கியதிலே நடைபெற்ற ஊழலை விஸ்தாரமாக விவரித்துப் பேசும்போது அப்போது மின்வாரியத் துறை அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் எழுந்து, "என்ன ஆதாரங்களோடு பேசுகிறீர்கள்" என்று கேட்டார். "ஆதாரங்களை நான் அவைத் தலைவரிடத்திலே கொடுத்திருக்கிறேன். இப்போதும் தருகிறேன்" என்று சொல்லி அது சம்பந்தமான எல்லா பத்திரங்களையும் எடுத்து மேசை மீது வைத்தேன். அதை வாங்கிக்கொண்டு, நாளை விசாரித்து, அதைப்பற்றிப் பேசுகிறேன் என்று ஆர்.வி. அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அதை ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு

விசாரிக்கப்பட்டது. விசாரிக்கப்பட்டு நான் சொன்ன குற்றச்சாட்டு உண்மைதான் என்று நிரூபிக்கப்பட்டது.

## ஆதாரத்தோடு குற்றம் சாட்டியபோது எம்.ஜி.ஆர். அளித்த பதிலுரை

அதேபோல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, பல்கேரியா பால்டிகா கப்பல் பேரத்தில் நடைபெற்ற சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஒன்று, இரண்டு, மூன்று என்று இருபது ஆதாரங்களை இதே அவையிலே, இந்த இடத்திலே நான் எடுத்துவைத்துப் பேசினேன். அன்று பதிலளிக்க வேண்டிய எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய பதிலுரையை அன்றைக்கு நிகழ்த்தாமல் நாளைய தினம் நிகழ்த்துகிறேன் என்று சொல்லிவிட்டு மறுநாள் வந்து அந்தப் பதிலுரையை நிகழ்த்தினார்கள். அப்போது சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துவைத்த அந்த ஆதாரங்களையொட்டி அந்தக் கப்பல் வாங்குகிற அந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, எதற்கும் ஆதாரங்களை எடுத்து வைத்துப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், வேறல்ல.

ஆனால் இங்கே ஒரு கடத்தலைக் கண்டு பிடித்துவிட்டோம் என்பதற்காக பதவி விலகுங்கள் என்று சொன்னதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கடத்தலைக் கண்டுபிடித்து, வெறும் டிரைவரை அல்ல, சாதாரண அப்பாவி ஆட்களை அல்ல, அதற்கு மூலகர்த்தாக்களாக இருந்தவர்களையே கைது செய்து, அவர்களுக்குச் சொந்தமான 5 லாரிகளையும் பறிமுதல் செய்து,

வழக்கைத் தீவிரமாக நடத்துகிறோம். புலன் விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, 'நீங்கள் பதவி விலகுங்கள்' என்று அவசரப்பட்டுச் சொல்வது, வெறும் அரசியலுக்குத்தான் பயன்படுமேயல்லாமல் அது ஆக்கபூர்வமான ஒரு காரியமாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

பக்குவத்திற்கும், அமைதிக்கும் பெயர் பெற்ற பழனிச்சாமி கூட, அதைச்சொன்னால்தான் தன்னுடைய பேச்சு வேகம் என்று எண்ணிக் கொள்வார்கள் என்பதைப்போல, 'நேரு உடனடியாக பதவி விலக வேண்டும்' என்று சொன்னார். நேரு பதவி விலக வேண்டுமென்று நேரு காலத்திலிருந்தே சொல்லப்படுகிற விஷயம்தான். ஆனால் ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்து கைது செய்ததற்காக, அந்தக் கடத்தலைத் தடுத்து நிறுத்தியதற்காக, பறிமுதல் செய்ததற்காக, அதைச் செய்தவர்களை உடனடியாக பதவி விலக வேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார் :** நேற்று இந்த பிரச்சினையிலே விளக்கம் தருகிற போது, அமைச்சர் அவர்கள், **1996–97**ஆம் ஆண்டு, **1997–98**ஆம் ஆண்டு என்று ஆண்டு வாரியாக புள்ளி விவரங்களைத் தந்தார்கள். **1996–97**ஆம் ஆண்டு கோடிக் கணக்கான ரூபாய் அரிசி கடத்தப்பட்டது என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், **2000–2001**ஆம் ஆண்டிலே இந்தத் தவறு நடந்திருக்கக் கூடாது.

**முதல்வர் கலைஞர் :** உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்.

**பி.ஆர்.சுந்தரம் :** இந்த உணவுக் கடத்தலிலே, சி.பி.சி.ஐ.டி. விசாரணை வைத்திருக்கிறீர்கள். அரிசி வாங்கிய ஜெகதீசன் என்பவரை இதுவரை பிடிக்கவில்லை. ஆகவே, இதில் நீங்கள் நீதி விசாரணை நடத்தவேண்டும்.

**மு. அப்பாவு :** முதலமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்றுக் கொள்கிறேன். இந்து பத்திரிகையிலே, மத்தியிலே, ஆட்சி செய்கின்ற மத்திய உணவுத் துறையினுடைய உயர் அதிகாரியே, தமிழகத்தில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படுகின்ற அரிசியில் பெரும்பகுதி வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது என்பதை அவரே சொல்லும்போது, இந்த ஆதாரம் போதாதா? என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர் :** அப்படி விற்கப்பட்ட, எடுக்கப்பட்ட, கடத்தப்படுகிற அரிசியெல்லாம் பிடிக்கப்படுகிறது. அந்த விவரத்தைத்தான், தன்னுடைய உரையில் இறுதியாக, நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலே, அவர் சொன்ன வார்த்தைகள், அரிசி கடத்தல்கள் அப்போதும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், அப்போது வழக்குகள் போட்டு பொருட்களைக் கைப்பற்றினார்களே தவிர, ஒருவரைக்கூட, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே

அடைக்கவில்லையென்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், கழக அரசில் நான்கு ஆண்டு காலத்தில் 14 பேரை, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைத்திருக்கின்றோம். ஜெயலலிதா ஆட்சியில் **18,871** வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கழக ஆட்சியில் **16,991** வழக்குகள். கடத்துவது ஒரு மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். **100** மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். இது வழக்குகளினுடைய எண்ணிக்கை. ஆனால், இந்தக் கடத்தலிலே சம்பந்தப்பட்டவர்கள் யாரையும் தண்டிக்கின்ற, சிறையிலே அடைக்கின்ற காரியங்கள் கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை, இந்த ஆட்சியிலேதான் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**29.11.1999** அன்று அப்பாவு சொன்ன அதே இந்து பத்திரிகையிலே தான் எழுதியிருக்கிறார்கள்.

> "பொது விநியோகத்தில் சாதாரண ரக அரிசியை நிறுத்திய அரசின் அறிவிப்பால் இதுவரை அதைவேறு வகையிலே விநியோகித்துப் பலன் பெற்றவர்களுக்குத் தான் பாதிப்பே தவிர, குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என்று அந்த ஏழை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன"

— என்று இந்து எழுதுகிறது. அதை ஏற்றுக் கொண்டால் இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, அப்பாவு அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ, இங்கே அரிசி விலை ஏறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்று ஒரு பிரச்சாரம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம் என்று கூறுகிறார்கள். முன்பு மூன்று கிலோ 2 ரூபாய் வீதம் கொடுத்தோம். அது 6 ரூபாய். 17 கிலோ ரூ.3.75 வீதம் கொடுத்தோம். அது ரூ.63.75. ஆக மொத்தம் ரூ.69.75 செலவழித்த ஒருவன், இப்போதுள்ள 20 கிலோ அரிசியும் ரூ.3.50 வீதம் கொடுக்கும் போது 70 ரூபாய் தான் செலவழிக்கிறான். அதிகமாக 25 பைசா தான் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் 20 கிலோ அரிசியும் நல்ல அரிசியாக கிடைக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

## அரிசி விலையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

மாநிலத்தினுடைய ஒப்பீடுகளைப் பார்த்தால்; மேற்கு வங்கத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 5 ரூபாய், கிலோ அரிசி; மேலே உள்ளவர்களுக்கு 10 ரூபாய் 40 காசு. எவ்வளவு கிலோ தருகிறார்கள் என்றால் ஒருவருக்கு 2 கிலோ அரிசி தான் கொடுக்கிறார்கள்.

கர்நாடகத்திலே 10 கிலோ அரிசி தான் கொடுக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு ரூ.3.50; மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.80.

கேரளாவிலே வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளவர்களுக்கு ரூ.3.90; மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.60, மொத்தம் கொடுக்கிற அரிசி 10 கிலோ தான்.

ஆந்திராவிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே ரூ.3.50 மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.50, 20 கிலோ தருகிறார்கள்.

தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கும் மேலேயுள்ளவர்களுக்கும் 3.50 ரூபாய் வீதம் 20 கிலோ அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் குறைக் கூறுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

அப்பாவு இன்னொன்று சொன்னார். கோவில்பட்டியில் ஒரு அதிகாரி. டி.எஸ்.ஓ. அவருடைய சாவைப் பற்றிச் சொன்னார். அதைப்பற்றி நான் விசாரித்தேன். ஏற்கெனவே அது பற்றி தகவல்கள் வந்திருக்கிறது என்னிடம் மீண்டும் அதை விசாரித்து, உறுதிப்படுத்திக் கொண்டேன். கோவில்பட்டி வட்ட வழங்கல் அதிகாரி, டி.எஸ்.ஓ. ராஜகோபால் 7.1.98 அன்று, இரண்டு வருடங்களுக்கு முன்பு, இப்போதுள்ள பிரச்சினைகளோடு அப்பாவு இதைச் சேர்த்துப் பேசினார். இது 1998—ஆம் ஆண்டு பிரச்சினை. 98—இல், தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது பற்றி கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய எண்.21/98, பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்களும் மற்றவர்களும் புகார் கூறியதால் இவ்வழக்கு 302 ஐ.பி.சி. பிரிவாக மாற்றப்பட்டு, சி.பி.., சி.ஐ,.டி. விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

15.2.1999 அன்று இவ்வழக்கு தற்கொலை தான் என்று முடிவு செய்யப்பட்டது.

*3.1.98* அன்று **TCG** *9805* **TSF** *5254* என்ற இரு லாரிகள் அருப்புக்கோட்டையில் இருந்து அரிசி ஏற்றிச் செல்லும் போது எட்டையபுரத்தில் அவை ராஜகோபால் மற்றும் அதிகாரிகளால் மறிக்கப்பட்டு பின்னர் கோவில்பட்டி அரிசி வியாபாரி பழனிசெல்வம் மூலம் *13* ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொண்டு ராஜகோபால் அந்த லாரிகளை விடுவித்துள்ளார்.

*6.1.1998* அன்று அருப்புக்கோட்டை அரிசி வியாபாரிகள் கோவில்பட்டி கோட்டாட்சியரிடம் இதுகுறித்து புகார் செய்யவே – கோட்டாட்சியர், ராஜகோபாலை அழைத்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தியுள்ளார்.

ஏற்கெனவே *81*–ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கில் சிக்கி சிரமத்திற்கிடையே இருந்த ராஜகோபால் எவ்வாறாவது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்ததாகவும், ஆனால் பணத்திற்கு வழி செய்ய இயலாததால் மனமுடைந்து *7.1.1998* அன்று விடியற்காலையில் தற்கொலை செய்து கொண்டதாக சி.பி., சி.ஐ.டி. முடிவுக்கு வந்தது என்ற இந்த விவரத்தை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

## கொடைக்கானலில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

நம்முடைய செல்லக்குமார் கொடைக்கானல் உட்லன்ஸ் ஹோட்டல் பற்றிச் சொன்னார்கள். **Change of land use** அதிலே அதிகாரிகள் செய்த தவறுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த அதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

அதை செல்லக்குமார் சுட்டிக்காட்டினார். இதற்கும் வேறு ஒரு கொடைக்கானல் கேசுக்கும் சம்பந்தம் கிடையாது. அது மலை, இது மடு என்பதை மாத்திரம் தம்பி செல்லக்குமாருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அவர்கள் இன்னொன்று சொன்னார்கள்.

**பரிந்துரை செய்த இரண்டு செயலாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை**

**டாக்டர் அ.செல்லக்குமார் :** இந்த மூன்று ஹோட்டலுக்கான அனுமதியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சருடைய தகவலுக்கு, பார்வைக்கு வராமல் ஒரு அரசாணை ஒரு அரசிலே பிறப்பிக்கப்படுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. அரசாணை பிறப்பிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை உணர்வு காரணமாக அதை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்குத்தான் நான் பாராட்டும் தெரிவித்தேன். முதலமைச்சர் அவர்கள் இதைத் தட்டிக் கழிக்காமல் தவறு யார் செய்திருந்தாலும் அந்தத் தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தன் ராஜினாமாவை அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**முதல்வர் கலைஞர் :** அவர் சொன்ன கொடைக்கானல் பிரச்சினை வேறு. இந்தக் கொடைக்கானல் பிரச்சினை வேறு.

4 ஆண்டு காலமாக நாட்டிலே விவாதிக்கப்படுவதல்ல இது. அந்த விவகாரமே வேறு; எல்லோரும் தடுத்து, செயலாளர்கள் எல்லாம் தடுத்து, அதைக் கேட்காமல் போடப்பட்ட கையெழுத்து அது. அது நீதிமன்றத்திலேயே ஏற்கெனவே இருந்து தண்டிக்கப்பட்ட விவகாரம். மறுபடியும் நீதிமன்றத்திலே அப்பீலிலே இருக்கிற விவகாரம். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை.

ஆனால், இதில் ஒரு செயலாளர், இன்னொரு செயலாளருக்கிடையே ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அமைச்சர், அந்த மாறுபாடு ஏற்பட்டதும், ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவினர் சென்று அதைப் பார்த்துவிட்டு வந்து விவரம் தெரிந்து கொண்டு வந்து சொன்னார்கள். போனவர்கள் இவர்களுக்குக் கொடுக்கலாம். விதி விலக்கு அளிக்கலாம் என்று சொன்னார்கள். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டார். இந்த விவரம் எனக்குத் தெரிந்தவுடன் உடனடியாக அதைப் பற்றி விசாரிக்கச் சொல்லி, தலைமைச்செயலாளருக்கு உத்தரவிட்டு, தலைமைச் செயலாளர் அந்த உத்தரவின்படி நடந்து கொண்டு இரண்டு செயலாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஒழுங்கு நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் சொல்ல முடியும்.

அடுத்து 'வோர்ல்ட் டெல்' பற்றி செல்லக்குமார் இங்கே சொன்னார். சென்ற ஆண்டே இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசி இருக்கின்றோம்.

அவர் இப்போது கூறிய குற்றச்சாட்டு, அந்த நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல. அந்த நிறுவனத்திற்கு ஏன் குளோபல்

டெண்டர் போடாமல் இந்தப் பணியினை ஒப்படைத்தீர்கள் என்ற இரண்டு தான்.

## அரசு நிறுவனத்துடன் இணைந்த கூட்டு திட்டங்களில் குளோபல் டெண்டர் தேவையில்லை

குளோபல் டெண்டர் பற்றி நேற்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விளக்கியிருக்கிறார். ஒரு தொழில் தொடங்குவதற்காக தனியாரோ – அல்லது அரசு நிறுவனத்தோடு இணைந்து கூட்டு நிறுவனமாக **Joint Venture** என்ற அடிப்படையிலே முன்வரும் போது அதற்கு குளோபல் டெண்டர் விடத் தேவையில்லை என்பது மரபு.

உதாரணமாக கூற வேண்டுமேயானால் **Ford, Hyundai** போன்ற தொழிற்சாலைகள் குளோபல் டெண்டர் விட்டுத் தரப்படவில்லை. இது தனியார் தொழில் தொடங்குவதற்கு உதாரணம், **M.O.U.** போட்டு விடப்பட்டது.

**Joint Venture**–க்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் ஸ்பிக் தொழிற்சாலை கூட்டு நிறுவனத்திற்கு உதாரணம். அதுவும் குளோபல் டெண்டர் விட்டுத் தரப்படவில்லை.

இந்தத் திட்டத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்பு இருக்கும் வகையில் *30.11.99* அன்று மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 'வோர்ல்ட் டெல்' நிறுவனம் *18.1.2000* அன்று மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையிலிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய இணைய

மையங்கள் ஏற்படுத்துவதற்கு அடிப்படைத் தேவையான, தேசிய நெடுஞ்சாலைகள், மாநிலச் சாலைகள் மற்றும் இதர சாலைகள் வழியாக **Optic Fibre Cables** அமைக்கத் தேவையான அனுமதி பல்வேறு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தகவல் தொடர்பு சம்பந்தமான தாராள மயமாக்கல் கொள்கையின்படி, இணையம் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு, யார் வேண்டுமானாலும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி இதுவரை மத்திய அரசிடமிருந்து நூறு நிறுவனங்கள் அனுமதிகளைப் பெற்றுள்ளன. அனுமதி வழங்குதலை மத்திய அரசு தாராளமயமாக்கியதன் நோக்கமே, **VSNL** மற்றும் **DOT** தவிர, மற்ற நிறுவனங்கள் இணைய சேவையை எளிதாக எல்லா இடங்களுக்கும் வழங்கிட வேண்டும் என்பது தான்.

இந்த 'ஆப்டிக் பைபர் நெட்வொர்க்' என்பது, மாநிலம் முழுவதும் தொலைதூரத்தில் உள்ள கிராமங்களிலேகூட இணைய வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான அதிநவீன, அதிவேகம் கொண்ட தொடர்பு சாதனமாகும். இது இணையத்திற்காக காத்திருக்கும் நேரத்தை வெகுவாக குறைத்து விடுகிறது. இந்த நிலையில், 'வோர்ல்ட் டெல்' நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் இணைய மையங்களாக அமைப்பதற்கு முன் வந்துள்ளது.

'வோர்ல்ட் டெல்' நிறுவனம் 'ஆப்டிக் பைபர் நெட்வொர்க்'ஐ தமிழ்நாடு முழுவதும் அமைத்ததற்குப் பிறகு சேவையை கட்டாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, யாரையும் யாரும் நிர்ப்பந்திக்க முடியாது.

**VSNL** என்ற நிறுவனம், நாட்டிற்கு வெளியே இணைய தொடர்பு **(Internet access)** மற்றும் தகவல் இணைப்பு **(Data links)** ஆகியவற்றை வழங்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட நிறுவனம். மாநிலத்திற்குள் தகவல் தொடர்புக்கு அடிப்படைத் தேவையான கட்டமைப்புகளை அந்த நிறுவனம் வழங்குவதில்லை.

**MTNL** என்ற நிறுவனத்தைப் பொறுத்தவரை மும்பையிலும், டெல்லியிலும் மட்டுமே அது செயல்பட்டு வருகிறது. சென்னையில் இல்லை.

**DOT**—ஐ பொறுத்தவரை தமிழ்நாட்டில் தகவல் தொடர்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை செய்ய இதுவரை முன்வரவில்லை. அதனால்தான், சென்னை தொலைபேசித் துறையை ஒரு நிறுவனமாக மாற்றி, அதிக முதலீடுகளைச் செய்யவேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து கோரி வருகிறோம்.

'வோர்ல்ட் டெல்' நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது ஒரு கூட்டு நிறுவன ஒப்பந்தம் மட்டுமே. இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது **Tender, Bidding** என்பதெல்லாம் தேவை இல்லை. மாநில மக்களுக்கு பயன்படும் என்று தோன்றும் போது, திறன் பெற்றுள்ள எந்த நிறுவனத்தோடும் இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் **(Joint Venture)** செய்து கொள்ளலாம். இப்படி கூட்டு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையோ அல்லது உருவாக்கப்படும் சேவைகளையோ,

அரசோ அல்லது அரசு நிறுவனங்களோ வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே உரிமை **(Non-exclusive basis)** என்ற அடிப்படை எதுவும் இல்லாதது.

'வேர்ல்ட் டெல்' நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப்போல, அரசு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் எந்த நிறுவனமும், அதுபோன்றதொரு கூட்டு முயற்சியாகவோ தனியாகவோ ஒப்பந்தத்தை செய்துகொள்ள முன் வரலாம். இதில் ஒளிவு மறைவு எதுவும் கிடையாது.

செல்லக்குமார் சொல்லியது போல இன்போசிஸ், சத்தியம், டிஸ்னெட், அல்காடில், சீமென்ஸ் போன்ற நிறுவனங்கள் வேர்ல்ட் டெல் நிறுவனத்திற்கு இணையாக தமிழ்நாட்டில் இணைய மையங்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை அமைக்க முன்வந்தால் வேர்ல்ட் டெல் நிறுவனத்திற்கு என்ன நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டதோ அதேபோல அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

**டாக்டர் அ.செல்லக்குமார் :** தனியார் நிறுவனம் என்பதற்கு நான் சொல்கிறேன். *27.7.1999* அன்று கம்பெனி லா போர்டு அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய பங்குதாரர்கள் யார் என்று சொன்னால்

1. **B.H.Kothari, No.11 M.G.Road, Chennai - 34**

2. **Dr.N.Ravi, 302. Pinner Road, Horrow, Middlesex, HAI, 4LB., U.K.**

இவர்கள் இரண்டு பேரும் தான் பங்குதாரர்கள் என்று கம்பெனி லா போர்டிலே மத்திய அரசாங்கத்தினுடைய கம்பெனி லா போர்டிலே பதிவு செய்யப்பட்ட சான்றுகள் நான் வைத்திருக்கிறேன்.

**பேரவைத் தலைவர் :** ஒப்பந்தம் – டெண்டர் கால்ஃபார் பண்ண வேண்டிய முறை தேவையில்லை என்பது முதலமைச்சருடைய வாதம். ஆகையினால் நீங்கள் அதற்கு மேலே வாதம் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை.

**முதல்வர் கலைஞர் :** யார் வேண்டுமானாலும் இந்த வேலையைச் செய்யலாம் என்று இருக்கும் போது அதற்கு டெண்டர் தேவையில்லை. எம்.ஓ.யு. போதும் என்பது தான் என்னுடைய வாதம். இங்கு செல்லக்குமார் சொன்ன அந்த கம்பெனிகளும் கூடவரலாம். அது வருவதற்கு தடை கிடையாது.

## புறம்போக்கு நிலத்தில் 20 ஆண்டுகள் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா

நான் இந்த ஆளுநர் உரையில் மிக முக்கியமான ஒரு சீர்திருத்தமாக புறம்போக்கு நிலங்களை 20 ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு அரசுக்குத் தேவைப்படாமல் இருந்தால் அவர்களுக்கே வழங்கப்படும் என்ற ஒரு திட்டம் – நிலச்

சீர்திருத்தத்திலே இந்த அரசுக்கு நீண்ட காலமாக இருந்து வருகின்ற ஆர்வத்தினுடைய அடையாளமாகவும் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய வீடு, மனை இவைகளுக்காக நாம் ஆக்கபூர்வமாக செய்யவேண்டிய காரியங்களை செய்து வருகிறோம். இவைகள் எல்லாம் ஒரு தொடர்கதை. நில உச்சவரம்புச் சட்டம் **1960**—ஆம் ஆண்டு **30** ஸ்டாண்டர்டு ஏக்கரா என்கின்ற அளவுக்கு அறிவிக்கப்பட்ட போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அந்த சீரிய திட்டத்தை காமராஜரையே ஏமாற்றுகின்ற அளவிற்கு அன்றைக்கு பலர் செயல்பட்டு நிலங்களைப் பிரித்துக் கொண்டு அதன் காரணமாக வெற்றி பெற முடியாமல் செய்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்த நிலத்தில் **24,194** ஏக்கர் தான் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு, **16,330** ஏக்கர் தான் கைப்பற்றப்பட்டு அதில் ஒரு ஏக்கர் கூட உபரி நிலமாக யாருக்கும் வழங்கப்படவில்லை. அதையொட்டித்தான் **15.2.1970**—ல் நான் முதலமைச்சராக இருந்த போது **15** ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற ஒரு சட்டத்தைப் போட்டு எடுக்கப்பட்ட உபரி நிலம் **1,97,900** ஏக்கர். நிலம் அற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் **1,71,673** ஏக்கர். மீதம் உள்ள நிலங்கள் நீதிமன்றங்களிலே பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. **15** ஸ்டாண்டர்டு என்று கொண்டு வந்துவிட்டு பிறகு **1,97,900** ஏக்கர் எடுத்தோம். **1,71,673** பேருக்கு நிலத்தை வழங்கினோம். அதிலே பயன் பெற்ற உழவர்களுடைய எண்ணிக்கை **1,37,236** பேர்.

இவர்களில் ஆதிதிராவிடர்கள் **61,985** பேர். பழங்குடி மக்கள் **204** பேர். **1971**—ஆம் ஆண்டு குடியிருப்பு மனைச் சட்டம்

என்றவொரு தீவிர சட்டத்தைக் கொண்டு வந்து 1,75,000 பேருக்குக் குடியிருப்புக்களைச் சொந்தமாக்கிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை அனைவரும் அறிவீர்கள். அப்போது மதிப்பிற்குரிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், அந்த விழா திருத்துறைப்பூண்டியிலே நடைபெற்றபோது – நம்முடைய பழனிச்சாமி அவர்களெல்லாம் ரொம்ப இளைஞர்கள் அப்போது; அந்த விழா நடைபெற்ற போது மணலி சொன்னார்கள்– 'பல தோழர்களுடைய ரத்தத்தைச் சொரிந்தும் கிடைக்காத இந்த வரத்தை ஒரு துளி மையைச் செலவழித்து கருணாநிதி சட்டமாக ஆக்கியிருக்கிறார்' என்று அன்றைக்குப் பேசி பெருமைப்படுத்தினார்.

இதிலே ஆதிதிராவிடர்கள் மாத்திரம் இலட்சத்து இரண்டாயிரம் பேர். இதிலே பலன் பெற்றார்கள். இப்படி வரிசையாக நிலச் சீர்திருத்தத்திலே அக்கறையுள்ள இந்த அரசு இப்போது பட்டாக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக, 20 ஆண்டுகள் புறம்போக்கு நிலங்களிலே குடியிருந்தவர்களுக்கு மனைப்பட்டா, அரசுக்குத் தேவைப்படாத பட்சத்தில், வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் அறிவித்துள்ளது.

நான் எதிர்பார்த்தேன், எல்லோரும் இதுபற்றிப் பேசுவீர்கள் என்று. யாரும் பேசவில்லை. சில நண்பர்கள் பேசியிருக்கின்றீர்கள். எல்லோரும் இதைப்பற்றிப் பேசவில்லை. ஏனென்றால் இது ஒரு மிக முக்கியமான அறிவிப்பு. இருந்தாலும்கூட இப்போது சொல்லப்பட்ட கருத்துக்கள், சி. ஞானசேகரன், கே.சுப்பராயன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் அவர்களெல்லாம்

சொல்லிய அந்தக் கருத்துக்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பணி நியமன சுழற்சி முறையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கூடுதல் இடம்

ஒரு முக்கியமான அறிவிப்போடு என்னுடைய பேச்சை முடிக்க இருக்கின்றேன். அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்யும்போது சுழற்சி முறையைப் பற்றி அன்பிற்குரிய நண்பர் ராமதாஸ் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர்களும், தீரன் போன்றவர்களும் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு அரசுக்கும் இயல்பாக உள்ள அந்த உணர்வோடு அதை அறிவிக்கின்றேன்.

அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்யும்போது, எந்த இடத்திலே இடஒதுக்கீடு சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும் என்பது குறித்து அரசின் நிர்வாகச் சீர்திருத்தத்துறை 13–8–1992இல் ஒரு ஆணை, ஆணை எண் 280–ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, முதல் 10 பணிகளுக்குத் தற்போது பின்பற்றிவரும் சுழற்சி முறையின்படி பொதுப்பட்டியலிலே உள்ளவர்களுக்கு 4 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இடம் என்றும் இப்போது இருக்கிறது.

இந்த முறையை மாற்றி பொதுப்பட்டியலிலே உள்ளவர்களுக்கு *3* இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு *2* இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு *3* இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு *2* இடங்கள் என்றும் மாற்றியமைக்கும்படி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை ஏற்று இனிமேல் முதல் *10* இடங்களுக்கு சுழற்சி முறையைக் கணக்கிடும்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இதுவரை ஒரு இடம் என்பதற்குப் பதிலாக *2* இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்று கூறி, ஆளுநர் உரையின் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எல்லா உறுப்பினர்களுக்கும், எதிர்த்தும், ஆதரித்தும் பேசிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஞானசேகரன் தூண்டிவிடுகிறார். Walk-out உண்டா என்று கேட்கிறார். ஆளுநர் உரையிலே Walk-out மரபல்ல என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்



# நிதி நிலை அறிக்கை

# 2000- 2001

# நிதிநிலை அறிக்கை
# 2000 - 2001

தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

**24–3–2000 அன்று நிதிநிலை அறிக்கையினை சட்டப்பேரவை முன்வைத்து ஆற்றிய உரை.**

*வெளியீடு :*

இயக்குநர்,

செய்தி–மக்கள் தொடர்புத்துறை

சென்னை.

# நிதிநிலை அறிக்கை
# 2000 - 2001

சிறப்பு வெளியீடு எண் : 30

'தமிழரசு' இலவச வெளியீடு

மார்ச் 2000

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

**தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.கருணாநிதி அவர்கள் 2000–2001 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 நாளன்று ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உரிய கருவி

உற்ற காலம்

ஆற்றும் வகை

ஆற்றிடும் பணி

ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுவதே சிறந்த அமைச்சு என இலக்கணம் வகுத்து,

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்

அருவினையும் மாண்டது அமைச்சு"

என்று அய்யன் திருவள்ளுவர் சுட்டிக்காட்டும் குறளுக்கேற்ப ஆட்சி நடத்தும் எமக்கு,

மத்திய அரசில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சி மலர வேண்டுமென்பதிலும், மத்திய ஆட்சிமொழிகளாக அனைத்து தேசிய மொழிகளும் இடம் பெறும் வண்ணம் முதற்கட்டமாக தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி கிடைத்திட வேண்டுமென்பதிலும், திராவிடப் பேரியக்கத்தின் சமூக நீதிக் கொள்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிட வேண்டுமென்பதிலும், ஏழையெளிய நடுத்தர மக்கள், தாழ்த்தப்பட்டோர், மிகவும்

பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் முற்போக்கு வழியில் குறுக்கிடும் தடைகளை உடைத்தெறிந்து முன்னேற வேண்டுமென்பதிலும், சிறுபான்மைச் சமுதாயத்து மக்களின் பாதுகாப்பையும் மத நல்லிணக்கம், மனித நேயம் இணைந்த சமூக ஒற்றுமையைப் பேணிக் காத்திட வேண்டுமென்பதிலும், யாராலும் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாத உறுதியுண்டு என்னும் கொள்கை முழக்கம் செய்திடும் இந்த அரசின் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவையின் முன்னும் அருமைத் தமிழக மக்களின் காலடிகளிலும் வைத்திடும் இந்த நேரத்தில்;

தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டளையினையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதும், **17.6.1967** அன்று இதே மாமன்றத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் வரவுசெலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றியபோது,

"சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தை



நாம் மறந்து விடலாகாது. `பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் நெறியினின்றும் வழுவி, மரபழித்துக் கொண்டு, பிளவுபட்டுக் கிடக்கும் தமிழக மக்களிடம் கப்பிக் கொண்டிருக்கும் சாதிப்பிடிப்பு நீக்கப்பட்டு, சமூக ஒருமைப்பாடு ஏற்பட்டாக வேண்டும் என்ற கொள்கையிலே இந்த அரசு பற்று மிகக் கொண்டிருக்கிறது என்பதனை அனைவரும் அறிவர். இன்றைய பேதமும், பிளவும் நீங்கி `எல்லோரும் ஓர் குலம் – ஓர் நிறை' என்ற குறிக்கோள் வெற்றி பெற வேண்டும்.

நாங்கள் சமூக நீதியின் அடிப்படையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள்; சேமிப்பு, சிக்கனம் ஆகிய நற்பண்புகளை என்றுமே வலியுறுத்தி வந்திருக்கும் தமிழகத்தின் பழம்பெரும் பண்பாட்டின் வழி வந்தவர்கள்"

–என்று முழக்கமிட்டது இன்றும் எனது சிந்தை அணு ஒவ்வொன்றிலும் செம்புலப் பெயல்நீர் போல் கலந்திருக்கிறது.

அதே நம்பிக்கையுடனும், அதே குறிக்கோளுடனும் – `என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று, தந்தை பெரியார் தந்த பார்வை, அண்ணா வகுத்தளித்த பாதை இவற்றைப் போற்றி, இம்மியளவும் வழுவிடாமல் – தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தொண்டூழியம் செய்து வருகின்றேன்.

வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிடவும், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திடவும், உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்திட என்றைக்கும் நான் சித்தமாய் இருக்கின்றேன் என்ற உறுதியினை இந்த மாமன்றத்தின் மூலம் என்னரும் தமிழ்நாட்டினர்க்கு வழங்கி, 1999–2000 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 2000–2001 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீடுகளையும் இந்த அவை முன் படைக்கிறேன்.

## பொருளாதார வளர்ச்சி

2. நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Gross State Domestic Product) 6.6 விழுக்காடாக இருக்கும். 'ஆட்டோமொபைல்' போன்ற முக்கிய தொழில்களில் தேக்க நிலை அகன்று உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் தொழில் துறையின் (manufacturing sector) வளர்ச்சி, 13 விழுக்காடாக இருக்கும்.

3. வரும் நிதியாண்டில் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், ஊரகச் சாலைகள், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள தெருக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான மொத்த முதலீடு ரூ.1685 கோடியாக இருக்கும். தொலைத் தொடர்பு துறையில் மொத்த முதலீடு ரூ.2285 கோடி ஆகவும், குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணி ஆகியவை உள்ளிட்ட நகர்ப்புற கட்டமைப்பு வசதித் திட்டங்களில் முதலீடு ரூ.1407 கோடியாகவும், மின் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு மின் வாரியத்தின் முதலீடு ரூ.1034 கோடியாகவும் இருக்கும். இத்துடன், மாநிலத்தின் மின் உற்பத்தியில் தனியார் துறையினர் ரூ.1332 கோடி அளவுக்கு முதலீடு செய்வார்கள். வரும் நிதி ஆண்டில் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் ரூ.482 கோடி முதலீடு மத்திய அரசினால் செய்யப்படும்.

## மத்திய மாநில நிதி உறவுகள்

4. மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து 29 விழுக்காட்டினை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது, மொத்த வரி வருவாயை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக நிகர வரி வருவாய் அடிப்படையாகக் கொள்ளப்படும் என்று மத்திய அரசு அண்மையில் குறிப்பிட்டதை மறு ஆய்வு செய்யுமாறு நான் பிரதமரையும், மத்திய நிதியமைச்சரையும் கேட்டுக் கொண்டேன். அப்போது அவர்கள் நிகர வருவாய் அடிப்படையில் கணக்கிடுகையில் மாநிலங்களுக்கு ஏற்படும்



இழப்பை ஈடுசெய்திட இந்தப் பகிர்வின் விழுக்காட்டினை தக்கவாறு உயர்த்தி அளிப்பதாக உறுதி அளித்துள்ளார்கள்.

5. தமிழ்நாடு போன்று வேகமாக முன்னேறி வரும் மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சிக்கும், வறுமை ஒழிப்புக்குமான பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றன. இந்த மாநிலங்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீட்டைக் குறைப்பதற்குப் பதில், கூடுதல் நிதியாதாரங்களை அளித்திட வேண்டுமென்று நாம் பதினோராம் நிதிக்குழுவிடமும், மத்திய திட்டக் குழுவிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

## *உள்ளாட்சி அமைப்புகள்*

6. மாநில அரசின் வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.845 கோடி வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் இத்தொகை ரூ.1036 கோடியாக உயர்த்தப்படும். இதுதவிர, கேளிக்கை வரியில் 90 விழுக்காடு பங்காக ரூ.78 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். மாநில அரசின் பல்வேறு மானியங்கள், வரி வருவாய்ப் பங்கீடு மற்றும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் உள்ளாட்சி

மன்றங்களுக்கு, வரும் நிதியாண்டில் மொத்தம் ரூ.2401 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ஆண்டுத் திட்டத்தையும், ஐந்து ஆண்டுத் திட்டத்தையும் அடுத்த ஆண்டு முதல் தயாரித்து வழங்கிடும் வகையில் மாவட்ட திட்டக் குழுக்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். **மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வந்த இத்திட்டக் குழுக்கள், இனி மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் செயல்படும்.** இக்குழுக்கள் இயங்குவதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## *ஊரக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு*

8. கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம், கிராம சுய வேலை வாய்ப்பு பொன்விழாத் திட்டம் போன்ற திட்டங்களுக்காக மாநில அரசு ரூ.73 கோடியும் மத்திய அரசு ரூ.219 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளன. இதன் மூலம் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள் பயன் பெறும்.

9. நடப்பு நிதியாண்டிலும் வரும் நிதியாண்டிலுமாக 11,600 கி.மீ. கிராமச்சாலைகளை தார்சாலைகளாக்கவும், 5,000 கி.மீ. தெருக்களை சிமெண்ட் வீதிகளாக்கவும் சுமார் ரூ. 900 கோடி செலவிடப்படும். நடப்பு நிதியாண்டில் 3,600 கி.மீ. தார்சாலை அமைக்கும் பணியும், 2,800 கி.மீ. சிமெண்ட் வீதிகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பணி வரும் நிதியாண்டில் நிறைவு பெறும்.

**10. பொது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள உழவர் சந்தைகளில் தாங்கள் விளைவித்த காய்கறிகளை ஃ வர்கள் நேரடியாக நியாயவிலையில் விற்பதைப் போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான மையங்களை அமைத்துத் தர இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய விற்பனை மையங்களை எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தவும்,**

கிராமப்புறப் பொருட்களுக்கு "பூமாலை" என்னும் வணிகச்சின்னம் உருவாக்கி, அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் ரூ.14.60 கோடி வரும் நிதியாண்டில் செலவிடப்படும்.

11. அண்மையில் மத்திய அரசு பூகோள குறியீடுகள் (Geographic Indications) சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு வட்டாரமும் ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு தனிச் சிறப்பு மிகுந்த உற்பத்தி இடமாக விளங்குகிறது. உதாரணமாக காஞ்சிபுரம் பட்டு, மதுரை சுங்கடிச் சேலை, சுவாமிமலை வெண்கலச் சிலை, நாச்சியார்கோவில் விளக்கு, தஞ்சாவூர் தட்டு, பவானி ஜமக்காளம், பத்தமடை பாய் போன்றவை உலகப் புகழ் பெற்றவை. இந்தப் பெயரில் இவற்றை இந்தியாவில் மட்டுமல்ல; உலகிலேயே வேறு யாரும் தயாரிக்கக் கூடாது என்று உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organisation) வற்புறுத்துகிறது. இப்போது மின்னணு மூலமாக வணிகம் (e–Commerce) வந்து விட்ட காரணத்தால் இவைகளுக்கு உலக மார்க்கெட் கிடைக்க முயற்சி மேற்கொள்வதோடு, அதற்கு, தர நிர்ணயம் கொண்ட வணிகச் சின்னம் (brand name) உருவாக்கிட வழி வகை காணப்படும்.

12. கடந்த மூன்று ஆண்டுகளில் 634 கிராம ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.518 கோடி மதிப்பில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிராமப்புற வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளோம். வரும் நிதியாண்டில் 210 கிராமங்களில் இதனை ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்திட ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

13. நமக்கு நாமே திட்டம் மக்களிடையே பெற்றுள்ள நல்ல வரவேற்பின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் ரூ.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.. இத்திட்டத்தில் பொதுமக்களுடைய பங்கேற்பு அதிகரிக்கும்போது, அதற்கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

14. பல்வேறு கிராமங்களில் பிறந்தோர், தமிழ்நாட்டிலும், இந்தியாவில் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் (Non-resident

**Indian) சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சொந்த ஊரின் மீது தனிப் பற்று உண்டு. எனவே அவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள் அமைக்க நிதி உதவி அளித்தால் அவர்கள் பெயரோ அல்லது அவர்களது பெற்றோர், உறவினர் பெயரோ சூட்டப்படும்.**

15. ஆதிதிராவிட மக்களுக்காகவும் மற்றும் ஏழை எளிய மக்களுக்காகவும் இந்த அரசு தொடங்கிய இலவச கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ், சென்ற நான்கு ஆண்டுகளில் 2 இலட்சத்து 84 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் மேலும் 31,000 வீடுகள் ரூ.99 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

**16. கல்வி, தகவல், பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு துப்புரவு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை மாவட்ட அளவில் ஓர் இயக்கமாக நடத்திடத் திட்டமிட்டு இந்த நிதியாண்டில் 4 மாவட்டங்களிலும், வரும் நிதியாண்டில் மேலும் 4 மாவட்டங்களிலும் “ஊரகத் தூய்மை இயக்கம்”**



**(Rural Sanitation Campaign) என்ற பெயரில் ரூ.12 கோடி செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.**

## *நிர்வாக சீரமைப்பு*

**17. பள்ளி மாணவர்களுக்குத் தேவையான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ்களை பள்ளிகளிலேயே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியரிடமிருந்து 15 இலட்சத்து 65 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவையனைத்தும் நடப்புக் கல்வி ஆண்டு முடிவதற்குள் பள்ளிகளிலேயே வழங்கப்பட்டுவிடும்.**

18. அரசின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி அமைவதற்கேற்ற வகையில், பொது நலனையொட்டிய முக்கியக் கொள்கைக் குறிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள், மக்கள் சாசன அறிக்கைகள், புள்ளி விபரங்கள் போன்றவை இணையத்தில் www.tn.gov.in என்ற முகவரியிட்ட தகவல் தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அரசு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்த இணையத்தின் தகவல் தளத்தில் அவ்வப்போது இடம் பெற்றிட வகை செய்யப்பட்டுவிட்டது.

19. பத்திரப் பதிவுத் துறையில் பொதுமக்களுக்குப் பயனுள்ள பல வசதிகள் விரைவில் கிடைத்திடும் வகையில் இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் இந்த வசதி மற்ற பதிவு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் வில்லங்கச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ் போன்றவற்றை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும்.**

20. வட்டாட்சியர் அலுவலகங்களில் ‘அ’ பதிவேடு மற்றும் சிட்டா போன்ற நில சம்பந்தமான ஆவண நகல்கள் வழங்குதல், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள்

வழங்குதல், முதியோர் உதவித் தொகை அனுப்புதல் போன்ற அனைத்து நிர்வாகப் பணிகளையும் கணினிமயமாக்க திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. **இவற்றை ஆய்வு செய்து மாநிலம் முழுவதும் இத்திட்டத்தை விரிவாக்க, பொருத்தமான மென்பொருள்கள் தேர்ந்தெடுப்பதற்கு, டாக்டர் திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையைப் பெற்று, வரும் நிதி ஆண்டில் மாநிலத்தின் ஏனைய வட்டாட்சியர் அலுவலகங்களும் முழுமையாக கணினிமயமாக்கப்படும்.**

21. அனைத்து மாவட்ட வளர்ச்சி முகமைகளும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்பட்டு, திட்டப் பணிகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மற்ற மாவட்டங்களில் 52 ஒன்றியங்களில் கணினி மயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து ஒன்றியங்களும் அடுத்த இரண்டாண்டுகளில் கணினி மயமாக்கப்படும்.

**22. நில அளவையில் அண்மைக் கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திட விண்கோள் குறிப்பைக் கொண்டு அளவீடு செய்யும் விண்கோள் நில அளவை (Global Positioning System) முறையை வரும் நிதி ஆண்டில் ஒரு வட்டத்தில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**23. திருவாரூர், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், நாகப்பட்டிணம், தேனி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் கட்டும் பணி வரும் செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.**

**24. வெள்ளை அறிக்கை: மாநில அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இட ஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன்மீது அரசு எடுத்து வருகின்ற**



நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்.

25. வரும் நிதியாண்டில் 6000 பள்ளி ஆசிரியர்களும், காவலர்கள் உள்ளிட்ட சுமார் 4000 சீருடைப் பணியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

## *ஊரகக் குடிநீர் திட்டம்*

26. 2050ஆம் ஆண்டில் உலகெங்கிலும் 200 கோடிக்கும் மேற்பட்டோர் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிப்பிற்கு ஆளாவார்கள் என்று ஐ.நா. சபையின் சுற்றுச்சூழல் திட்டம் (United Nations Environment Programme) கூறுகிறது. நெதர்லாந்து நாட்டில் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தண்ணீர் மன்றமும் அதையொட்டிய மாநாடும் (Second World Water Forum and Ministerial Conference) 2050ஆம் ஆண்டில், இந்தியாவில் ஆறு மாநிலங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு உள்ளாகும் என்றும், அதில் ஒன்று தமிழ்நாடு என்றும் குறிப்பிட்டிருக்கிறது.. மழை கொட்டும்போது

அதில் பத்து சதவிகிதத்தைக் கூட சேமித்து வைக்க முடியாத நிலையும், ஒருநாள் பெய்யும் பெருமழை கடலில் கலப்பதைச் சேமித்து வைத்தால் சென்னை நகரின் ஓராண்டுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்கிற நிலையும் மாநிலமெங்கும் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறையும் நிலையும் நாம் அறிந்தவையே. எனவே, **வருமுன் காப்பதைக் கடமையாகக் கொண்ட தமிழக அரசு இன்னும் ஐம்பது ஆண்டுகளில் ஏற்படவிருக்கும் நெருக்கடியை எதிர் கொள்ளவும், வெற்றி பெறவும் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழுவை அமைத்து, மாநில முழுவதும் மழை நீரை வீணாக்காமல் சேமித்து உபயோகப்படுத்தவும், நிலத்தடி நீரைப் பாதுகாத்து அதிகரிக்கவும் எடுக்கப்பட வேண்டிய முயற்சிகளைப் பற்றி அறிக்கையினைப் பெற்று அதனைச் செயற்படுத்த முன் வரும்.**

27. மாநிலத்தில் ஊரகக் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக நடப்பு நிதியாண்டின் ஒதுக்கீடான ரூ.450 கோடி என்பது, வரும் நிதியாண்டில் ரூ.500 கோடியாக உயர்த்தப்படுகிறது..

28. ஊரகப் பகுதிகளில் அனைவருக்கும் முதற் கட்டமாக, நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு கொள்கை வகுத்தது. 1996 ஆம் ஆண்டு ஏறக்குறைய 32,000 குடியிருப்புகள் அந்த நிலையை எய்தாமல் இருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.960 கோடி செலவில் பெருமளவில் ஊரகக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றியதால், இதுவரை 21,000 குடியிருப்புகளுக்குப் போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் எஞ்சிய குடியிருப்புகளிலும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

## *நகர்ப்புற குடிநீர்த் திட்டம்*

**29. பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 12 நகராட்சிகளும், 25 பேரூராட்சிகளும் பயன்பெறும் வகையில், ரூ.50 கோடி மானிய உதவியுடன் புதிய குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோன்று, போதிய நிதியாதாரம்**

இல்லாத, குறைவாகக் குடிநீர் வசதி பெறுகின்ற 76 நகரங்கள் வரும் ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான மதிப்பீட்டுத் தொகையில், அரசு வழங்கும் மானியத் தொகையின் அளவு ரூ. 80 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

30. அவினாசி அத்திக்கடவு குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு அறிக்கை அடுத்த மாத இறுதியில் பெறப்பட உள்ளது. பெற்றவுடன் அதைப் பரிசீலித்து உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## *நகர்ப்புற வளர்ச்சி*

31. இந்தியாவிலேயே அதிகமான நகர்ப்புறத்தைக் கொண்ட மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு ஆகும். ஆனால் அவற்றில் போதுமான கழிவுநீர் அகற்றும் வசதி இல்லாத அவல நிலை சுகாதாரக் கேட்டிற்குக் காரணமாக விளங்குவது இந்த 21ஆம் நூற்றாண்டில் இருக்கக் கூடாத, தவிர்க்கக் கூடிய நிலையாகும். சென்னையை ஒட்டிய ஆலந்தூர் நகரில் 'நமக்கு நாமே' திட்டத்தின் அடிப்படையைப் பின்பற்றி ஒவ்வொரு வீட்டாரும் தங்களுக்குரிய பங்குத் தொகையை செலுத்தி தனியார் முதலீட்டோடு இணைந்து நகருக்கே பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்து, மிக வேகமாகப் பணிகள் நடைபெறுகின்றன. நமக்கு நாமே அடிப்படையில் அரசு தருவது ரூபாய் மூன்று கோடி, மக்கள் முன் வந்து தருவது ரூ.6 கோடி, தனியார் முதலீடு ரூ.8 கோடி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் ரூ.16 கோடி. இதில் 11,714 வீட்டார் வீட்டிற்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் கொடுத்துள்ளனர். இந்த "ஆலந்தூர் மாடல்" நமக்கு நாமே அடிப்படையில் நிறைவேற்றிட எத்தனை நகராட்சிகள், பேரூராட்சிகள் முன் வந்தாலும் அங்கெல்லாம் பாதாளச் சாக்கடை வசதி செய்து தர தமிழக அரசு முன் வரும்.

32. வடசென்னையில் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலையில் கடலரிப்பைத் தடுப்பதற்காக பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் பிப்ரவரி மாதம் ஒரு குழு நெதர்லாந்துக்குச் சென்று அங்குள்ள நிபுணர்களுடன் கலந்தாலோசித்தது. நீண்ட காலமாக

**இருந்துவரும் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணும் பொருட்டு நெதர்லாந்து அரசு உதவியுடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு செயலாக்கப்படும்.**

## *பொது விநியோகம்*

**33.** மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் மாநிலங்களுக்கு அளிக்கும் அரிசி விலை உயர்த்தப்பட்டிருப்பது கவலைக்குரியதாக உள்ளது. இந்த விலை உயர்வினை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**34.** நியாய விலைக் கடைகளில் பொருள்களை வாங்குவோரில் மகளிரே அதிகமாக உள்ளதாலும், மகளிரே நடத்தும் கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும் மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்கு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. மாநிலத்தில் தற்போது **210** நியாய விலைக் கடைகள் மகளிரால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இதனை அதிகரிக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**35.** தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள விலைக் கண்காணிப்புக் குழு



இன்றியமையாப் பொருட்களின் விலைகளை வாரந்தோறும் கண்காணித்து வருகிறது. தமிழகத்தில் உணவு தானியங்கள், சமையல் எண்ணெய், பயறு வகைகள், காய்கறிகள் ஆகியவற்றின் விலைகள் கடந்த ஓராண்டில் பொதுவாக நிலையாக உள்ளன.

## *வேளாண்மை*

36. இந்த ஆண்டில் தமிழகத்தில் பெய்துள்ள மழையின் அளவு இயல்பான அளவை விடச் சிறிது குறைவாக இருந்த போதிலும், ஆறுகள், ஏரிகள், கால்வாய்களில் தூர்வாரும் பணி போன்ற நீர் மேலாண்மை (water management) நடவடிக்கைகளினாலும், நம் உழவர் பெருமக்களின் அயராத உழைப்பினாலும், நமது மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தி கடந்த ஆண்டில் 94 இலட்சம் டன் என்ற நிலையிலிருந்து இந்த ஆண்டு 103 இலட்சம் டன் என்ற அளவுக்கு அதிகரிக்கக் கூடும்.

37. தரிசு நில மேம்பாடு, அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. முதலமைச்சர் தலைமையில் தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் (Wasteland Development Authority) ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டில் ரூ.5.56 கோடி செலவில், பத்து மாவட்டங்களில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்களில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முதன் முறையாக முந்திரி, வேம்பு, பழச்செடிகள் போன்றவை அங்கே பயிரிடப்பட்டுள்ளது. **வரும் ஆண்டில், மேலும் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில், ஏறத்தாழ 25 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.**

38. தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் இதுவரை மொத்தம் 32 உழவர் சந்தைகள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த 32 உழவர் சந்தைகளில் 23–3–2000 தேதி வரை ரூ.15 கோடி மதிப்பிற்கு 2 கோடி 46 இலட்சம் கிலோ காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. மீதமுள்ள 68 உழவர் சந்தைகள் வரும் நிதியாண்டிலேயே துவக்கப்படும்.

## *முந்திரி சாகுபடித் திட்டம்*

39. பலவகை தரிசு நிலங்களை பயன்படுத்தவும், மண் அரிப்பினை தடுக்கவும், கடல் ஓரங்களில் காற்றுத் தடை ஏற்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் முந்திரி விவசாயம் பெரிதும் உதவுகிறது. முந்திரி சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், முந்திரி சாகுபடிக்கு ஏற்ற அரசுக்குச் சொந்தமான தரிசு நிலப் பரப்பினைத் தேர்வு செய்து, அவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் முந்திரி சாகுபடி செய்ய முன்வருவோருக்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## *பாசனம்*

40. பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களை நவீனப்படுத்திடவும், கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பாசனத் திறன் அதிகரிப்புப்பணிகளை மேற்கொள்ளவும், அடவிநயினார், கொடுமுடியாறு, நம்பியாறு, வடக்கு பச்சையாறு, கிருதுமால் அணைக்கட்டு, மொரதானா திட்டம், ராஜாத் தோப்புகானாறு திட்டம், பொய்கையாறு திட்டம், சோத்துப்பாறை திட்டம் ஆகிய 9 பாசனத் திட்டங்களை விரைந்து முடிக்கவும் உலக வங்கி உதவியுடன் பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.763 கோடி மதிப்பீட்டில் 268 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ.218 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

41. பாசனப் பகுதிகளில் உள்ள கால்வாய்களில் தூர்வாருவதற்கு, இந்த ஆண்டில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வரும் நிதி ஆண்டிலும் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்தகைய பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

42. திருச்சிராப்பள்ளி நகரில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் மீண்டும் நிகழாமல் தடுக்கும் பொருட்டு வெள்ளத் தடுப்புத் திட்டம் ஒன்று சுமார் ரூ.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடமுருட்டி ஆறு



**காவிரியுடன் கலக்குமிடத்தில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு, குடமுருட்டி, அரியாறு மற்றும் கோரையாறு, கொடிங்கால் வடிகால் ஆகியவை அகலப்படுத்தப்படும். உய்யக் கொண்டான் வாய்க்காலின் கரைகள் பலப்படுத்தப்படும்.**

## *விவசாயிகளின் நலன்*

**43.**தமிழக வரலாற்றில் முதன்முறையாக நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்முன் மாநிலத்திலுள்ள விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய கருத்தினை பெற்று, பரிசீலித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:

- **புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்கவும், அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் முதலமைச்சரை தலைவராகவும் வேளாண்மைத்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும்.**

- **காய்கறிகள், பழங்கள் போன்ற பொருட்களை வீணாகாமல்**

பாதுகாப்பதற்கு தேவையான இடங்களில் வேளாண்மை விற்பனைக் குழுக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் மூலமாக குளிர்பதனக் கூடங்கள் அமைக்கப்படும்.

- கிராமங்களில் சிமெண்டாலான களங்கள் போன்ற வேளாண்மைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உள்ளடக்கிய நமக்கு நாமே திட்டத்திற்கான ஒதுக்கீடு, ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, வரும் நிதி ஆண்டில் ரூ.30 கோடியாக அதிகரிக்கப்படும்.

- மாவட்டங்களில் வேளாண்மை விற்பனை குழுக்களின் மூலம் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வரும் விவசாயிகளுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

- பாசன நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் உருவாக்கப்பட்டு பாசனத்தை இயக்கவும், பராமரிக்கவுமான பொறுப்பு, இக்குழுக்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களோடு அளிக்கப்படும். இதற்காக சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட முன் வடிவு இக்கூட்டத் தொடரில் சட்டமாக்கப்படும்.

- கிராமப்புறங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலாளர்கள் ஒரே இடத்தில் பல ஆண்டுகளாக தொடர்ந்து இருப்பதைத் தவிர்க்க, ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு மாற்றல் செய்யும் முறையை ஏற்று அமுல்படுத்தப்படும்.

- நபார்டு நிறுவனத்தின் நிதி உதவியைக்கொண்டு 23 மாவட்டங்களில் 44 சிறு பாசன ஏரிகள் ரூ.19 கோடி செலவில் சீர்படுத்தப்படும். வரும் நிதியாண்டில் மேலும் அதிக நிதியுதவி பெறப்பட்டு பாசன ஏரிகள் சீர்படுத்தப்படும்.

- நில உரிமைப் பதிவேடு (Patta Pass Book) திட்டம் தற்போது வேலூர் மாவட்டத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கோயம்பத்தூர்,

மதுரை, தேனி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நில உரிமைப் பதிவேடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. இவற்றில் தற்போதைய நிலையை பிரதிபலிக்கும் வகையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு, நில உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின் கீழ் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு வரும் சூன் மாதத்திற்குள் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும். இதர மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வரும் நிதி ஆண்டு இறுதிக்குள் நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்படும்.

- 30.6.99–க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30.6.2000–க்குள் வட்டியுடன் கடனை செலுத்தும் சிறிய, பெரிய, அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

- மேலும், திருப்பிச் செலுத்தப்படும் நடப்பு கடன் தொகை வட்டியில் கடந்த ஆண்டு 6.25 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கெனவே முழு கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இத்திட்டத்தால் சுமார் 10 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

- விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) ரத்து செய்யப்படும்.

- பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டப் பகுதிகளில் மடை விட்டு மடை மூலம் ஒவ்வொரு பாசனப் பருவத்திலும் தண்ணீர் விடப்பட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையைப் பரிசீலிக்க திரு.மோகனகிருட்டிணன் தலைமையில் நியமிக்கப்பட்ட உயர்மட்டக்குழு அக்கோரிக்கையை ஏற்கலாமென்று பரிந்துரைத்துள்ளது. இதனை ஏற்று

**பரிட்சார்த்தமாக இத்தகைய பாசன முறை, வரும் ஆகஸ்டு மாதம் 1 ஆம் நாள் முதல் துவங்க இருக்கும் பாசனப் பருவத்திலிருந்து செயல்படுத்தப்படும்.**

**தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளின் பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேசப்படும்.**

விவசாயிகள் அளித்த மற்ற ஆலோசனைகளையும் கோரிக்கைகளையும் பரிசீலித்து உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## *மீனவர் நலன்*

44. சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், இதுவரை 16000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அவற்றுள் 11500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4500 வீடுகள் கட்டும் பணி விரைவில் முடிவடையும். வரும் நிதியாண்டில் மேலும் 4000 வீடுகள் ரூ.14.80 கோடி செலவில் கட்டப்படும். ஆக, 1996 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட வண்ணம், மீனவர்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் 20000 வீடுகள் கட்டும் திட்டம் வரும் நிதியாண்டில் நிறைவுறும்.



**45. மீனவர்கள், மீன்களை விற்பதற்குப் படும் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், 'மீனவர் அங்காடி' தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும். நவீனவசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும். மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டுமொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக் கூடமும் (Auction hall) உலர்களமும் (Drying yard) அமைத்துத் தரப்படும்.**

46. தமிழ்நாட்டில் 245 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் 56,169 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர். வரும் நிதியாண்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு 1000 வீடுகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கட்டப்படும்.

## *கால்நடைப் பாதுகாப்பு*

47. கால்நடைகளின் பாதுகாப்பு, இன விருத்தி ஆகியவற்றை அதிகரிக்கும் வகையில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தொடங்கப்பட்ட இரண்டு மாதங்களில் 22–3–2000 வரை 600 முகாம்கள் நடத்தப்பட்டு 20 இலட்சத்து 88 ஆயிரம் கால்நடைகள் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மாதம் ஒரு முகாம் என்ற வீதத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 4620 முகாம்கள் நடத்தப்படுவதற்கு மருந்துகள் போன்ற செலவினத்துக்காக மட்டும் ரூபாய் 2.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## *சுற்றுப்புறச் சூழலும் வனவளமும்*

48. தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம் 1997–98 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டு இறுதிவரை சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலங்களில் வனவளர்ப்புப் பணிகள் ரூபாய் 211 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில்

200 கிராமங்களில் ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ரூ.109 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

49. சென்னை உள்ளிட்ட ஆறு மாநகராட்சிகளிலும், அவற்றையொட்டியுள்ள பகுதிகளிலும், ஈரோடு, குமாரபாளையம், பவானி, பள்ளிப்பாளையம் ஆகிய நகரங்களிலும் காற்று, நீர், ஒலி ஆகியவற்றால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்தி அப்பகுதிகளுக்கு அழகூட்டிடவும், இந்த நகரங்களில் முக்கிய சாலைகளின் இருமருங்கிலும், பிற இடங்களிலும் சிறப்பு வகை மரங்களை நட்டு பராமரித்திடும் வகையில் "மரம் வளர்த்து மாசினைக் குறைக்கும் சுற்றுச் சூழல் மேம்பாடு திட்டம்" மத்திய அரசின் உதவியுடன் ரூபாய் 4 கோடியே 56 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## *சாலைகள்*

50. ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதியில்லாமல் இருந்த 301 கிராமங்களுக்கு நடப்பாண்டில் இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு இப்பணி முடிக்கப்பட்டு, தமிழகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை நாம் எய்தியுள்ளோம். அடுத்த கட்டமாக, 500 முதல் 1000 வரையிலான மக்கள் தொகை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத 340 கிராமங்களுக்கு நடப்பாண்டில், சுமார் ரூ.123 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில், மேலும் 140 கிராமங்களுக்கு சுமார் ரூ.90 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்.

51. சாலை மேம்பாட்டுக்காக தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (Rural Infrastructure Development Fund) மூலமாக இதுவரை ரூ.701 கோடி மதிப்பீட்டில் 2865 சாலைப் பணிகள்




எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 2062 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மேலும் 803 பணிகள் முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் ரூ.231 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இதர மாவட்டச் சாலைகள் என்ற வகையைச் சேர்ந்த 4290 கிலோமீட்டர் முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.159 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகத் தொடரும் வகையில், வரும் நிதியாண்டில் 8235 கிலோமீட்டர் இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

## *போக்குவரத்து*

52. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களால் 8,500 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பேருந்து பயணக் கட்டண வீதங்கள் மாற்றியமைக்கப்பட்ட போதிலும், அவை உயர்ந்து வரும் நடைமுறைச் செலவுகளை ஈடுகட்டப் போதுமானதாக இல்லை. எனினும் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது கட்டண வீதங்கள் நாட்டிலேயே மிகக் குறைந்தவையாகவே அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

53. கிராமப் புறங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த அரசால் தொடங்கப்பட்ட மினி பஸ் திட்டத்தின் கீழ் தற்போது 714 மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த எண்ணிக்கை வரும் ஆண்டில் மேலும் உயரும்.

## *மின்சக்தி*

54. வரும் நிதியாண்டில் தமிழ்நாடு மின்வாரியத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1034 கோடியாக இருக்கும்.

55. தமிழகத்தில் மொத்த மின் உற்பத்தித் திறன் 1996 ஆம் ஆண்டு 6908 மெகாவாட் என்பதற்கு மாறாக தற்போதைய மின் உற்பத்தித் திறன் 7120 மெகாவாட் அளவிற்கு உயர்ந்துள்ளது. 686 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று தனியார் மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. 1156 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மேலும் இரண்டு தனியார் மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கும். தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 30 மெகாவாட் திறன் கொண்ட பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் நிலையம் இந்த மாதம் 20ம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 107 மெகாவாட் திறன் கொண்ட கோவில்களப்பால் மின்திட்டம் வரும் நிதி ஆண்டில் மின் உற்பத்தித் தொடங்கும். வரும் நிதியாண்டில் மின் உற்பத்தி மேலும் 696 மெகாவாட் அளவுக்கு அதிகரிக்கும். மின் இழப்பினை மேலும் குறைத்திட, வரும் நிதி ஆண்டில் ரூ.620 கோடியை மின்வாரியம் ஒதுக்கீடு செய்துள்ளது.

## *தொழில் வளர்ச்சி*

56. இந்த அரசு பின்பற்றி வரும் தொழில் நேயமிக்க கொள்கை இம்மாநிலத்தில் தொடர்ந்த தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிகின்றது. பல பெரும் தொழிற்சாலைகள் ஒன்றன்பின் ஒன்றாக உற்பத்தியைத் தொடங்கி வருகின்றன. ஹுண்டாய், மிட்சுபிஷி நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்ட நிலையில், நடப்பு நிதியாண்டில் ஃபோர்டு இந்தியா நிறுவனமும் அதைச் சார்ந்த ஆட்டோ

துணைப்பாகங்களை தயாரிக்கும் பல தொழிற்சாலைகளும் இயங்கத் தொடங்கியுள்ளன.

57. சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையத்தை ஏற்படுத்துவதற்கான முதல்நிலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை அமைப்பதற்கான வழிவகைகளை ஆய்வு செய்திட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (TIDCO) மூலம் ஆலோசகர் நியமிக்கப்பட்டு, அந்த ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளது. இவ்விமான நிலையம் ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒப்புதலைப் பெற மத்திய அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம்.

**58. நாங்குனேரி உயர்தொழில் நுட்ப தொழிற்பூங்காவுக்காக (High-Tech Industrial Park) சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. விரிவான சாத்தியக் கூறு அறிக்கை (Detailed Feasibility Report) ஒன்றினை இரு பிரபல நிறுவனங்கள் தந்திருக்கின்றன. அங்கு ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் (Export Promotion Zone) உருவாக்கிட மத்திய அரசிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கக் கூடிய இந்த மாபெரும் திட்டப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.**

**59. கடலூரில் தொழிற்பூங்கா : கடலூர் அருகே சுமார் 950 ஏக்கர் பரப்பளவில் இந்த ஆண்டு தொழிற் பூங்கா (Industrial Park) உருவாக்கும் பணி துவங்கப்படும்.**

**60. ஆடை தயாரிக்கும் பூங்கா : (Garment Park) : சென்னைக்கு அருகே 200 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி வளர்ச்சி மையம் ஒன்று ஆடை தயாரிப்பதற்கென்றே உருவாக்கப்படும். இத்தகைய தொழிற்கூடங்கள் பல நூறு பேருக்கு, குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்.**

**61. மலர்ப் பூங்கா : (Floriculture Park) : ஒசூரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நவீன மலர்ப் பூங்கா 200 ஏக்கர் பரப்பளவில் துவங்கப்படும். இதில் 125 ஏக்கர் பரப்பளவில் ரோஜாச்**

செடிகள் பயிரிடப்பட்டு, கிளிப்பிங்ஸ் செய்யப்பட்டு, அம்மலர்கள் தொடர்ந்து குளிர்சாதனப் பெட்டிகளில் பாதுகாக்கப்பட்டு பெங்களூர் மற்றும் சென்னை விமான நிலையங்களிலிருந்து ஐரோப்பா, கிழக்காசிய நாடுகள், ஜப்பான், ஆஸ்திரேலியா, அரேபியா நாடுகள் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். அந்தக் குளிர் சாதன வசதியைப் பயன்படுத்தி, மலர் பருவ காலங்களைத் தவிர்த்த நேரங்களில், அப்பகுதியில் விளையும் சேலத்து மாம்பழம் உள்ளிட்ட 6,500 டன் பழங்கள், காய்கறிகள் தூரக் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இவை அனைத்தும் கூட்டுத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. உலக வங்கி அமைப்பின் பன்னாட்டு நிதி நிறுவனம் (International Finance Corporation) தரும் இரண்டரை கோடி ரூபாய் ஈவுத் தொகையுடன் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படத் தொடங்கும்.

62. தகவல் தொழில் நுட்பத்துறையில் (Information Technology) அதிக முதலீடு செய்ய வேண்டிய அவசியத்தை மத்திய அரசுக்கு நாம் வலியுறுத்தியதின் தொடர்பாக நடப்பாண்டில் தொலைத் தொடர்புத் துறையில் ரூ.1377 கோடியாக இருந்த மத்திய அரசின் முதலீடு வரும் ஆண்டில் ரூ.2079 கோடியாக உயருகிறது.



63. தமிழகத்தின் நீண்ட நாளையத் தேவையான, நமது வாணிப மற்றும் தொழில் வளர்ச்சி முயற்சிகளுக்கு உதவுகின்ற அனைத்து வசதிகளுடன் கூடிய, கண்காட்சி–மாநாட்டு மையம் ஒன்றை உருவாக்கிட வேண்டி தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (TIDCO) மத்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்புடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. இம்மையத்தின் முதல் கட்டம் இவ்வாண்டு அக்டோபர் மாதத்துக்குள் தயாராகிவிடும்.

**64. சென்னைக்கு அருகே எண்ணூரில் சுமார் ரூ.6000 கோடி செலவில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பெரியதோர் ஜப்பானிய கம்பெனியான மிட்சூயி (Mitsui) உடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.**

## *உயிரியல் தொழில்நுட்பம்*

**65. உயிரியல் தொழில்நுட்பம் (Bio-technology) அதிக வேலை வாய்ப்பை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய தொழில் நுட்பமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னைக்கு அருகே கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகின்றது. இது அடுத்த சில மாதங்களில் செயல்படத் துவங்கும். வளர்ந்து வரும் இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. டாக்டர் திரு. எம்.எஸ்.சுவாமிநாதனைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து தனது பரிந்துரைகளை அளிக்கும். அப்பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை (biotechnology policy) ஒன்று உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும். நாட்டிலேயே இத்தகைய கொள்கையை உருவாக்கிச் செயல்படுத்தும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கும்.**

**66.** தமிழகம் உயிரியல் வளம் செறிந்த மாநிலமாகும். தமிழகத்தில் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பாகுபடுத்தப்பட்டுள்ள நிலங்களில் பல்வகைப்பட்ட தாவர வகைகளும், உயிர்வாழ் இனங்களும் நிறைந்துள்ளன. இந்த உயிரியல் வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்திட வேண்டி உயிரியல் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதற்கு அரசு உயர் முக்கியத்துவம் அளிக்கும். இவ்வகையில் மன்னார் வளைகுடா, பிச்சாவரம், முத்துப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள உயிரியல் வளத்தைப் பேணி மேம்படுத்திட உரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே மன்னார் வளைகுடாப் பகுதியைப் பாதுகாக்க உலக சுற்றுச்சூழல் நிதி நிறுவனம் (Global Environmental Fund) 7.8 மில்லியன் டாலர் நிதியுதவி அளிக்க முன் வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

67. நவீன தொழில்நுட்ப விஞ்ஞானத்தைக் கொண்டு, தொழில்துறையிலும், விவசாயத்திலும், நிர்வாகத்திலும் ஒரு மாபெரும் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதில் தமிழக அரசு முன்னணியில் இருக்கிறது. அதில் ஒரு கட்டமாக வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு (Agricultural Extension Officers) உரிய பயிற்சி அளித்து விவசாயிகளுக்கு துணை புரியும் அறிவியல் அலுவலர்களாக (knowledge workers) மாற்றியமைப்போம். பயிற்சி பெற்ற வேளாண் விரிவாக்க அலுவலர்கள் 'துல்லியமான விவசாயத்திற்கு' (precision farming) பெரும் துணையாக இருப்பார்கள். உரிய நேரத்தில் உரிய அளவு இடுபொருள் (input) பயன்படுத்தி சாகுபடி செலவைக் குறைத்து வருமானத்தை அதிகமாகப் பெறுவதற்கு இது பெரிதும் பயன்படும்.

## *தகவல் தொழில்நுட்பம்*

**68.** பல ஆண்டுகளை வீணடித்து விட்டு; இந்தியத் தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் (Indian Information Technology Revolution) தாமதமாக நுழைந்திட்ட தமிழ் நாடு, கழக அரசு உருவான கடந்த நான்காண்டுகளில், ஹார்வர்டு பல்கலைக் கழக அறிக்கை குறிப்பிடுவது போல "குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை" (Remarkable Progress) அடைந்திருக்கின்றது. தமிழ்நாட்டிலிருந்து குறிப்பிட்டுச்




சொல்லும் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியே இல்லை என்கிற நிலையிலிருந்து 1998–99ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான மென் பொருட்களின் மதிப்பு ரூ. 1,246 கோடி என்பதும், இது 1997–98ஆம் ஆண்டு ஏற்றுமதி மதிப்பை விட 192 சதவிகிதம் அதிகம் என்பதும் நாம் பெருமைப்படும் சாதனையாகும். அது மட்டுமல்ல; இது நாம் உருவாக்கிய தகவல் துறைக் கொள்கைக்கும், அதைச் செயல்படுத்திய நடவடிக்கைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும். இந்தியாவிலேயே தகவல் தொழில் நுட்பத்திற்காக தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கென்று அரசில் தனித் துறையை உருவாக்கிய மாநிலமும் தமிழ்நாடு ஆகும். இதன் விளைவாக, இன்று தமிழ்நாட்டில் தான் இந்தியாவிலேயே மிகவும் அதிகமான மென்பொருள் வல்லுநர்கள் (Software Professionals) இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தான் அதிகமான மெயின் பிரேம் கணினித் திறன் (largest main frame computing capacity) இன்று இருக்கிறது. மல்டி மீடியா சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் (Multimedia software applications) அதிகமாகத் தயாரிக்கப்படும்

தலைநகராக தமிழகத்தின் தலை நகர் சென்னை உருவாகிக் கொண்டு வருகிறது. NASSCOM என்கிற அமைப்பு மென்பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவிலேயே சிறந்த இடம் சென்னை என்று தனது திட்டவட்டமான ஆராய்ச்சி முடிவினை அறிவித்திருப்பது நமக்கெல்லாம் பெருமையாகும். ஹார்வர்டு பல்கலைக்கழக ஆய்வு குறிப்பிடுவது போல, இந்தியாவிலேயே முதலாவதாக மட்டுமல்ல; மனித சமுதாயத்தில் பாதி பேர் வாழ்கின்ற தாயகமான ஆசியா கண்டத்தின் நுழைவு வாயிலாகத் தமிழ்நாடு ஏன் ஆகக் கூடாது? ("Why can't Tamil Nadu become a regional gateway to Asia, home to half the humanity?"). இந்தியாவிலேயே திறமைசாலிகளின் மிகப் பெரிய உறைவிடம் (large reservoir of talent) என்றும், அறிவு செறிந்தோரின் இருப்பிடம் (intellectual power house) என்றும் பெயர் பெற்ற நமது தமிழகம் மேலும் உயர்ந்து உலகப் புகழ் பெற்றிட நமது அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

69. "சின்கா தமது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டாலும்கூட தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறிநின்று சென்னையில் நிகழ்ந்துவரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரே நகரம் சென்னைதான்", என்று புகழ்பெற்ற கம்யூட்டர் வார இதழான "தி டி.க்யூ வீக்" தனது 6-3-2000 இதழில் பாராட்டியுள்ளது. (What Sinha has apparently missed out is one city where lot more software action is taking place quietly without Tamil Nadu Chief Minister M.Karunanidhi having to shout from the rooftops about this silent revolution going on in Chennai) (The D.Q.Week 6-3-2000).

70. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் இணைந்து ரூ.338 கோடி செலவில், 12 இலட்சம் சதுர அடி பரப்பில் சென்னை தரமணியில் உருவாக்கி வரும் டைடல் (TIDEL) மென்பொருள் தொழிற் பூங்கா முடிவடையும் தருவாயில் உள்ளது. இங்கு செயல்படவிருக்கும் தகவல் தொழில்நுட்ப

நிறுவனங்கள் உலக அளவில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான நவீன வசதிகளுடன் இந்த ஆண்டு மே மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயாராகி விடும். இந்தப் பூங்கா இந்தியாவிலேயே மிகவும் நூதன நவீன வசதிகள் கொண்ட (state-of-the-art) மென்பொருள் பூங்காவாக விளங்கும். உலக அளவில் புகழ்பெற்ற பல மென்பொருள் நிறுவனங்கள் இப்பூங்காவில் இடம் பெறும்.

71. தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழில்களின் தேவைக்காக உருவாக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு மென்பொருள் வளர்ச்சி நிதி" (Tamil Nadu Software Development Fund) ஏப்ரல் 1999–லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. தமிழகத்தில் மின்னணு மூலமாக வணிகம் வளர்ச்சியடைவதற்கு இந்நிதி பேருதவி புரியும்.

72. 'தமிழ்நெட் 99' என்ற சர்வதேச தமிழ் இணைய கருத்தரங்கு மாநாட்டின் பரிந்துரைகளின்படி, தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப்பலகை மற்றும் தமிழ் எழுத்து வடிவக் குறியீடுகளை அரசு அறிவித்துள்ளது. இத்தரங்களுக்கேற்பத் தயாரிக்கப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருளுக்குச் சான்று வழங்கும் முறைகளையும் அரசு அறிவித்துள்ளது.

**73 அயல்நாடுகளுடன் இணையம் மூலம் தொடர்பு கொண்டு, தகவல் தொழில்நுட்பவியல் மூலம் மருத்துவம் மற்றும் சட்ட சேவைகள், அலுவல் சேவைகள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ளும் முறை வேகமாகப் பரவி வருவதால், இது படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரித்திட வழிவகை செய்யும். கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி போன்ற நகரங்களில் இத்தகைய சேவை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்நகரங்களில் செயற்கைக் கோள் தரை நிலையங்கள் அல்லது இருப்பிட அமைப்புகளை அமைத்துத்தர இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (Software Technology Park of India) முன்வந்துள்ளது. இந்நிலையங்கள் வரும் நிதி ஆண்டில் செயல்படத் துவங்கும்.**

**74. இந்த அரசு 1998 ஆம் ஆண்டு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி அந்த நிறுவன**

ஆராய்ச்சியாளர்கள் அளித்துள்ள ஆய்வறிக்கையில், உலக அளவில் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னிலை பெறுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையிலும், தகவல் தொழில் நுட்பத் தொழில் நிறுவனங்கள் அளிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலும், தகவல் தொழில் நுட்பத்தில் தமிழ்நாடு உலக அளவில் முன்னிலை பெறுவதற்கான ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

75. தகவல் தொழில் நுட்பத் துறையில் புதிய நிறுவனங்களைத் தொடங்கிட வருபவர்களுக்கு உதவிட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) மற்ற நிதி நிறுவனங்களுடன் சேர்ந்து உருவாக்கிய ஊக்க மூலதன நிதி (Venture Capital Fund) வெற்றிகரமாக செயல்பட்டு ஐந்து தொழில் முனைவோருக்கு உதவி செய்துள்ளது. இதன் வெற்றியைக் கருத்தில் கொண்டு இந்த நிதியின் அளவை கணிசமாக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## *கல்வி*

76. இந்த நிதியாண்டில் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4426 கோடியிலிருந்து வரும் நிதியாண்டில் ரூ.4949 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.



77. கடந்த இரண்டாண்டுகளில் தமிழ்நாட்டில் 712 தொடக்கப் பள்ளிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நம்முடைய மாநிலத்தின் எந்தவொரு பகுதியிலும் தொடக்கப் பள்ளி இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை நாம் சாதித்துள்ளோம்.

78. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் தாய் மொழி அல்லது தமிழ் பயிற்று மொழியாக மாற்றுவதற்கு நீதியரசர் திரு. மோகன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்து உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

**79. வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்ப-வியல் துறையின் தேவைக்கு ஈடு கொடுக்கும் வகையில் மாணவர்கள் கணினி அறிவைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டில் முதன் முதலாக அரசு மேல் நிலைப் பள்ளிகளில் பெரிய அளவில் கணினிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து வசதிகளுடன் 666 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு துவங்கப்பட்ட இந்தத் திட்டம், வரும் ஆண்டில் எஞ்சியுள்ள அனைத்து அரசு மேல் நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.**

**80. வரும் நிதியாண்டில் அனைத்து அரசு கலை மற்றும் தொழிற்கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் கணினி அறிவைப் பெறுவதற்கு திட்டம் செயல்படுத்தப்படும்.**

**81. பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீதிமன்றங்களின் தீர்ப்பினால் பட்டயம் பெற இயலாத நிலையில் உள்ள இந்த மாணவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க, அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 30 விழுக்காடு இடங்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு வயது வரம்பு**

விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. எதிர் கட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பரிந்துரைத்திருப்பது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக அமையும் என்பதால் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் அறிவுரையின்படி மறு ஆய்வு மனு ஒன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தின் (National Council for Teachers Education) நெறிமுறைகளுக்கு உட்பட்டு, வரும் ஆண்டில் இந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 30 விழுக்காட்டினை அதிகரிக்கும் கருத்துருவையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

## *இளைஞர் நலன்*

82. இளைஞர்களை ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக்கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும் அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" எனும் சங்ககாலப் பாடலை நினைவுகூரும் வகையில் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்கென <u>தனித் துறையை நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.</u> இளைஞர்களிடையே அறிவியல் முனைப்பு, மத, சமூக நல்லிணக்கம், நல்லொழுக்கம் மற்றும் சமுதாய விழிப்புணர்வை மேம்படுத்தவும், அவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் திட்டங்கள் செயலாக்கப்படும்.

83. தற்பொழுது ஒரு சில பள்ளிகளில் மட்டும் தான் விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்கான வசதிகள் உள்ளன. நமது மக்கள் தொகையில் 35 சதவீதம் மாணவர்களல்லாத இளைய தலைமுறையினர், கிராமங்களிலும், பேரூராட்சிகளிலும் மேற்படி வசதிகளை பெற இயலாத நிலையில் உள்ளனர். இவர்களின் நேரம் மற்றும் சக்தியை ஒருமுகப்படுத்தவும், கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு, ஆரோக்கியத்துடனும், மத நல்லிணக்கத்துடனும், வாழ அனைத்து ஊராட்சிகளிலும், நகர்ப்புறங்களிலும் விளையாட்டு மையங்கள் உருவாக்கப்படும். விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க பள்ளிகளிலும், மாவட்ட அளவிலும், இறுதியில் மாநில அளவிலும்




விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெறும் வீரர்களுக்கு பரிசுகளும் சுழற்கோப்பைகளும் அளிக்கப்படுகிறது. இதில் தனியார் துறையினரின் பங்கேற்பும் வரவேற்கப்படுகிறது.

84. கடந்த ஆண்டு நிதிநிலை விவாதத்திற்கு பதில் அளிக்கையில், இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம் ஒன்று அமைப்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை அளிக்க திரு. வெங்கிட்டரமணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும் என்று கூறியிருந்தேன். அவ்வாறு அமைக்கப்பட்டு, அக்குழு இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிப்பதற்காக தற்போது செயல்பாட்டில் உள்ள நிதி திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து வருகிறது. அந்த அறிக்கையை விரைவில் பெற்று அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## *தமிழ் ஆட்சி மொழி – பண்பாடு*

85. தமிழ் சங்கப் பலகை குறள் பீடம் முதலமைச்சரை தலைவராகவும், திரு. தமிழண்ணல் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முதல் கட்டமாக ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

86. 1996 ஆம் ஆண்டு தமிழக அரசின் ஒப்புதலோடும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்துடனும் தொடங்கப்பட்டு, பரதநாட்டியத்தில் தமிழகத்திலேயே பட்டப்படிப்புக்கான முதல் நுண்கலைக் கல்லூரி என்ற பெருமையோடு, தனது கலைப் பணியை அருள்திரு எஸ்.எம். ஜார்ஜ் அவர்களை முதல்வராக கொண்டு தொடர்ந்து நடத்துகின்ற திருச்சிராப்பள்ளி "கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி" கலை நிகழ்ச்சிகளில் புதுமையைப் புகுத்தி, மனிதநேயம், மத நல்லிணக்கம், ஆகியவற்றைக் கருப் பொருளாக்கி வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் ஆயிரம் நிகழ்ச்சிகளுக்கு மேல் நடத்தியுள்ளது. இதன் பணிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் வகையில் கலைக் காவிரி நிறுவனத்தை அரசு உதவி பெறும் நிறுவனமாக (Aided Institution) இந்த அரசு ஏற்று அதற்குரிய மானியத்தை வழங்கிடும்.

87. உலகெங்கிலும், தமிழ்க் கல்வி பெற ஆர்வமுள்ள மாணாக்கர்களின் பயனுக்காக டாக்டர் திரு. வ.செ. குழந்தைசாமி அவர்களை நிர்வாகக் குழுவின் தலைவராகக் கொண்ட 'தமிழ் இணையப் பல்கலைக் கழகம்' (Tamil Virtual University) ஒன்றினை ஏற்படுத்தி அரசு அறிவிக்கை செய்துள்ளது. ஆங்கிலம் தவிர வேறெந்த மொழிகளிலும் இணையம் (Internet) மூலம் கல்வியளிக்கும் இத்தகைய பயிற்சி அமைப்பு உலகில் வேறெங்கிலுமில்லாத ஒரு முன்னோடித் திட்டமாகும்.

88. பண்டைத் தமிழ் இலக்கியங்களை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம், எளிய முறையில் உரையெழுதியவரும், சுயமரியாதை இயக்கத்தின் பெரும் எழுத்தாளருமான, சீர்திருத்தச் செம்மல் சாமி.சிதம்பரனார் அவர்களது நூற்றாண்டு விழாவும், பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி, பல்கலைக் கழகங்கள் போற்றும் ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்த தமிழறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களது நூற்றாண்டு விழாவும், இந்த ஆண்டில் வருவதையொட்டி, அவர்கள் எழுதிய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அதனடிப்படையில் தலா பத்து இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்படும்.

89. அதைப் போலவே திராவிட இயக்க கவிஞர் மறைந்த

**முடியரசன் அவர்களது நூல்களையும் நாட்டுடமையாக்கி அதனடிப்படையில் 10 இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்படும்.**

**90. மருதுபாண்டியர் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக அவர்கள் தூக்கிலிடப்பட்ட இருநூறாவது ஆண்டினை நினைவு கூர்ந்திடும் வகையில், நினைவுச் சின்னம் அமைத்து 24–10–2001 அன்று புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதற்கான வழிமுறைகளை வகுத்திட ஏற்பாடுகள் செய்யப்படும்.**

## *மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலன்*

**91.** மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வரும் நிதியாண்டில் ரூ.1263 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**92.** கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வாழ்வொளித் திட்டத்தினை இந்த அரசு அறிமுகம் செய்தபோது அறிவித்திருந்தவாறு, அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியரிடையே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை **59** இலட்சம் மாணவ மாணவியர்கட்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுள் **29** இலட்சம் பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.. மேலும் **66** ஆயிரம் மாணவ மாணவியர்கள் குறிப்பான நோய்களுக்கான சிறப்புச் சிகிச்சை பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

## *வருமுன்காப்போம்*

**93.** மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக மருத்துவர்கள் கிராமங்களை நாடிச் சென்று முகாம் இட்டு ஏழை எளியோர்க்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் செய்கிற வருமுன் காப்போம் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் **21–3–2000** தேதி வரை **1634** முகாம்களில் **17.4** இலட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர். இதில் சுமார் **88** விழுக்காடு பயனாளிகள் கூலி வேலை செய்யும் ஏழை எளியோர்கள் என்றும், இதில் **40** விழுக்காடு பயனாளிகள் பெண்கள் என்றும், **26** விழுக்காடு சிறார்கள் என்றும், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களே

இம்முகாம்களினால் பயனடைந்துள்ளனர் என்றும் இத்திட்டத்தினை ஆய்வு செய்ததில் தெரியவந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் பயன் பெறும் வகையில், தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## *வாழ்ந்து காட்டுவோம்*

94. பெண்களை சமூக பொருளாதாரத் துறைகளில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவதற்கு அவர்களை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, அவர்களுக்கேற்ற சுய வேலை வாய்ப்புப் பயிற்சியும், வசதிகளும் அளிக்கும் திட்டம் இந்த அரசால் 1989–90 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் மகளிர் அடைந்த பயன்களைக் கருத்தில் கொண்டு, 1997–98 ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தை செயல்படுத்தி இந்த சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்த முனைந்துள்ளோம். தமிழ்நாடு மகளிர் திட்டம் தமிழகத்தில் சென்னைப் பெருநகரம் நீங்கலாக ஏனைய 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 24000 சுய உதவி குழுக்களில் 4 இலட்சத்து 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்களாகச் சேர்ந்து, ரூபாய் 32 கோடிக்கும் அதிகமாக சேமித்துள்ளதோடு, இந்தக் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக ரூபாய் 97 கோடிக்கும் மேல் கடன்



உதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சேமிப்பு திட்டம், மகளிர் தம் அவசர அவசிய செலவுகளுக்காக தனியார் கடன் அளிப்பவர்களை நாடி அதிக வட்டியில் கடன் பெறும் இக்கட்டான நிலைமைக்கு ஆளாகாமல் பாதுகாக்கிறது.

95. ஏழை மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும், சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்துவதற்கும், மாநகராட்சிப் பகுதிகளில் சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு 1–1–1999லிருந்து "சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2–5–1999 லிருந்து நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 15–3–2000 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் 62,923 மகளிர் பயனீட்டாளர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் ரூ.6 கோடியே 21 இலட்சம் அளவிற்குக் கடன் வழங்கியுள்ளன. இதில் திருப்பிச் செலுத்தும் கடன் 95 விழுக்காடாக இருப்பது இத்திட்டத்தை ஊக்கப்படுத்துகிறது.

**96. இந்த மகளிர் திட்டங்களையும் மற்றும் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், விதவைகள் மறுமணத் திட்டம், கலப்பு மணத் திட்டம் என்றுள்ள மகளிர் திட்டங்களையும், அவை தனித் தனி துறைகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படினும் அனைத்தையும் ஒருங்கிணைத்து (Coordinate) முதலமைச்சர் செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயல்படுத்தப்படும். இந்த ஒருங்கிணைப்பு திட்டம் "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இயங்கும். இப்பெரும் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் மொத்த ஒதுக்கீடு ரூ.120 கோடியாக இருக்கும்.**

## *சத்துணவு*

97. டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் 75 இலட்சம் சிறார்கள் பயன் அடைந்து வருகின்றனர். சத்துணவு திட்டங்களுக்கு, வரும் நிதியாண்டில் ரூ.581 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**98. சத்துணவு திட்டத்தின் கீழ் கறிகாய், விறகு, உப்பு**

**ஆகியவற்றிற்கு வழங்கப்படும் மானியம் மாணவர் ஒருவருக்கு தினமொன்றுக்கு 18 பைசா என்றிருப்பதை இனி 23 பைசாவாக உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது. இதனால் அரசுக்கு வரும் நிதியாண்டில் ரூ.14 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.**

**99. மாநிலத்தில் 71,138 சத்துணவு மையங்கள் உள்ளன. இம்மையங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு வரும் நிதியாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இச்சத்துணவு மையங்கள் பழுதுபார்க்கப்பட்டு சீரமைக்கப்படும்.**

## *ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன்*

100. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்காக வரும் நிதியாண்டில் ரூ. 626 கோடி ஒதுக்கப்படுகிறது.

101. பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 64 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 86 சமத்துவபுரங்களும் வரும் நிதியாண்டுக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

102. ஆதிதிராவிடர் பழங்குடி மாணவ, மாணவியர்களுக்காக 43 புதிய மாணவரில்லங்கள் ரூ.14 கோடி செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பழங்குடி மாணவர்களுக்கென 5 பள்ளிகளும், 9 மாணவரில்லங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

103. பிளாஸ்டிக் தொழில் நுட்பவியல், தோல் தொழில் நுட்பவியல், ஆடை அலங்கார தொழில் நுட்பவியல் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு வேலையை நோக்கமாகக் கொண்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறப்பு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் தாங்களே சொந்தமாக தொழில் அல்லது வியாபாரத்தைத் தொடங்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இத் திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடியே 98 இலட்சம் மானியம் மற்றும் விளிம்புத்




தொகையுடன் 1344 பேருக்கு உதவி அளிக்கப்பட்டது.

**104. 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சுமார் ரூபாய் நான்கு கோடி செலவில் கட்டப்படும் டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபப் பணி விரைவில் முடிவுற்று, வரும் ஏப்ரல் திங்களில் திறக்கப்படும்.**

**105.** நமது மாநிலத்தில் சுமார் ஆறு இலட்சம் பழங்குடியினர் வாழ்கின்றனர். **இதுவரை அவர்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்ககம் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. பழங்குடியினர் நலனைக் காப்பதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருப்பதாலும், அவர்களின் நலத்திட்டங்களை முனைப்பாக செயல்படுத்த வேண்டியும், பழங்குடியினர் நலனுக்கென ஒரு தனி இயக்ககம் (Directorate) உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.**

## *பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்*

**106.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோரின் நலனுக்காக வரும் நிதியாண்டில்

ரூ.175 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

107. மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சேர்ந்த மாணவிகளை நடுநிலைப் பள்ளி வரை படிக்கச் செய்வதற்காக, 3ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த 60,000 மாணவிகளுக்கு ஓராண்டிற்கு தலா ரூ.500 ஊக்க உதவி நிதி வழங்கும் சிறப்புத் திட்டம் நடப்பாண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. **மேலும் ஆறாம் வகுப்பில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த 30,000 மாணவியருக்கு மாதமொன்றுக்கு தலா ரூ.100 வழங்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த பெண்களின் கல்வி நிலையில் மேலும் வரவேற்கத்தக்க பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.**

108. இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பயனுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

**109. உருது பேசும் மக்களின் நீண்ட நாளைய கனவை நனவாக்கும் வண்ணம் இந்த அரசு தமிழ்நாட்டில் உருது அகாடமி என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு கல்வி அமைச்சர் இதன் தலைவராகவும், டாக்டர் சையது சஃபியுல்லா துணைத் தலைவராகவும் இருப்பார்கள்.**

110. சிறுபான்மையினருக்கு பொருளாதார உதவி அளிப்பதில் சிறப்பான கவனம் செலுத்தும் பொருட்டு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் என்னும் தனி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகம், தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டுக்கழகத்திலிருந்து நிதியைப் பெற்று, நியாயமான வட்டி விகிதத்தில் சிறுபான்மையினருக்கு கடன் அளிக்கும்.

*சமூகப்பாதுகாப்பு*

111. இருபது ஆண்டுகாலமாக அரசு புறம்போக்கு நிலங்களில்

வீடு கட்டி அனுபவித்து வருபவர்களுக்கு, அரசுக்கு அந்த நிலம் தேவையில்லாத பட்சத்தில், அந்த இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்குரிய வழிமுறைகள் வகுக்கப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களது வேண்டுகோளுக்கிணங்க 20 ஆண்டு என்பது 10 ஆண்டாக குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு பிரச்சனைக்குரிய இடங்களில் தல ஆய்வு செய்தபின், மாவட்ட ஆட்சியராலேயே தகுதியின் அடிப்படையில் வீட்டு மனைப் பட்டா அளிக்கப்படும். ! இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

112. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஆதரவற்ற முதியோர், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு, வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 என்பது வரும் நிதி ஆண்டு முதல் ரூபாய் 200 ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்த ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை வரம்பற்றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

**113.** ஊனமுற்றோர் நலன்: கணினி பயிற்சியும், ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சியும் அளிப்பதன்மூலம், கை கால் ஊனமுற்றோர்க்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 பயிற்சி மையங்கள் அமைத்து 300 பேருக்கு ஓர் ஆண்டு கணினிப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும்; மேலும் 6 மையங்களில் ஆய்வுக்கூடப் பரிசோதனை, எக்ஸ்ரே பரிசோதனை, இ.சி.ஜி, ஈ.ஈ.ஜி. இதர நவீன பரிசோதனைகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் பயிற்சி 300 பேருக்கு அளிக்கப்படும்.

**114.** சமூக சீர்திருத்தம்: புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சமூக சீர்திருத்தத் துறை வாயிலாக மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை மீட்கவும், பகுத்தறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றில் மக்களை

**ஈடுபடுத்திடும் பிரச்சாரங்களை சின்னத்திரை மூலமாகவும், துண்டுப் படங்கள் மூலமாகவும், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.**

## *நெசவாளர் நலன்*

115. நெசவுத் துறையில் நிலவி வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை வழி சவால்களை சமாளிப்பதற்கும், உலகளவில் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும் தகுந்த திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. சர்வதேச அளவில் தரமான ஏற்றுமதியில் ஈடுபடும் பொருட்டு 200 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 10,000 தறிகளில் முயற்சிகள் மேற்கொண்டு, சுமார் ரூ.25 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெசவாளர் குடும்பங்களிலிருந்து மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் தேசிய நாகரீக வடிவமைப்பு தொழில் நுட்ப கல்வி நிலையத்தின் (National Institute of Fashion Technology) சான்றிதழைப் பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**116. 60 வயதை அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இந்த அரசு வழங்கத் தொடங்கிய**



காப்பீட்டுத் தொகை நடப்பு நிதியாண்டில் ரூ.35,000 லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, வரும் நிதி ஆண்டில் இந்தத் தொகை ரூ.50,000 ஆக உயர்த்தப்படுகிறது. 60 வயதை தாண்டிய நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.150 என்பது ரூ.200 ஆக உயர்த்தப்படுகிறது.

117. நெசவாளர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணிகளுக்கு மார்க்கெட் கிடைப்பதற்கான வழிவகை காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## *தொழிலாளர் நலன்*

118. இந்த அரசு, அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர்களின் நலனையும் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த நோக்கத்தை எய்துவதற்காக, நல வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த வாரியத்தின் தொடக்கச் செலவுகளுக்காக ரூ.40 இலட்சத்தை மானியமாக அனுமதித்துள்ளது. இந்த வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர்கள் விபத்து நிவாரணம், மகப்பேறு நலன், பணி ஓய்வுக்காலப் பயன்கள் போன்ற உதவிகளைப் பெறுவதற்கு வகை செய்யப்படும். இந்த அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர் நல வாரியத்தில் சேர்க்கப்பட்டுள்ள தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று, இந்த பிரிவினர்களுக்காக தனித்தனி நல வாரியங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

119. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து வருகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த கோலப்பன் குழுவின் பரிந்துரைக்கேற்ப விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஒன்று வரும் நிதியாண்டில் உருவாக்கப்பட்டு செயல்படும்.

120. மூடப்பட்டுள்ள தொழிற்சாலைப் பிரிவுகளில் பணிபுரிந்து

வந்த தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250/– உதவித் தொகை அளிப்பதற்கான திட்டம், 1999 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இதுவரையில், 6,166 தொழிலாளர்களுக்கு இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வருகிற விண்ணப்பங்களை ஆராய்ந்து மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும்.

## *பத்திரிக்கையாளர் நலன்*

**121. 1996–97 ஆம் ஆண்டு பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தப்பட்டது. பின், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அவர்களது ஓய்வூதியம் ரூ.1500 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்கள் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2000 ஆக உயர்த்தி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், பணிபுரியும்போது பத்திரிக்கையாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.40,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி இனி வழங்கப்படும்.**

## *வீட்டு வசதி*

122. மாநகராட்சிப் பகுதிகளில் ஆட்சேபணை இல்லாத இடங்களில் வாழ்கிற 50,000 குடும்பங்களுக்கு தரமான, தீ பற்றாத கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள் கட்டப்படும் என்று சென்ற ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். **அதன்படி ரூ.15 கோடி செலவில் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.** வரும் நிதி **ஆண்டிலும் இத்திட்டம்** தொடரப்பட்டு, **ரூ.39 கோடி** மதிப்பீட்டில், **26 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.**

**123. மாவட்டத் தலைமையிடங்களில் அரசு அலுவலர்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்காக, கரூர், நாகப்பட்டிணம், திருவாரூர், தேனி, திருவள்ளூர், நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை**




ஆகிய இடங்களில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக **2144** வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

**124.** புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைமை இடங்களிலும், வேகமாக வளர்ந்து வரும் திருப்பூர் போன்ற நகர்களிலும் ஏற்பட்டுவரும் குடியிருப்புப் பிரச்சினையைச் சமாளிக்க, இந்நகரங்களுக்கு அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டு புதிதாக சார்பு நகரங்கள் (Satellite Towns) உருவாக்கப்படும். இந்நகரங்களில் தேவையான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு, வரையறுக்கப்பட்ட வடிவமைப்பு மனைகள் பொது மக்களுக்கு விற்கப்படும். அவர்கள் இம்மனைகளிலே வீடு கட்டிக் கொள்ள ஹட்கோ போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற உதவி செய்யப்படும்.

## *இந்து சமய அறநிலைய நிருவாகம்*

**125.** இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான ஏராளமான நிலங்கள் கடந்த ஆண்டில் மீட்கப்பட்டுள்ளன. உதாரணமாக,

**திருத்துறைப்பூண்டியில் 621 ஏக்கர், பேரூரில் 250 ஏக்கர், ஆளவந்தார் அறக்கட்டளையில் ரூ.300 கோடி பெறுமான சொத்துக்கள், திருவட்டீசுவரன் கோயிலில் ரூ.100 கோடி பெறுமான சொத்துக்கள் என்று தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் மீட்கப்பட்டுள்ளது. 1–7–1999 முதல் வருவாய் நீதிமன்றங்கள் கோயில்களுக்குச் சாதகமாக 13,500 வழக்குகளை முடித்து, அதன்வாயிலாக பல இலட்சக்கணக்கான ரூபாய் கோயில்களுக்கு வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.**

## *தென்மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்*

126. தென்மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவராகவும், திரு ஆர்.ஏ.சீத்தாராமதாஸ் அவர்களை துணைத் தலைவராகவும், திரு ஏ.வெங்கட்டராமன் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு தனது இடைக்கால அறிக்கையை சென்ற மாதம் 28ம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையின் பரிந்துரைகளையொட்டி பின்வரும் திட்டங்கள் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

- இராமநாதபுரம், விருதுநகர், மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள்.
- **நபார்டு உதவியோடு குளங்கள் மற்றும் கண்மாய்கள் புனரமைப்புத் திட்டம்; ஒவ்வொரு கண்மாய்க்கும் பயன்படுத்துவோர் குழு அமைத்து அவற்றின் மூலம் கண்மாய்களைப் பராமரித்தல்.**
- **தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியை மேம்படுத்த சிறப்புத் திட்டம்.**
- **தென்மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் வசதிகளை உருவாக்கி அதன் மூலம் வேலைவாய்ப்பு வசதிகளை பெருக்குதல், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா**

(Software Technology Park of India) மூலமாக சர்வதேச இணைப்புகளை ஏற்படுத்துதல்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக இரப்பர் மற்றும் இரப்பர் மர அடிப்படையிலான பொருட்களை உற்பத்தி செய்ய ரூ.14 கோடி முதலீட்டில் இரப்பர் தொழிற்பூங்கா ஏற்படுத்துதல்.

- ஏற்கெனவே குறிப்பிட்டவாறு நாங்குநேரியில் 2000 ஏக்கர் பரப்பில் ஹை–டெக் தொழில்நுட்பப் பூங்கா.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகத்தினை மேம்பாடு செய்வது தொடர்பாக பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையை சுமார் ரூ.4.6 கோடி செலவில் மலேசிய அரசு தயாரித்து வருகிறது. இன்னும் சில மாதங்களில் ஆய்வு அறிக்கை பெற்றபின் குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

127. திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை மேம்படுத்தி தென்மாவட்டங்களில் உள்ள கால்நடைகளின் தரத்தினை உயர்த்த ஆவன செய்யப்படும். குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு ஆடுகள் வளர்ப்பு மையம் ஒன்றை ஏற்படுத்துதல், அதிகப் பயன் தரும் கோழியினங்களை கோழி வளர்ப்போர்க்கு அளிக்க மையம் ஒன்றை ஏற்படுத்துதல், நீல நாக்கு நோய் போன்ற கால்நடை நோய்களை சமாளிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் வட்டார ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த கால்நடைப் பண்ணையில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## *மதுரை மாநகரில் உயர்நீதிமன்றக் கிளை*

128. கடந்த பல ஆண்டுகளாக மதுரை மாநகரில் சென்னை

உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை அமைக்க நாம் எடுத்த முயற்சி கனிந்துள்ளது. தமிழக நீதி பரிபாலன வரலாற்றில் ஒரு மைல் கல்லாகத் திகழும் இதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு, புதிய நீதிமன்றக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா வரும் ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று நடைபெற உள்ளது. இதன் வாயிலாக தென்மாவட்ட மக்கள் நீதியைப் பெறுவது எளிமையாக்கப்படுகிறது.

## *அரசுப் பணியாளர், ஆசிரியர், ஓய்வூதியதாரர் நலன்*

**129.** அரசு அலுவலர், ஆசிரியர், ஓய்வூதியதாரர் ஆகியோரின் நலனைக் கருதி இந்த அரசு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கடும் நிதி இடர்ப்பாடு இருந்த போதிலும், அவர்களுக்கு கூடுதல் அகவிலைப்படி வழங்கியதால் ஏற்பட்ட ரூ.750 கோடி கூடுதல் செலவையும், பொங்கல் ஊதியக் கொடை வழங்கியதனால் ஏற்பட்ட ரூ.210 கோடி கூடுதல் செலவையும் ஏற்று அவர்களின் மனம் கோணாமல் பார்த்துக் கொள்கிறது.

**130.** அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட தற்போது ரூபாய் 4 இலட்சம் வரை முன்பணம் வழங்கப்படுகிறது. இத்தொகையை உயர்த்தி வழங்கவேண்டுமென்ற அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று வரும் நிதியாண்டிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்த



முன்பணத்தின் உச்சவரம்பு ரூபாய் 6 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியாக அதிகரிக்கப்படும்.

131. மாநில அரசின் ஒய்வூதியச் செலவு கடந்த ஆண்டு ரூபாய் 1691 கோடியிலிருந்து நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2517 கோடியாக உயர்ந்துள்ளது. ஒய்வூதியச் செலவினம் அரசு செலவினங்களில் மிக வேகமாக அதிகரித்து வருகின்ற ஓர் இனமாக இருக்கிறது. கடந்த ஆண்டு நான் அறிவித்தவாறு, ஓய்வூதியர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் மீதமுள்ள 40 விழுக்காடு வரும் நிதி ஆண்டில் ரொக்கமாக வழங்கப்படும்.

## *ஆண்டுத் திட்டம்*

132. தமிழ்நாடு தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை முழுவதுமாக எய்தி வந்துள்ளது. நடப்பு நிதியாண்டில், நிதி ஆதார இடர்ப்பாடு இருந்தபோதிலும், ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.5250 கோடி முழுமையாக எய்தப்படும். வரும் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவரோடு நான் கலந்துரையாடிய பின் முடிவு செய்யப்படும். அதை எதிர்நோக்கி அந்த ஒதுக்கீட்டின் அளவு ரூ.5700 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## *நிதி நிலைமை*

133. நடப்பு ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை 1999 மார்ச் திங்களில் அவையில் வைத்த போது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.15,867.78 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18,500.32 கோடியாகவும் இருந்தன. இவ்வாண்டிற்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.16,465.29 கோடியாகவும் வருவாய்க் கணக்கில் செலவு ரூ.20,166.02 கோடியாகவும் அதிகரித்துள்ளன.

134. 1999–2000 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்தப் பற்றாக்குறை ரூ.790.13 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது.

ஆனால், திருத்த மதிப்பீட்டில் அப்பற்றாக்குறை ரூ.159.90 கோடியாகக் குறைந்துள்ளது.

**135.** **2000–2001** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.18,406.17 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.21,564.87 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**136.** **2000–2001** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அனைத்துக் கணக்குகளிலும் நிகரப் பற்றாக்குறை ரூ.667.96 கோடியாக அதிகரித்துள்ளது. இப்பற்றாக்குறையைக் குறைக்க முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## *வணிக வரிகள்*

**137.** இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்குமுன்பு, சென்ற ஆண்டு போல மாநிலத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், வணிகர் சங்கங்கள் மற்றும் தொழில் முனைவோர் சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து, அவர்களுடைய கருத்தினைக் கேட்டுப் பெற்றேன். அவற்றைப் பரிசீலித்து பின் வரும் வரி மாற்றங்களை அறிவிக்கின்றேன்.

மொசைக் கற்கள், செராமிக் சுவர் மற்றும் தள ஓடுகள் மற்றும் பளிங்குக் கற்கள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 3ல் உள்ள செராமிக் துப்புரவுக் கலன்கள், வரிசை எண் 5 ல் உள்ள இஸ்திரிப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீடு மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மற்றும் வரிசை எண் 7 ல் உள்ள அனைத்துவகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.




- முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 6 ல் உள்ள அனைத்து வகை மின்சக்தி பொருட்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- உருளைகள் (bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

மேற்கண்ட பொருட்களின் வரிவிகிதங்கள் அண்டை மாநிலங்களை விட அதிகமாக இருப்பதால் வணிகம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு வரி குறைப்பு செய்யப்படுகிறது. இதனால் வரி இழப்பு ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்படும் வருவாய் மாற்றங்கள் ஆறு மாத காலத்திற்குப் பின் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட பொருட்களில் வரி இழப்பு ஏற்படுமாயின், இவற்றில் தக்க மாற்றம் செய்யப்படும்.

- நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord), அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச் சின்னமில்லாத காய்கறி வத்தல்கள், தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி அறவே நீக்கப்படுகிறது.

- அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- பேஜர்கள், செராமிக் கற்கள் (ceramic bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (bleach liquid) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- மின்வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்பரேசன் போன்ற மின் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை (Maximum Retail Price) ரூ. 29–ம் அதற்கு மேலும் உள்ள மென் பானங்களுக்கான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது.

மேற்கண்ட வரி விலக்குகள் மற்றும் வரி மாற்றங்கள் 1.4.2000–முதல் அமலுக்கு வரும்.

- பரிசுச் சீட்டு விற்பனை மீதான இணக்கவரி செலுத்த வணிகர்களுக்கு இருந்த விருப்பத்தேர்வு ரத்து செய்யப்பட்டு அனைத்து லாட்டரிச் சீட்டு வணிகர்களும் இணக்க முறையிலேயே வரி செலுத்த வகை செய்யப்படுகிறது. இணக்க வரி வீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்படுகின்றன:–

| | தற்போதைய வரி | மாற்றியமைக்கப்பட்ட வரி |
|---|---|---|
| வாராந்திர குலுக்கல் | ரூ.10,000 | ரூ.20,000 |
| மாதமிரு முறை குலுக்கல் | ரூ 15,000/– | ரூ 25,000/– |
| மாதாந்திர குலுக்கல் | ரூ. 25,000/– | ரூ. 40,000/– |
| மாதாந்திர சிறப்பு குலுக்கல் | ரூ. 40,000/– | ரூ. 60,000/– |
| விழாக்கால சிறப்பு குலுக்கல் | ரூ. 60,000/– | ரூ. 1,00,000/– |

- அறை வாடகை தினம் ரூ.200–க்கு மேல் உள்ள தங்கும் விடுதிகள் மீதான 20 விழுக்காடு ஆடம்பர வரி பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (அ) | ரூ. 200–ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 499–வரை அறை வாடகை இருப்பின் | 15 விழுக்காடு |

(ஆ) ரூ. 500–ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 999–வரை அறை வாடகை இருப்பின் — 20 விழுக்காடு (மாற்றமில்லை)

(இ) ரூ. 1000–ம் மற்றும் அதற்கு மேல் அறை வாடகை இருப்பின் — 25 விழுக்காடு

- கேபிள் டி.வி. மீது விதிக்கப்பட்ட கேளிக்கை வரி வசூலை அதிகரிக்கவும், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஒன்றை அளிக்கவும், தற்போது கேபிள் டி.வி. நடத்துபவர்கள் மீது தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கேளிக்கை வரி விகிதத்திற்கு மிகாமல், **உள்ளாட்சி அமைப்புகள் தாங்களே கேளிக்கை வரி விதித்து வசூல் செய்துகொள்ள அனுமதியளிக்கப்படும்.**

- **தற்போது கேளிக்கை வரிச்சட்டப் பிரிவு 4–ன் கீழ் வசூலின் அடிப்படையில் வரி செலுத்தும் மாநகராட்சிப்பகுதி திரையரங்குதாரர்கள், விருப்பப்படின் இணக்க வரி செலுத்த வகை செய்யப்படுகிறது. அவர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் (Gross Collection Capacity) 22 விழுக்காடு 25 காட்சிகளுக்கென கணக்கிட்டு இணக்க வரி வாரந்தோறும் செலுத்தலாம். சிறப்புத்தகுதி நகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள், மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் 21 விழுக்காடு 25 காட்சிகளுக்கு என கணக்கிட்டு வாரந்தோறும் செலுத்தலாம்.**

- **கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு 4–ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள் புதிய திரைப்படங்களின் மீது**

செலுத்தும் கேளிக்கை வரி 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- திரைப்படங்கள் குத்தகை மீதான விற்பனை வரி அறவே நீக்கப்படுகிறது.

- ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேல், ஆனால் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் குறைவாக விற்பனைத்தொகை உள்ள வணிகர்கள், முதல் மூன்று இலட்சம் வரை உள்ள விற்பனை மீது வரி வசூல் செய்திராவிடில், அத்தொகையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி ரத்து செய்யப்படுகிறது.

138. வணிகர்களுக்கு இருக்கும் நடைமுறை சிரமங்களை கருத்தில் கொண்டு பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- வணிகர்கள் பதிவு சான்று பெற விண்ணப்பித்தால் ஒரு வார காலத்திற்குள் சான்று வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.
- பிணை வைப்புத்தொகையும் ஒரே அளவாக அனைத்து வணிகர்களுக்கும் நிர்ணயிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- வணிக உரிமங்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கத் தகுதியுள்ள அனைத்து வணிகர்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- வணிகர்களுக்குத் தேவையான சில படிவங்களை வணிக வரித்துறை அலுவலகத்தில் பெறுவதில் உள்ள தாமதங்களைத் தவிர்க்க வணிகர்கள் தாங்களே அச்சடித்த படிவங்களை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

139. சுயவரி விதிப்புக்குத் தற்போதுள்ள உச்சவரம்பான ரூபாய் 20 இலட்சம், ரூபாய் 1 கோடியாக அதிகரிக்கப்பட்டு,

இத்தொகைவரை மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் அனைவருக்கும் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (chartered accountant) தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில் வரிக் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரி விதிப்பு ஆணை பிறப்பிக்கப்படும். இதில் கணிப்பொறி மூலம் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு செய்யப்படும்.

## *நிதி மேலாண்மை*

140. சிறுசேமிப்பு வசூலின் அடிப்படையில் மத்திய அரசு வழங்குகின்ற நீண்ட காலக் கடன் மாநிலத்தின் முக்கியமான கூடுதல் நிதி ஆதாரங்களில் ஒன்றாகும். சென்ற நிதியாண்டில் ரூ.779 கோடியாக இருந்த இக்கடன் நடப்பு நிதியாண்டில் ரூ.1014 கோடியாக உயர்ந்துள்ளது. சிறுசேமிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சிறுசேமிப்பு இயக்ககம், சேமிப்பு முனைவர்கள் மற்றும் பிற அமைப்புகளின் பணி மேம்படுத்தப்பட்டு, நமது மாநிலத்தில் சிறு சேமிப்பு வசூல் மேலும் அதிகரிக்கப்படும்.

141. நமது மாநிலத்திலிருந்து வெளிநாட்டிற்கு சந்தன மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதி பெறப்பட்ட போதிலும் இவைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து போதிய கேட்பு இல்லாததால் ஏற்றுமதி இதுவரை செய்யப்படவில்லை. ஆயினும், முறையாக இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சந்தன மரம் ஏலம் விடப்பட்டதின் மூலம் சென்ற நிதியாண்டில் கிடைத்த வருவாய் ரூ.27 கோடிக்கு மாறாக நடப்பு நிதியாண்டில் ரூ.70 கோடியாக உயர்ந்துள்ளது. வரும் நிதியாண்டிலும் இதன் மூலம் இத்தகையான கூடுதல் வருவாய் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

142. 1990–ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட பழுப்பு நிலக்கரிக்கான உரியத் தொகையை (Royalty) உயர்த்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசிடம் கடந்த ஓராண்டுக்கு மேலாக வலியுறுத்தி வருகிறது. இருப்பினும், இது குறித்து யாதொரு முடிவும் மத்திய அரசால் இதுவரை எடுக்கப்படவில்லை. மத்திய அரசு நம் கோரிக்கையை ஏற்று விரைவில் முடிவெடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

143. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் அறிவித்தவாறு, தற்போது அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்தி வரும் திட்டங்களை மாநில திட்டக் குழு ஆய்வு செய்து பரிந்துரைகளை அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, இவற்றின் மீது அடுத்த 3 மாதங்களில் அனைத்து துறைகளாலும் முடிவு எடுக்கப்படும்.

144. அரசு நிறுவனங்கள் வெளிச் சந்தையிலிருந்தும், நிதி நிறுவனங்களிலிருந்தும் பெறும் கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளித்து வருகிறது. 31–3–1999 நிலவரப்படி ரூ.6180 கோடி நிலுவையாக உள்ள கடன்களுக்கு நம்மாநிலத்தில் அரசு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய உத்தரவாதங்கள் மாநில அரசின் நிதிநிலையைப் பாதிக்கும் சாத்தியக்கூறு இருப்பதால், இந்திய ரிசர்வ் வங்கி நியமித்த வல்லுநர் குழு அளித்துள்ள பரிந்துரைகளை ஏற்று இத்தகைய உத்தரவாதங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 293(1)–ன் கீழ் இந்தக் கூட்டத் தொடரில் தீர்மானம் இயற்றக் கருதப்பட்டுள்ளது.

145. மாநில அரசு தற்போது செயல்படுத்தி வரும் பல்வேறு மானியத் திட்டங்களின் பயன்கள் அத்திட்டங்களின் கீழ் தகுதிவாய்ந்தவர்களுக்கே சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களின் செயலாக்கம் சீரமைக்கப்படும்.

146. உத்தேசிக்கப்பட்டுள்ள வரி மாற்றங்களின் விளைவுகளை கணக்கில் கொண்டபின் வரவு–செலவு இறுதி பற்றாக்குறை ரூ.665 கோடியாக இருக்கும். நிலுவை வசூலை அதிகரித்தல் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மூலம் இப்பற்றாக்குறையை ஈடு செய்ய கருதப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு. அதுபோல, அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு. எனவே, இம்மன்றத்தின் அகத்தும் புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துக்களையும், அறத்தை அணிசெய்யும் ஆலோசனைகளையும் இவ்வரசு வரவேற்று, அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்றும் உறுதி கூறுகிறேன்"

– என்று 25.3.1971 அன்று, முதலமைச்சராக முதல் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றிய போது நான் குறிப்பிட்டதை, இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்; அதே உறுதியை இப்பொழுதும் வழங்குகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு என்னுடன் ஒத்துழைத்து இடையறாது அரும்பணியாற்றிய நிதித்துறைச் செயலாளர் திரு. பி.வி.ராஜாராமன், இ.ஆ.ப. அவர்களுக்கும் அரசின் அதிகாரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைக் குவிக்கிறேன்.

வணக்கம்

மு.கருணாநிதி,
முதலமைச்சர்.

சென்னை
2000 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 24 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2031,
பங்குனி திங்கள் 11 ஆம் நாள்.

# தமிழரசு

# அரசு செய்தி

படிப்பீர் !

பயன்பெறுவீர் !!

